News paper பக்கங்கள்: 12 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வரு சித்திரை மீ 21 ஆம் உ வெள்ளிக்கிழமை (04 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 7 ஓசை 75

## கட்டுநாயக்காவில் விசேட புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசேட குற்றவியல் புலனாய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது. கள்ளக் கடத்தல், கடவுச் சீட்டு மோசடி, வேறு பல குற்றங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளதாம்.

கள்ளக் கடத்தலை முறியடிப்பதற்கு கடுமையான நடவடிக்கையை எடுக்குமாறும், அரசாங்கத்துக்கு வருமானத்தைத் தரக்கூடிய சுங்கத் தீர்வையைக் கட்டாமல் தப்புகிறவர்கள் தொடர்பாகக் கவனமாயிருக்கும்படியும் ஜனாபதி ஆர். பிரேமதாசா சுங்க இலாகாவுக்கும், மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் சமீபத்தில் பணிப்புரை வழங்கியிருந்தார். அதன் விளைவாகவே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட குற்றவியல் புலனாய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

இவ் விசேட பிரிவு ஒரு ஏ. எஸ். பியின் கீழ் இயங்கி வரு (4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் ராணுவம், பொலிஸ் நடமாடக் கட்டுப்பாடு!

## புலிகள் ராணுவப் பொலிஸ் மாநாட்டில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

**வட பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது முகாம்களிலிருந்து விடுதலைப்புலிகளின் முன் அனுமதியின்றி இஷ்டப்படி வெளியேறமுடியாது. வடபகுதியிலுள்ள பொலிசாரும் குறிப்பிட்ட சில கடமைகளுக்குமட்டும் செல்லலாம் ஆனால் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட முடியாது.**

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இராணுவப் பொறுப்பாளர் பானு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் ராஜன், வலிகாமப் பொறுப்பாளர் கிளி, தென்மராட்சிப் பொறுப்பாளர் சூசை, தீவுப்பகுதி பொறுப்பாளர் ஜேம்ஸ் ஆகியோருக்கும், வடபகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத் தளபதி பிரிகேடியர் நமுனி, யாழ் மாவட்டப் பொலிஸ் அதிபர் ஜீ. கே. ஜெயராஜ் ஆகியோருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தை (4ஆம் பக்சம் பார்க்க)



## தமிழ்மொழித் தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழித் தினத்திற்கான போட்டிகள் பாடசாலை, கொத்தணி, கோட்டம் ஆகிய அடிப்படையில் நடைபெற்று முடிவடைந்துள்ளன. இவைகள் தமிழ்மொழி தினத்திற்கான முன்னோடிப் போட்டிகளையே ஒத்து நிற்கின்றன.

இதனைவிடத் தமிழ்மொழி தினக்கொண்டாட்டங்கள் என்ற வரிசையில் மே மாதம் 8ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் இத்தமிழ் மொழித் தினக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளது.

## கிளிநொச்சியில் உணவு முத்திரை விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள சில கிராமசேவகர் பிரிவுகளில் [illegible]ல் மாதம் நடுப்பகுதியில் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன.

வேறு சில கிராமசேவகர் பிரிவுகளில் இன்னமும் உணவு முத்திரை வழங்கப்படாமல் இருந்து வருகிறது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏப்ரல் மாதம் முதல் ஜனசக்தி திட்டம் அமுலுக்கு வருவதாக [illegible]ந்தது ஆனால் அதுவும் [illegible]ரை நடைமுறைக்கு [illegible]ல்லை. உணவு முத்திரை கிடைக்கவில்லை.

[illegible]ந்த இரண்டு மாதங்க

## நுண்கலை பீடத்திற்கு புதிய கட்டிடம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நுண்கலைபீடத்தில் நிலவும் நெருக்கடியை தவிர்ப்பதற்காக ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒறை நிர்மாணிப்பதற்கான. நடவடிக்கைகளை யாழ் (4ஆம் பக்கம் பார்க்க)

## முருகண்டிக் காட்டினுள் அழுகிய இளம் சடலம்

(கிளிநொச்சி)

முருகண்டியிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் வீதி ஓரத்தினருகே உள்ள காட்டினுள் அழுகிய நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

முருகண்டியிலிருந்து அக்கராயன்குளம் செல்லும் வீதியிலேயே இப் பெண்ணின் சடலம் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

அழுகிய நிலையில் காணப்பட்ட அப்பெண்ணின் சடலத்தைப் பார்வையிட்ட பொது மக்கள் அங்கு அவரின் தேசிய (4-ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையில் குடிகாரர், காதலர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலைக்கு புதிய புதிய தொல்லைகள் வந்து கொண்டிருப்பதாக அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள ஊழியர் சினம் கொள்கின்றனர்.

வெளிநோயாளர் பார்வையிடும் பிரிவில் இப்பொழுது சில காலமாக குடி போதையில் வந்து கலாட்டா செய்பவர்களும், இளம் காதல் சோடிகளின் [illegible]லையும் அதிகரித்து வி[illegible]க ஊழியர்கள் முறையிடுகின்றனர்.

இவ்விருதரப்பினரும் கடந்த காலமாக இந்தப் பக்கத்திற்கே வரப்பயப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது நிலவும் தமக்கு சாதகமான சூழ்நிலையில் வெளி நோயாளர் பிரிவை அசிங்கப்படுத்துவதாக அவர்கள் கூறினர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "ஈ. பி. ஆர். எல். எவ் ஈழ பிரகடனம் சட்ட விரோதம்"

### அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ் செய்த ஈழப்பிரகடனம் தேச விரோதமானது. இதற்கு அவர்கள் தண்டனையையும், அச்செயல் விளைவுகளையும் அனுபவிக்க வேண்டியும்வரும் எனவும் நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் திரு. ரஞ்சன் விஜயரெட்னா தெரிவித்தார்.

யாழ்ப்பாண தபால் புகையிரதத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் சுடப்பட்ட சம்பவம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் இத்தாக்குதலை நடாத்தியவர்கள் ஒரு ஈ. பி. ஆர். எல். எப்.வின் தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸ் அறிக்கைகள் கூறுவதென அவர் தெரிவித்தார்.

மேலும் ஏனைய பயணிகளுக்குத் தேவையான பாதுகாப்பைத் தமிழீழ [illegible] தலைப் புலிகள் வழங்கியதாக அவர் குறிப்பிட்டார். இந்த விவகாரம் பற்றி தாம் ஈ. [illegible] ஆர். எல். எப் குழுவினருடன் பேச இருப்பதாகவும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் இடமளிக்க மாட்டாது எனவும், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் (4ஆம் பக்கம் பார்க்க)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் மெய்வல்

## மாகாணசபை உறுப்பினர்

ல்லை. உணவு முத்திரை கிடைக்கவில்லை.

ந்த இரண்டு மாதங்க உணவு முத்திரை இல் தால் வறிய மக்கள் டாடுகிறார்கள். தினமும் ம சேவகரின் அலுவல த முற்றுகையிட்ட ணம் இருக்கிறார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தர் பரீட்சை

(விசேட நிருபர்)

யாழ். கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கம் நடாத்தும் பரீட்சை இம்மாதம் 6ஆம் திகதி ஞாயிறு காலை 9 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் (21)

## வைரவர் ஆலய வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

ரியாலை அருள்மிகு ஞான ரவர் ஆலய வருடாந்த சவம் தற்போது ஆரம் ாகிச் சிறப்பாக நடை ற்று வருகின்றது.

தினமும் அபிஷேக பூஜை ாதனை இடம்பெறுகிறது. தாம் திகதி சனிக்கிழமை கசுர பூசை நடைபெறும். னோராம் திகதி வெள்ளிக் ழமை வைரவர் சாந்தி டபெறும். (24)

## கொழும்பில் கிரிக்கெட் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத் இருந்து தண்ணீரூற்று, ளியவளை வித்தியா ளையாட்டுக் கழக கிரிக் ட் அணி நாளை ஐந் ம், ஆறாம் திகதிகளில் ாழும்பு மட்டக்குளியில் டைபெறும் அகில இலங்கை யிலான மென்பந்து கிரிக் ட் போட்டியில் கலந்து ள்ளவுள்ளது. (58)



# வம்சாவளியினர் பற்றி இலங்கை இந்தியாவுடன் பேசவேண்டும்!

- செல்லச்சாமி

(கொழும்பு)

இந்தியா திரும்பவிருக்கும் இந்திய வம்சாவளியினரான 100,000 பெருந்தோட்டத் தொழிலாளர் தொடர்பாக இலங்கை அரசு இந்திய அரசுடன் புதிதாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும், ராஜாங்க தொழிலமைச்சருமான எம். எல். செல்லச்சாமி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது மனிதப் பிரச்சினை இது தொடர்பாக புதிய பார்வை அவசியம் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடை நிலைமை கவனத்திற் கொள்ளவேண்டும். இவ்வாறு செல்லச்சாமி தெரிவித்தார்.

நாடு திரும்பவிருக்கும் இந்திய வம்சாவளியினர் தொடர்பாகப் புதிதாகப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டும் என்றும், இது நீண்டகாலப் பிரச்சினையாக விருப்பதால் மனிதநேய அடிப்படையில் அனுதாபத்துடன் இப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று செல்லச்சாமி தெரிவித்தார்.

செல்லச்சாமி தொடர்ந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## உரிமை கோரப்படாத வெளிநாட்டுக் காசோலைகள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் உரிமை கோரப்படாத நிலையில் இருக்கும் பல லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு காசோலைகளை ஆதாரம் காட்டி பெறுமாறு யாழ். பிரதம தபால் அதிபர் பொது மக்களைக்கேட்டுள்ளார். காசோலைகள் பற்றிய விபரங்களை யாழ்ப்பாண பிரதம தபாலகத்தில் அறிந்து கொள்ளலாம் என்றஅவர் இவற்றை பொதுமக்கள் உரிமை கோரப் படாதவிடத்து கொழும்பு பிரதம தபாலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துள்ளார். இக்காசோலைகள் 1987 ஆம் ஆண்டு வன்செயலின் போது உடைத்து வீசப்பட்டவையாகும். (43)

## மினிவான்-சைக்கிள் விபத்து கணவன் மனைவி படுகாயம்

(பருத்தித்துறை)

மினிவான்-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கணவன்-மனைவி பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கணவன் மரணமானார். மனைவி சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்தில் சிக்கிய கணவன் - மனைவி மட்டுவிலைச் சேர்ந்தவர்கள். கணவன் வவுனியாவில் நன்னடத்தை அதிகாரியாகப் பணியாற்றும் சுப்பிரமணியம் கணேசலிங்கம் (வயது 36) மனைவி பருத்தித்துறை நகரசபையில் தட்டெழுத்தாளராகப் பணியாற்றும் திருமதி கணேசலிங்கம் கலாவதி (வயது 34) (25)

## மாகாணசபை உறுப்பினர் சென்னை சிறையில்

(சென்னை)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கடவுச் சீட்டுச் சட்டங்களை மீறிய குற்றத்துக்காக கைதாகி, மட்ராஸ் சென்றல் ஜெயிலில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஓரிஸாவிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கள்ளத்தனமாக வந்து சேர்ந்த 110 பேரைக் கொண்ட ஈ. பீ. ஆர். எல். எவ். குழுவில் முன்னாள் உறுப்பினரும் ஒருவராம் இந்தக்குழுவைச் சேர்ந்தவர்களும் கடவுச் சீட்டுச் சட்டங்களை மீறிய குற்றத்துக்காக பதினைந்து நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த பதினைந்து நாட்களில் ஓரிஸா அகதி முகாம்களிலிருந்து வெளியேறி வந்து சென்னையில் புகலிடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் மெய்வல்லுனர் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இன்று தொழிற்சாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான போட்டி நடைபெறவுள்ளது. இதற்குத் தொழிற்சாலை நிர்வாக முகாமை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நகரசபை மண்டபத்தில் இருந்து பொலிசார் விலகுகின்றனர்

(வவுனியா)

வவுனியா பழைய நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள பொலிஸார் கொஞ்சம் கொஞ்சமாக வேறொரு இடத்திற்கு விலகிச் செல்வதைஅவதானிக்க முடிகிறது.

83ஆம் ஆண்டிற்குப் பின் அவசரகாலச் சட்ட விதியின் கீழ் இக்கட்டடத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்தனர். அவர்கள் அங்கிருந்து விலகிச் சென்றதையடுத்து பொலிஸார் தங்கியிருக்கிறார்கள்.

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான இக்கட்டடம் மீண்டும் நகரசபைக்கு வழங்கப்படவிருக்கிறது. (தி)

# " ஆரோக்கிய நிலையிலிருந்து பின்னோக்கிச் செல்லமுடியாது "

### பல்கலைக்கழகத்தில் மகேந்திரராசா

எமது இளம் போராளிகளின் தியாகத்தால்தான் இன்றைய இந்த மாற்றத்தை உருவாக்க முடிந்தது, எமது விடுதலைப் போராட்டமானது எந்த ஒரு நிலையிலும் பின்னோக்கிச் செல்ல முடியாது. அதேநேரத்தில் இப்பொழுது நாம் அடைந்திருக்கும் நிலையானது ஓர் ஆரோக்கியமான நிலையில்லை என்பதும் நாம் எல்லோரும் சிந்தித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது ஆகவே நாம் தொடர்ந்து அரும் பயணத்தை இறுதி இலட்சியம்வரை எமது பூரண விடுதலையைப் பெறும்வரை முன்னெடுத்துச் செல்லவேண்டும் இதற்கு தமிழீழத்தின் சகல பிரஜைகளும் தங்களின் முழுமையான பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று நேற்று பிற்பகல் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மத்தியில் பேசும் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா கேட்

(4ஆம் பக்கம் பார்க்க)



## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலத்தில் இருக்கும் அரிய நூல்களை தமிழில் மொழி பெயர்க்கக் கூடிய மொழிபெயர் ப் பாளர் க ள் தேவை. வயதெல்லைகிடையாது10-05-1990அன்றுகாலை 9மணிக்கும் 1 மணிக்கும் இடையில் தேவையான தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில்சமுகம்தரவும். திறமை அனுபவம் என்பவற்றுக்கேற்ப சம்பளம் பேசித் தீர் மா னி க் க ப் படும்.

இல. 6, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(அசோகா ஹோட்டலுக்கு எதிராக)

(R/448)


## நன்றியுரை

17.4.90 செவ்வாய்க்கிழமை அன்று புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோயில் அருகாமையில் நடந்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் உண்ணா விரதத்திலும், பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியல் பிரமுகர்களுக்கும், பந்தல் அலங்காரம் அமைத்து தந்த அன்பர்களுக்கும், குடிநீர் வசதி ஒழுங்கு செய்துதந்த சர்வோதய இயக்க அமைப்பாளர் அவர்களுக்கும், சர்வோதய மாதர் சங்கத்திற்கும், பெருங்காடு தையற்பயிற்சி நிலைய மகளிர்கட்கும் ஒலி. ஒளி அமைத்து தந்துதவியவர்கட்கும் மற்றும் அன்று உண்ணாவிரதத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலைநிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு வர்த்தக சங்கமும்,
புங்குடுதீவு தனியார்
போக்குவரத்துச் சேவை சங்கமும்.

B-605

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

விடுதலை வேள்வியில் ஆகுதியான
வீரமறவன் விசைவீரனுக்கு
தீவக மக்களின்

### வீர அஞ்சலி!

ஜனனம் 22 — 06 — 69



வீர மரணம் 22 — 03 — 90

### அ. அருளேஸ்வரன்
### (வீரவேங்கை விசைவீரன்)

விளங்கிடும் காரை வீரனாம் விசையன்
விரும்பிடும் ஈழம் அமைந்திடும் வேளை
களங்கமில் நெஞ்சனாய் கருதிய பணியை
களத்தினுள் ஆற்றி சென்றனன் விசையன்

ஈழ சுதந்திர வேள்வியில் - புலித்
தோழர்கள் தொடக்கிய யாகத்தில்
மலரும் தமிழ் ஈழத்திற்காக
புலரும் பொழுதெல்லாம்
புலிகள் வழி நின்று
புரட்சிகள் புரிந்தனன்

B/857


## யாழ்நகரில் இன்றைய சினிமா

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30, 6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
150ஆவது நாளைநோக்கி வெற்றிநடை போடுகிறது
தினசரி 4.006 .45.9.30
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30 2.30 6.30 10 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

**மனோகரா - (யாழ்**
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
**நீதிதேவன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன் யாழ்**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)

B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-30


## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் – ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் [illegible] எல்லா இலங்கை, இந்[illegible] சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(B.825)

சதுரங்கம் (CHESS)
உங்களுக்கு வசதியான நேரத்தில் சதுரங்கம் விளையாடவோ பழகவோ அல்லது திறமையைமுன்னேற்றவோ அநேகமாக ஆறு மாத காலத்தில் முடிக்கலாம். மேல் விபரத்திற்கு தொடர்பு கொள்ளவும்
JAFFNA CHESS ACADEMY
161, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

(R/449)

### வீடு வாடகைக்கு

மானிப்பாய் மேற்கு நெசவாலை வீதியில் உள்ள வீடு வாடகைக்கு விடப்படவுள்ளது. திருமதி சிவானந்தன் மங்களராணி நெசவாலை வீதி மானிப்பாய் மேற்கு மானிப்பாய்.

(B/606)

## எம்மிடம்

பாடசாலை உபகரணகங்ள்
அன்பளிப்புப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்
பாட்டா பாதணிகள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
எவர்சில்வர் பாத்திரங்கள்
லேஸ், லாஸ்ரிக், நூல் வகைகள்

இவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்:

தலைச் சோடனை
வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
பலவர்ண வாழ்த்து மடல்கள்
தினசரிப் பத்திரிகைகள்
இவைகளை வழங்குவதால் மாணவர் மனதில் நிலைத்திட்ட பெயர்;

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
46, பருத்தித்துறை வீதி,
புத்தூர்.

(B/851)


## தையல் பயிற்சி நிலையம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராம அபிவிருத்திசபையில் இயங்கி வரும் தையல் பயிற்சி நிலையம் சிறப்பாக செயலாற்றி வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

இந் நிலையத்தில் தற்போது முப்பதுக்கும் அதிகமான பெண்கள் தையல் பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த ஐந்து வருடங்களில் இந் நிலையத்திலிருந்து ஏராளமான பெண்கள் தையலில் தேர்ச்சி பெற்று சுய தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

புங்குடுதீவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் இந் நிலையத்திற்கு பெண்கள்—தையல் கற்றுக் கொள்ள வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(22)

## மகாபொல உதவிப்பண கொடுப்பனவுகள்

(7 ஆவது 8 ஆவது தவணைப்பணங்கள்)

பின்வரும் மருத்துவபீட மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்படுகின்றது.

அ. 2-ஆம், 4-ஆம் வருட மாணவர்கள்

07-05-90 — 9.00 — 12 00
08-05-90 — 9.00 — 12-00


## உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE

### 19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்

## பௌசர்களும் ஏமாற்றுகின்றன

புங்குடுதீவு மக்களுக்கு சாட்டியிலிருந்து குடிதண்ணீர் எடுத்து விநியோகிக்கும் பௌசர்கள் சில சமயங்களில் மக்களுக்கு காலை வாரி விடுகின்றன.

குறிப்பிட்ட சில வீடுகளில் உள்ள தொட்டிகளில் தொகையாக தண்ணீர் அடிக்க பௌசர்கள் செல்லும்போது குடம் மற்றும் பாத்திரங்களில் தண்ணீர் வாங்க நிற்கும் மக்கள் ஏமாற்றமடைகிறார்கள். பின்னர் தொட்டிகளில் தண்ணீர் இறைத்து வைத்திருக்கும் வீடுகளில் சென்று கூடிய விலையில் தண்ணீரை வாங்க வேண்டி ஏற்படுகின்றது. (22)


அ. 2-ஆம், 4-ஆம் வருட மாணவர்கள்

07-05-90 — 9.00 — 12 00
08-05-90 — 9.00 — 12-00

1-ஆம் வருட மாணவர்கள் (உதவிப் பணம் மட்டும்)

11-05-90 — 1:30 — 3.00

ஆ. 3ஆம் வருட மாணவர்கள்

04--05-90)
11-05-90)- 9.00 — 12.00
14-05-90)

இ. 5 ஆம் வருட மாணவர்கள்

04-05-90)
07-05-90). 1.30 — 3.00
14-05-90)

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:-

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. 2/- பெறுமதியான முத்திரை
3. உதவிப்பண பதிவேடு
4. தேசிய அடையாள அட்டை

(604) பதிவாளர்



பயிற்சிகள்

3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல.10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B/ 817)



**லிடோ (யாழ்)**

தினசரி 4-00, 6-45, 9-30

பிரபு-அமலா

**பூ பூவா பூத்திருக்கு**

(கடைசி வாரம்)

(B/860)

**ஹரன் - யாழ்**

தினசரி 4·00, 6·45

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்

10·30, 2·30, 6·30, 9·30

கமலஹாசன் - சரண்யா நடித்த

**"நாயகன்"**

75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்

(கடைசி வாரம்)

B/887



**தினசரி பத்திரிகை விற்பனையாளரும், மளிகைச் சாமான் விற்பனையாளரும்**

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெறுவதற்கு

ஒரே ஸ்தாபனம்!

# கவிதா ரேடர்ஸ்

இல. 27, பிரதான வீதி,

**பருத்தித்துறை.**

உரிமையாளர்: சி. சத்தியமூர்த்தி

(B-850)




## • நடைபழக்கி வைப்போம்

அந்தப் பருவத்தை நாமெல்லோரும் கடந்துவிட்டோம். ஆனாலும்- அப்பருவத்தில் நாம் அடைந்த சந்தோஷம் இன்றும் எமது நினைவுகளில் முகம் காட்டும்.

வாழ்க்கையில் மிகச் சந்தோஷமான சோகங்கள் சுத்தமாகப் படியாத பருவம் அது.

காரணமில்லாமல் அழுவோம். அடுத்த வினாடி கலகல வென இதழ்ப் பூ விரித்துச் சிரிப்போம்.

அது குழந்தைப் பருவம்.

அழகிய பருவம்.

இதோ! நம் விழிகள் முன்விரிந்து கிடக்கும் பூமிப்பகுதியில் நெஞ்சில் வஞ்சகம் கொள்ளாமல் ஓடித்திரிகிறார்களே... இவர்கள் நாளைய தலைவர்கள். நம் சமுதாயப் புத்தகத்தில் புதிய தீர்ப்பை வரையப் போகிறவர்கள்.

குழந்தைகளாய்க் குதூகலித்துத் திரிந்த காலத்தில் பெரியவர்களாய் வளரவும் பெரியவர்களாய் வளர்ந்ததன்பின்பு 'குழந்தைகளாய் மாறவும் நாம் விருப்பப்படுகின்றோம்.

குழந்னதகள் தாம் சிறந்த கற்பனைவாதிகள். நிலவைப் பார்த்து அப்பம் என்றும், மேகக்கூட்டத்தைப் பாரத்து மந்தைக் கூட்டம் என்றும், மழைக்காலத்தில் விளக்கின் கீழ் விழும் வண்டினைப் பார்த்து குட்டிக் கார் என்றும் கற்பனை செய்துகொள்கிறார்கள் குழந்தைகள்.

அழுது அழுது அடம் பிடிப்பதற்கும், இனிப்பைக் காட்டிய தன் பின் ஒரு கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறு கையால் அதைப்பெற குழந்தைகளால் மட்டுமே முடிகிறது.

வானத்தில் பறக்கும் விமானத்தைத் தன் கையில் பிடித்துத் தரும்படி குழந்தைகள் அட்டகாசம் செய்கிறாரகள்.

அடடா! அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினைகூட இல்லை.

சாதி, இனம், ஏழை பணக்காரன்! என வேறுபாடுகள் அவர்களிடம் அறவே இல்லை.

உலகத்திலேயே உன்னதமான சங்கீதம் மழலைப் பஷை தான்,

மழலைச் சொல் கேளாதவாகளே யாழையும் குழலையும் இனிது என்கிறாரகள் என்று வள்ளுவர் பாடி வைத்துள்ளார்.

குழந்தைகள் உதடுகளைச் சுழித்துப் பேசும் போதும் அரை வார்த்தைகளால் தமது எண்ணங்களை வெளிப்படுத்தும்போதும் அழகாய் இருக்கும். மனசுக்குள் வீணை மீட்டப்படும்.

பிறந்தவுடன் ஓர் அடி தூரத்தில் உள்ள உருவத்தைக்கூட அடையாளம் காண முடியாமல் தவிக்கும் குழந்தைகள் சற்று வளர்ந்ததன் பின்னர்.

## சிறுகதை

## மண்ணின் மைந்தன்

—மலர் மகள்—



பங்குனி மாத வெய்யில் நெருப்பாய்க் கனன்று கொண்டிருந்தது. வீட்டினுள் இருந்த கமலம் யன்னலூடாக வெளியே பார்க்கிறாள். வெம்மையின் பிடிக்குள் சிக்குண்ட மரங்கள் எதுவித சலனமுமின்றி அசைவற்றிருந்தன. அந்த மருதநிலச் சூழலிலே பனைமரங்கள் பல வீறாப்புடன் நிமிர்ந்து நின்றன.

'மாமி....மாமி...' கண்ணனின் குரலில் ஒருவித பதற்றம் தெரிந்தது. 'என்னடா... என்ன...என்றபடி கமலம் வெளியே வந்தாள்'' அங்கால எல்லாம் ஆமிக் காரங்களும் பொடியளும் வீடு வீடாகச் செக் பண்ணுறாங்களாம். நோட்டீஸ் ஏதும் வைச்சிருந்தால் துவக்கால அடிக்கிறாங்களாம். அதுதான் அம்மா உங்களைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னவா. உங்களைத் தனிய இருக்க வேணாமாம் வரிங்கோ மாமி...கெதியா வாங்கோ' பொத்தான் இல்லாத காற்சட்டையைக் கைகளாற் தாங்கியபடி கண்ணன் செல்கிறான். 'அங்க பாருங்கோ நாய்களெல்லாம் சரியாகக் குரைக்குதுகள்...' பத்து வயது நிரம்பிய அப்பாலகனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவன் பின்னே ஒரு குழந்தையாகிச் செல்கிறாள் கமலம்.

'மாமி....மாமி.....அங்க பாருங்கோ தலையில் கொண்டைபோட்டுக் கறுப்புத்துணியால மூடியிருக்கிறாங்கள். தலையிலே கத்தி வைச்சிருக்கிறாங்களாம். கொண்டைக்குள்ள செருகி வைச்சிருக்கிறாங்களாம். அம்மா சொன்னவ' . அவன் பரபரப்போடு கூறினான். 'சத்தம் போடாமல் வா...அந்தப் பக்கம் பாக்காத...கமலம்அவனுக்குத் தடை போட்டாள்.

கமலம் அவன் பின்னே ஓடுகிறாள். என்ன பிள்ளை .. இவன் என்னை இருக்க விடாமல்க் கூடடி வந்திட்டான்' என்றாள் கமலம்.

'உள்ளுக்கவாங்கோ கதைப்பம். கண்ணன் வீட்டுக்க வாடா...வாய் பாக்காமல் கெதியாய் வாடா...' கண்ணனின் தாய் கலவரப்பட்டுக் கொண்டாள்.

'உள்ளுக்க வாங்கோ என்ன நடக்குதெண்டு தெரியுமே...' கோதாரிப்படுவார் இந்த அநியாயத்துக்கே இங்க வந்தவங்கள். குடியைக் கெடுத்த கோடாலிப் பிடியின்ர கதை போலத் தான் எங்க கதையும். வெள்ளைக் கொடியோட வந்தவங்கள் இப்ப வீட்டுக்கு வீடு கறுப்புக் கொடிகட்ட வைச்சிட்டாங்கள். கொக்குவில்ப் பக்கம் நடந்தது தெரியாதே?'

'கமலாக்கா நீங்கள் வீட்ட இராதேங்கோ. முந்த நாள் ஓரிடத்தில் மகன் புலியில இருக்கிறானெண்டு தகப்பனைச் சுட்டவங்களாம். இது எல்லா இடத்துக்கும் பரவலாய் வரப்போகுது. எதுக்கும் நீங்கள் இவங்களின்ர கண்ணில படாமல் இருக்கிறது நல்லது'. என்றாள் கண்ணனின் தாய்.

'நீ சொல்லுறதும் சரிதான் பிள்ளை....பாப்பம்...' என்றபடி கமலம் தன் வீடு நோக்கி நடக்கிறாள். பாதையிலே தெரிந்த வாய்க்காலில் ஆங்காங்கே நீர் தொட்டந்தொட்டமாக தேங்கி நின்றது. முரளி ஆறேழு வயதுப் பொடியனாய் இருக்கும்போது இந்த வாய்க்காலில் நீச்சலடித்துக் குளிப்பதும் கமலம் தடியுடன் வருவதைக் கண்டு மதகின் கீழே ஒழிப்பதும் அடிக்க மாட்டன் எண்டு சொன்னால்த்தான் வெளியில் வருவன் என்று சொல்லி அவளை வெருட்டுவதுமான இறந்தகால நிசழ்வுகள் அவள் மனதில் நிழலாடியதும்.. என்ர குஞ்சு இப்ப...எந்தக் காட்டில எந்தமேட்டில இருக்கிறானோ ...அவனின் நிகழ்கால நிதர்சனத்தை கற்பனை பண்ணக் கூட அவள் மனம் மறுத்தது, நெஞ்சம் உருகியது. விழிகளினோரம் கண்ணீர் கனத்தது. அவள் நெஞ்சுக்குள்ளே அழுது கொண்டாள்.

கேற்றைத் திறந்த கமலம் திடீரெனத் தளர்ந்தாள். பூட்ஸ் சுவடுகள் பரவலாக முற்றத்து மணலில் பதிந்திருந்தன. வளவின் பின்பக்கம் எட்டிப் பார்த்தாள். ஐந்தாறு இந்திய இராணுவத்தினருடன் தலையிலே சிவப்புப் பட்டி அணிந்த அதிகாரிகள் பலர் தென்னை மரங்களின் மேலும் தென்னை மரங்களின் கீழும் அமர்ந்திருந்தனர்.

கமலத்தைக் கண்டவுடன் சிவப்புப்பட்டியணிந்த ஒருவன் துள்ளிப் பாய்ந்தபடி துப்பாக்கியுடன் வந்தான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் வந்தார்கள்.

'உன்ர மகன்தானே முரளிதரன்' எருவன் கேட்டான்.

உன்ர மகன்தானேடி முரளீதரன்' மற்றவன் கேட்டான்.

,என்ன பேசாமல் நிக்கிற அவன் புலி முரளி' உன்ர மகன் தானேடி இன்னொருவன் கேட்டான். கமலம்நிலை குலைந்தாள். கணநேரத்தினுள்த் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவள் என் மகன் தான் முரளி என்றாள். அவன் இப்ப எங்க' ஒருவன் கேட்டான்.

'எனக்குத் தெரியாது' அவன் என்னைவிட்டுக் காட்டுக்குப் போய் ஆறு வருஷமாகுது. அவன் எங்க இருக்கிறான் எண்டது எனக்குத் தெரியாது' கமலம் அழுத்தமாகக் கூறினாள்.

ங்அ......தலையை ஆட்டியபடியே ஒ[illegible]வன் செருமிக் கொண்டான். அவனது கோழைத்தனம் அச் செருமலினூடே நன்கு தெரிந்தது'. என்னக் குறுக்கிட்டான் ஒருவன். 'வீட்டைத் திற செக்கிங்' கூறிக் கொண்டே அவன் சென்றான்.

வீட்டினுள் நுழைந்தவர்கள் முதலில் சுவரில் மாட்டியிருந்த முரளியின் அப்பாவின் படத்தைத் துப்பாக்கியால் சுட்டார்கள். கண்ணாடித் துண்டுகள் கலீரென நிலத்திற் சிதறியது. ஒருவன் கதிரைகளைத் தூக்கிச் சுவரில் மோதி எறிந்தான். வீட்டை குதறி குப்பை ஆக்கினார்கள். வந்த அனைவரும் தமது வீர்த்தனத்தைக் காட்டிவிட்ட வீறாப்புடன் வீட்டைவிட்டு வெளியேறினார்கள்.

'நாளைக்கு எட்டு மணிக்கு உன்ர மகன் இந்த இடத்தில் இல்லையெண்டால் நீயும் சரி உன்ர வீடும் சரி' அட்டகாசமான அவலட்சமான அபிநயத்துடன் கூறிவிட்டுச் சென்றார்கள்.

கமலம் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். எங்கே போவது? என்ன செய்வது ஒன்றுமே புரியாத போக்கில் அவள் நடந்தாள். பரந்தனில் இருந்து அவளை ஏற்றிய பஸ் புறப்படடது. ஆனையிறவில் வாகனங்கள் வரிசையில் நின்றன. செக்கிங் நடக்குதாம். இந்தியாவில இருந்து பொம்பிளை ஆமியளும் வந்திருக்கினமாம். பொம்பிளையளையும் செக் பண்ணுறாளாம்' பிரயாணிகள் கூட்டத்திலிருந்து வந்த செய்திகள் கமலத்தின் செவிப்பறையை உலுப்பியது. பெண்படைப் பிரிவிடம் பெண் பிரயாணிகள் வரிசைளாகச் சென்று கொண்டிருந்தார்கள். கமலம் தனித்து நின்றாள். அவளின் உடலிற்பட்ட ஆயுதம் தேடும் கருவி.கிரீச் கிரீச் என ஒலியெழுப்பியது. கமலம் நடுநடுங்கினாள். ஏய் பொம்மீஸ்.....இராணுவத்தைச் சேர்ந்த ஒருத்தி உரத்துக் கத்தினாள். பக்கத்தில் நின்றவள் கையினால்த் தடவிப் பார்த்தாள்.

'சீ...இதென்ன கேவலம் கெட்ட சீவியம். அவள் உள்ளூரவேதனைப்பட்டுக்கொண்டாள். பஸ்யாழ்ப்பாணத்தை அடைந்ததும் நெடுந்தீவுக்குப் போகலாமெனக் கமலம் முடிவெடுத்தாள்.குறிகாட்டுவான் கரையில் குமுதினிப் படகிற்காகக் காத்துக் கொண்டிருப்போருடன் கமலமும் இணைகிறாள். கடல் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன. இனம் புரியாத ஓர் உண[illegible]ால் அவளின் உள்ளம் அலை மோதுகின்றது.

மோட்டார்ச் சைச்கிளில் வந்த இரண்டு இளைஞரகள் கண்ணீர் அஞ்சந்த் துண்டுப் பிரசுரங்களை ஆங்காங்கு ஒட்டுகிறார்சள். படகிற்குக் காத்து நின்ற பயணிகள் பரபரப்புடன் அவற்றை வாசிக்கிறார்கள். கமலமும் வாசிக்கிறாள். 'இந்திய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் உயிர் நீத்த எமது போராளி மேஜர் ரூபன் (முரளீதரன்) அவர்களுக்கு எமதுவீரஅஞ்சலி.தொடர்ந்து வாசிக்கமுடியாமல்... 'ஐயோ என்ரை மகனே' என்றபடி கமலம் நிலைகுலைய ஆரம்பிக்க பக்கத்தில் நின்றவர்கள் அவளைத் தாங்கிக் கொண்டார்கள். □

## மருத்துவபீடம்

களப்புற்றுநோய்க்கு இன்னுமொரு முக்கிய காரணம் வெற்றிலை, புகையிலை, பாக்கு சப்புதலாகும். களப்புற்று நோயாளரில் 77% வெற்றிலை சப்புபவர்களே. எனவே வெற்றிலை சப்புவதைத்



## நிகழ்காலத் தேவை

குழந்தைகள் உதடுகளைச் சுழித்துப் பேசும் ... வார்த்தைகளால் தமது எண்ணங்களை வெளிப்படுத்தும் போதும் அழகாய் இருக்கும். மனசுக்குள் வீணை மீட்டப்படும்.

பிறந்தவுடன் ஓர் அடி தூரத்தில் உள்ள உருவத்தைக்கூட அடையாளம் காண முடியாமல் தவிக்கும் குழந்தைகள் சற்று வளர்ந்ததன் பின்னர்.

ஆடுகளையும் – மாடுகளையும்

கோழிகளையும் - குருவிகளையும்

மரங்களையும் - கொடிகளையும் நோக்கி கண் சிமிட்டிப் பார்க்கும் போது இதயத்தில் இனிப்புப் பரவும். அள்ளி முத்தமிட ஆர்வம் ஏற்படும்.

ஆனால்—

குழந்தைகள் வளரும்போது, அவாகளுடன் இணைந்து சில மிருகத்தனங்களும் வளர்த்துவிடுகின்றன. சிலர் பெற்றார்கள் அவற்றை குழந்தைகளின் மனதில் வளர்த்து விடுகிறார்கள்.

அறிவு கொஞ்சம் வளர்ந்த பின்புதான் குழந்தைகளால் ஆணையும், பெண்ணையும் இனம் காண முடிகிறது என்று பிராய்டிஸம் சொல்கிறது.

—இது அகக் காரணம்

ஆனால்—

குழந்தைகளுக்கு மனவளர்ச்சி ஏற்படும் முன்னரேயே நாம் பல வேறுபாடுகளைச் சொல்லிக்கொடுத்து விடுகிறேரம்.

—இது புறக் காரணம்:

எம்மில் தப்பில்லையே...... நாம் அப்படித்தானே வளர்க்கப் பட்டிருக்கின்றோம்.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்களாக மட்டுமல்ல; வீரர்களாகவும் சிறுமை கண்டு பொங்கும் சிறுத்தைகளாகவும் வளரப் போகிறார்கள்.

அந்நிய ஆட்சியாளர்களின் மிரட்டல்களுக்கும், ஆதிக்க வெறியர்களின் அட்டுழியத்திற்கும் அடிபணிந்து பேரக மாட்டார்கள் என்று நம்ப முடிகிறது.

பிரியத்திற்குரிய பெற்றோர்களே!

துணிச்சல் உள்ள குழந்தைகளை நேரக்கி 'முடக்கு இலுப்பையருகில் பேய்ஓட்டம் உண்டு என்றும், நேரத்திற்கு நித்திரை செய்யாத பிஞ்சுப் பிள்ளைகளை நோக்கி. கடவுள் வந்து கழுத்தைத் திருகுவார் என்றும் மிரட்டி வைக்காதீர்கள்.

உண்ணாமல் அடம்பிடித்துக்கொண்டிருக்கும் குழந்தைகளை உண்ண வைப்பதற்காக, பிசாசுக் கதை கூறி அச்சம்பட வைக்காதீாகள்,

அலுவலகத்தில் அதிகாரிகள் உங்கள்மீது கொண்ட கோபத்தை வீட்டில் உள்ள குழந்தைகளை உதைப்பதன்மூலம் பழி தீர்த்துக்கொள்ளாதீர்கள்.

பிள்ளைகள், வெள்ளையானவர்கள் அவர்கள் அன்புடன் அடுக்கடுக்காக கேட்குங் கேள்விகளுக்கு ஆறுதலாகச் சிந்தித்துப் பதில்சொல்லுங்கள்!

குழந்தைகளின் உடல் வளாச்சியுடன் உளவளர்ச்சியையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

'பாதகம் செய்பவரைக் கண்டால்
நீ பயங்கொள்ளாது பாப்பா.
மோதி மிதித்துவிடு பாப்பா.
அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'

–என்று– கரும்பு வார்த்தைகளால் பாடிவிட்டுப் போன அந்த விடுதலைப் பாவலனின் கருத்துக்களை நாம் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுப்போம்.

நாளைய ஈழத்தின் நாயகர்களுக்கு அல்லது நாயகிகளுக்கு நாம் இன்றே நடைபழக்கிவிடுவோம்.

இன்னும்......

# மருத்துவபீடம்

## வடமாகாண மக்களை அதிகமாகப் பாதிக்கும் புற்றுநோய்....

□ டொக்டர் எம். கே. முருகானந்தன்

வடமாகாண மக்களை மிகவும் அதிகமாகப் பீடிக்கும் புற்றுநோய் களப்புற்று நோய் தான் என்பது புள்ளிவிபரங்கள் மூலம் மிகவும் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. களம் (Oesophagus) என்பது உணவுக் கால்வாயின் ஒரு பகுதி வாயையும் வயிற்றினுள் இருக்கும் இரைப்பையையும் இணைக்க, நெஞ்சுப் பகுதியூடாகச் செல்லும் உணவுக் கால்வாயே களம் எனப்படுகிறது.

இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது வடமாகாணத்தில் களப்புற்று நோய் 30% அதிகமாகக் காணப்படுகிறது: களப்புற்று நோய் மாத்திரமின்றி ஏனைய புற்றுநோய்களும் கூட வடமாகாணத்திலேயே மிக அதிகமாகக் காணப்படுகிறது.

ஆய்வின் போது கணக்கிலெடுக்கப்பட்ட களப்புற்று நோயாளர்களில் அரைவாசிக்கு அதிகமானோர் யாழ்ப்பாணப் பட்டினத்தை அண்டிய வட்டுக்கோட்டை, சங்கானை, மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய், சோண்டாவில், கைதடி ஆகிய பகுதியிலேயே காணப்பட்டனர்.

குடாநாட்டில் கிடைக்கும் நீரின் உவர்த்தன்மை மிக அதிகமாக இருப்பது இதற்குக் காரணமாயிருக்கலாம் என நம்பப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனத்தின்(W. H. O) பரிந்துரைப் படி குடிநீரின் குளோரைட்டின் அளவு 600Mg/லீட்டர் ஆக இருக்க வேண்டும். ஆனால் குடாநாட்டில் குளோரைட்டின் அளவு 3000 முதல் 5000Mg/L வரை அதிகமாயிருக்கிறது. குடாநாட்டின் உவர் நீர் ஏரிகளை நன்னீராக்கும் முன்னைய திட்டம் செயற்படுத்தப்பட்டால், எமது பகுதி நீரின் குளோரைட் அளவிலும் அதன் பயனாக புற்று நோயாளரின் தொகையும் குறையக்கூடும்.

இதேபோல நீரில் உள்ள நைற்ரைட் (Nitrite) இன் அளவிற்கும், புற்றுநோய்க்கும் உள்ள தொடர்பும் நன்கு தெரிந்ததே. புற்றுநோயாளர் அதிகம் இருக்கும் பகுதிகளிலுள்ள நீரில் நைற்ரைட்டின் அளவு, உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதித்துள்ள 45Mg/லீட்டரை விட மிக அதிகமாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே தான் குடாநாட்டில் களப்புற்று நோய் மிக அதிகமாகக் காணப்படுவதற்கு நீரிலுள்ள நைட்ரைட்டின் அளவு ஒரு முக்கிய காரணமாகக் கணிக்சப்படுகிறது.

நைற்ரைட்டின் அளவைக் குறைப்பதற்கு செயற்கை உரங்களின் பாவனையைக் கட்டுப்படுத்தி, இயற்கை உரங்களை உபயோகிப்பது ஊக்கப்படுத்த வேண்டும், அத்துடன் தோட்டங்களிலும் அதற்கு அண்மையிலுள்ள கிணறுகளிலிருந்தும் குடிநீர் பெறுவதைத் தவிருங்கள்.

வெற்றிலை, புகையிலை, பாக்கு சப்புதலாகும். களப்புற்று நோயாளரில் 77% வெற்றிலை சப்புபவர்களே. எனவே வெற்றிலை சப்புவதைத் தவிர்த்து களப்புற்று நோயிலிருந்து தப்புங்கள்.

புகைப்பவர்களிடமும், ரூபா 1000/- குறைந்த வருமானம் மாத்திரம் பெறுபவர்களிடமும், போஷாக்கான உணவு உட்கொள்ளாதவர்களிடமும் களப்புற்று நோய் அதிகமாகக் காணப்படுகிறது. போதிய அளவு புரத உணவு உட்கொள்ளாதவர்களிடையேயும், காய்கறிவகைகளையும் முக்கியமாகப் பசுங்கீரை, இலை வகைகளை உட்கொள்ளாதவர்களிடையேயும், பழவகைகளை போதிய அளவு உட்கொள்ளாதவர்களிடையேயும் களப்புற்றுநோய் அதிகம் காணப்பட்டது. விலையில் குறைந்ததும், நல்ல ஊட்டச்சத்து மிக்கதுமான பப்பாசிப் பழத்தை உணவில் அதிகம் சேர்ப்பது நல்லது.

எனவே பப்பாசி மரமும், கீரை வகைகளும், பயறு, பயித்தை போன்ற காய்கறி வகைகள் அடங்கிய ஒரு வீட்டுத் தோட்டத்தை உருவாக்குங்கள். அதற்கு இயற்கை உரங்களையே போடுங்கள். அதில் விளைபவற்றை நிறைய உட்கொள்ளுங்கள். இதனால் நீங்களும், உங்கள் சந்ததியினரும் புற்றுநோயிலிருந்து தப்ப வாய்ப்பிருக்கிறது.

எல்லாம் சரி களப்புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பது எப்படி என்கிறீர்களா? முக்கிய அறிகுறி உணவு உட்கொள்ளும்போது நெஞ்சில் ஏற்படும் தடைதான். ஆரம்பத்தில் சோறு, புட்டு போன்ற உணவுகளை நீங்கள் உண்ண முடியாது நெஞ்சில் தடை ஏற்படும். பலதரணங்களில் தண்ணீர் குடித்தே உணவை உட்செலுத்த வேண்டியிருக்கும். பின் மெதுமையான உணவுகளுக்கும் இறுதியில் நீராகாரத்திற்குக் கூட தடை ஏற்படும் எனவே உணவு விழங்குவதில் ஏதும் சிரமமிருந்தால் உடனடியாக வைத்தியரை அணுகுங்கள். □




## நிகழ்காலத் தேவை

- எம். எல். எம். அன்ஸார்.

விடியலின் தாகம்
விழிகளுக்குள்;
கடந்துபோன நிகழ்வுகள்
இதயத்தின் மீது
நெருப்புக் கட்டிகளாக
நிற்கின்றன.

சுதந்திர அவசியத்தை
சுட்டிக்காட்டிய போது
இராணுவ தண்டனைகள்
தரப்பட்டன.
உண்டான காயங்களை
உள்ளத்தில் சுமந்து
துப்பாக்கி முனையால்
தொட்டுக் காட்டினோம்,
அதனால்தான்
மண்ணின்
நிகழ்காலத் தேவைகளை
வழங்குவதற்காக
வாய்ப்புப்பார்க்கிறார்கள்.

காலம் என்பது
போராட்டக் காரனின்
தோளை -
தட்டிக் கொடுத்து
தைரியம் சொல்கிறது.
அப்போதே -
அடக்குமுறைச் சதி
தன் -
முரட்டு ஆயுளை
முடித்துக் கொள்கிறது.

எழுவோம் -
வேட்கையின் தாகத்தை
தணித்துக்களிக்கின்ற
நிரம்பிய சுதந்திரத்தை
மண்ணுக்கும் மக்களுக்கும்
அள்ளிக் கொடுக்கின்ற
அந்தநாள் வரும்வரைக்கும்
ஏந்திய துப்பாக்கிகளை
கீழே -
இறக்கமாட்டோம் என்று
அடம்பிடிப்போம்! □

# தரிசனம்

நூல்: **ஈழத்து இசை நாடக வரலாறு**
ஆக்கியோன்: காரை. செ. சுந்தரம்பிள்ளை
வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம்
விலை: 50 ரூபா

ஈழத்து இசை நாடக வரலாறு என்ற நூலினை காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூலானது நூற்றிமுப்பது பக்கங்களைக் கொண்டது. இந்நூலை நடிப்புலக மாமேதை நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார் ஆசிரியர்.

இந்நூலினது ஆக்கத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களுள் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களும் ஒருவராவர். இவர் ஈழத்திலே சிறப்புற்று விளங்கிய இசை நாடகக் கலைஞர்களுள் முதன்மை பெற்று விளங்கியவர்.

இந்நூலானது ஆறு பிரதான அத்தியாயங்களாக அமைந்துள்ளது. **முதலாவது** அத்தியாயம் இசை நாடக வருகையின் போது ஈழம். **இரண்டாவது** அத்தியாயம் ஈழத்தில் இந்தியக் கலைஞர்களும் இசைநாடகமும். **மூன்றாவது** அத்தியாயம் இசை நாடகமும் இலங்கைக் கலைஞர்களும். **நான்காவது** அத்தியாயம் இசை நாடகத்தின் மறுபக்கம். **ஐந்தாவது** அத்தியாயம் இசைநாடக அரங்கம். **ஆறாவது** அத்தியாயம் சிங்கள இசை நாடகங்கள் ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் சிறந்த கவிஞர் மட்டுமல்லாது, எழுத்தாளராகவும் சொற்பொழிவாளராகவும் மிகச் சிறந்த நாடக ஆசிரியராகவும் நாடகத் தயாரிப்பாளராகவும் ஆய்வாளராகவும் உரையாசிரியராகவும் நடிகராகவும், விரிவுரையாளராகவும் நிருவாகியாகவும் ஆசிரியராகவும் விளங்குகின்றார்.

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு பற்றி முழுமையான நூல் இதுவரை வெளிவரவில்லை. இருந்தாலும் ஆங்காங்கே சில தமிழ் அறிஞர்கள் கால அடிப்படையில், ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறுகள் பற்றி பல்வேறு கட்டுரைகள் எழுதியுள்ளார்கள்.

ஒரு சில புத்தகங்களும் வெளிவந்தன. இந்த வகையிலே ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி என்ற நூலினை வித்துவான் க. சொக்கலிங்கம் எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல் ஆறு பிரதான இயலாக வகுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளமை மிகவும் பாராட்டத் தக்க விடயமாகும்.

ஈழத்து நாடக வரலாற்றுலே இசைநாடகங்களும் முக்கியமான ஒன்றாகும். இதனை காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் முதன்மைப்படுத்தி ஆராய்ந்துள்ளமைமிகவும் வரவேற்கத் தக்க விடயமாகும். இந்நூலிலே ஆசிரியர் இந்நூல் உருவாக்கத்திற்குரிய காரணம் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 1968ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்ற போது, டி. கே. எஸ். சகோதரர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்கும், கவிஞர் அம்பிக்கும் கிடைத்தது.'

உரையாடலின் போது அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் தமது ஈழத்து நாடக அனுபவம் பற்றிய பல தகவல்களைக் கூறினார். அந்தக் காலத்தில் இலங்கையில் இசைநாடகக் கலைஞர்களுக்கிருந்த மதிப்பு அளப்பரியதென்றும் இரசனையில் ஈழத்தவர்கள் தமிழகத்தை விட மேம்பட்டவர்களென்றும் புகழ்ந்துரைத்தார். மேலும். அவர் தமது நாடக வாழ்க்கையை ஒரு நூலாக. எழுதி வெளியிடப் போவதாகவும்' அவ்வாறே ஈழத்து இசை நாடகவரலாற்றையும், யாரேனும் எழுதுவார்களேயானால் பயனுடையதாகவிருக்குமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் ஆசிரியர் தமது உரையில் 1976/1978ஆம் ஆண்டுகளில் நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பை மேற் கொண்டிருந்தேன். பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மேற்பார்வையில் ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டிய அவசிய மேற்பட்டது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, ஈழத்து இசை நாடக வரலாற்றைஆராய்ந்து ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தேன். கட்டுரையை மேற்பார்வை செய்த பேராசிரியர் அவர்கள் அதனை நூலுருவில் உடனடியாக வெளியிடும்படி ஆலோசனை கூறினார். அக்கட்டுரையின் சுருங்கிய புதிய வடிவமே இந்நூலாகும்' என ஆசிரியர் குறிப்பிட்டமை மனங் கொள்ளத் தக்கது.

இந்நூலிலே ஆசிரியர் தமிழ் மக்கள் மத்தியில் இசை நாடகங்கள் வளர்ச்சி பெற்ற அதே காலகட்டத்தில், சிங்கள மக்கள் மத்தியிலும் 'நூர்த்தி' என்னும் பெயரில் இசை நாடகங்கள் வளர்ச்சி பெற்று வந்தமையினால் நூர்த்தி நாடகங்களும் இந்தியக் கலைஞர்களின் தொடர்பினால் வளர்ந்த வகையினைப் பற்றி, இந்நூலில் கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்நூலானது ஈழத்து தமிழ் மக்களிடையே காலங்காலமாக பேணப்பட்டு வந்த இசை நாடக மரபினைப் பற்றியும், இம் மரபுகள் எவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் பேணப்பட்டன, இவை நாடகத்தின் தன்மை போன்ற இன்னோரன்ன அரிய விடயங்களைத் தாங்கி வெளி வந்துள்ளது.

வண்ணை ப. கணேசலிங்கம் (B. A. Hons)

**முதலாவது** அத்தியாயத்திலே இசை நாடக வருகையின் போது ஈழம் இருந்த நிலை பற்றி விபரிகிறார். இந்தியாவில் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த காலத்தில், இசைநாடகங்கள் இங்கே (ஈழத்தில்) கொடிகட்டிப் பறந்துள்ளன, ஆசிரியர் குறிப்பிடுகின்றார். **இரண்டாவது** அத்தியாயத்தில் ஈழத்தில் இந்தியக் கலைஞர்களும் இசைநாடகமும் என்ற தலைப்பில்ஆய்வுசெய்யப்பட்டுள்ளது இந்தியக் கலைஞர்கள் ஈழம் வர முன்னர், ஈழத்தவர்களுக்கென்றொரு தனித்துவமான இசை, நாடகமரபு பேணப்பட்டிருந்தது. என்றாலும் இது பற்றி விரிவாக ஆய்வுகள் செய்யப்படவில்லை. இவ் அத்தியாயத்திலே ஆசிரியர் இந்திய நாடகக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்த வரலாற்றை மூன்று பெரும் காலப் பிரிவுகளாகப் பிரித்து நோக்குகின்றார்.

**மூன்றாவது** அத்தியாயத்திலே ஆசிரியர் இசை நாடகமும் இலங்கைக் கலைஞர்களும் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவ்வத்தியாயத்தில் இந்தியக் கலைஞர்களது இசை நாடகங்களின் கவர்ச்சியினால் ஈழத்திலே இம் மரபு வளர்ச்சியடைந்தது எனக் குறிப்பிடுகின்றார். இசை நாடகத்திலே ஈடுபட்ட இலங்கைக் கலைஞர்களைப் பற்றியும் அவர்து பங்களிப்பினைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

**நான்காவது** அத்தியாயத்தில் இசை நாடகத்தின் மறுபக்கம் பற்றிக் கூறப்படுகின்றது. இதில் யாழ்ப்பாணத்தில் இசை நாடகங்கள் அறிமுகமானபோது சாதிக்கட்டுப்பாடு மிகவும் வன்மையாக இருந்ததென்றும், இசைநாடகங்களின்வருகையால், தாழ்த்தப்பட்ட மக்களது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்ததென்றும், உயர் சாதியினர் ஆடிய இசைநாடகங்களை, ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்தே பார்த்துப் பயன் பெற்ற இம் மக்கள், இசை நாடகங்களைத் தாமும் கற்று ஆடத் தொடங்கியதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதியில் ஈழத்திலும் இந்தியாவிலும் கூத்து ஆடுபவர்களுக்கு அக்காலத்து சமூகத்திலே கொடுக்கப்பட்ட அந்தஸ்துகளையும் ஆசிரியர் விபரிக்கின்றார்.

**ஐந்தாவது** அத்தியாயத்திலே இசை நாடக அரங்கம் என்ற பகுதியினை மூன்று உப பிரிவுகளாக அதாவது அரங்கேறிய முறை, சுவையான சில தகவல்கள், மேலும் சில தகவல்கள் என வகுத்து நோக்கியுள்ளார். இறுதி அத்தியாயமாகிய ஆறாவதில் சிங்கள இசைநாடகங்கள் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில், ''சிங்கள இசை நாடகங்கள் 'நூர்த்தி'' என அழைக்கப் படுகின்றது எனவும் இந்நாடகங்களின் தோற்றத்தினை புதுப்புது நாடக நடிகர்களும் நடிகைகளும் தோன்றினார்கள் என்றும் நடிப்பையே தொழிலாகக் கொண்ட பல நடிகர்கள் உருவாகினர் எனவும் கூறியுள்ளார். இந் நாடகங்கள் இலங்கையிலே மறைவதற்கு சினிமாப் படங்கள் பிரபல்யமடைந்தமையே இதற்குக் காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார். இசை நாடகங்களின் வருகைஈழத்து நாடகவுலகில் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தியது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்து இசை நாடக வரலாறு என்ற நூலின் இறுதியம்சங்களாக, இந் நூலாக்கத்திற்கு உதவிய நூல்களின் விபரங்களையும் மலர்களையும் குறிப்பிட்டதோடு, ஈழத்திலே நாடகத் துறையிலே பாண்டித்தியம் வாய்ந்த கலைஞர்களையும் தனது சக நண்பர்களையும் அவர்களது பெயர், முகவரி, வயது, சந்தித்த திகதி அவர்களைப் பற்றிய விசேட குறிப்புக்களையும் சேர்த்துள்ளமை ஆசிரியருக்கு கலைஞர்களிடையேயும், கலை பற்றிய அறிவிலும் கொண்டிருந்த ஈடுபாட்டினை நன்கு கணிப்பிட உதவுகின்றது. நூலின் இறுதியிலே ஈழத்து இசை நாடக வரலாறு என்ற விடயம் சம்பந்தமாக தான் குறிப்பிட்டுள்ள கலைஞர்கள் பற்றிய விபரங்களையும், நாடகங்களையும், நாடக சபைகளும், குழுக்களும், மடுமங்களும் என்பன பற்றிய விபரங்களையும் அகர வரிசைப்படுத்தியமை மிகவும் பயன்பாடுள்ள அம்சமாகும்.

இந்நூல் ஈழத்து இசை நாடக வரலாறு பற்றி அறிய விளைவோருக்கு ஓர் முன்னோடியாக அமைந்துள்ளது. இந்நூலினைப் பற்றி அறிமுகம் செய்வதில், அவரிடம் இந்து நாகரிகம் பாடத்தினைக் கற்ற மாணவர்களுள் ஒருவன் என்ற வகையிலும் பெருமை அடைகிறேன்.

□

# அழகியற் கலைகளும் சமூக ஒருமைப்பாடும்

நமது முன்னோர்கள் நமக்களித்த நுண்கலைச்செல்வங்களையே அழகியற் கலை என்கின்றோம். இக் கலை வரிசையில் ... துமே இசையின் இனிமையில் கட்டுப்பட்டு நிற்கும் என்பதை பண்டைய இலக்கிய நூல்கள் வாயிலாகவும், ஏன் கண்கூடாகவும் நாம் காண்கின்றோம். மதங்கொண்ட யானையின் ... கள், சீவராசிகள், இயற்கையாய் அமைந்த பௌதீகசூழல் அத்தனையுமே ஆடாமல் அசையாமல் மயங்கிக் கிடந்தன எனவும் அவ் இசையில் ... விளங்குவது இசைத் தமிழ், மக்கள் உணர்வினை இசைய வைப்பதால் இது இசை என ஆயிற்று அழகியற் கலைகள் பலவுளவாயினும் தலையாய நிலையில் நிற்பது இசையும் நடனமும் எனக் கண்டோம்.

கம்பன் இராமாயணத்தை ஆசைகொண்டு அறையலுற்றான். அதேபோல் யானும் இசை, நடனம்மீது கொண்ட ஆசையினால் மற்றும் உள்ளுணர்வால்சில கருத்துக்களை உங்கள்முன் வைக்கலாம் என உணருகின்றேன்.

பண்டைய மனிதர்களின் ஆரம்பகால வாழ்வினை முதற்கண் எடுத்து ஆராய்வோம். காட்டிலே வாழ்ந்த ... கருவிகள் குழலும் யாழுமே எனக்கூறி அது மிகையாகாது. வள்ளுவப் பெருந்தகையார் கூட மக்களின் மழலை மொழியை குழலுக்கும் யாழுக்குமே உவமை கூறியிருப்பதை ''குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்.'' என்ற குறள் வாயிலாக நாம் அறிவோம். மேற்காட்டிய சான்றுகளில் இருந்து அழகுணர்வால் ஈர்க்கப்பட் மக்கள் கலைப் படைப்பினை உருவாக்க எவ்வாறு முற்பட்டனர் என்பதை நாம் அறிகின்றோம். கலை என்பது உணர்ச்சிக்கு விளக்கமாக ... நடனக் கலை, இசைக் கலை சிற்பக் கலையோடு தொடர்புடையது. சிற்பக் கலை ஓவியக் கலையோடு தொடர்புடையது. ஓவியக் கலை எல்லாக் கலைகளோடும் தொடர்புடையது. நாடகக் கலை கண்ணாலும் காதாலும் உணரத்தக்கது. கற்றார்க்கும் கல்லாதவர்க்கும் களிப்பருளவல்லது.

இவ்வாறான சிறப்பான அழகியற்கலைகள் இவற்றினால் அமைந்த சிறந்த கலைப் படைப்புக்கள் நமது புலனுணர்வினைச் சராசரி மனித நிலையிலிருந்து மேல்நிலைக்கு ... பட்ட நாட்காட்டியில் சித்தரிக்கப்பட்ட ஒரு சித்திரத்தில் நமது இலங்கை நாட்டில் புதல்வர்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் தோள் மேல் கை போட்டு நிற்கின்ற காட்சியும் ஒரு அழகினையே தருகின்றது. அழகு முரண்பாட்டாலும் ஏற்படலாம். ஆயினும், ஒருமைப்பாட்டால் ஏற்படும் அழகையே உலகம் விரும்புகின்றது, 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று தொல்காப்பியமும் கூறுகின்றது. உயர்ந்தோரால் பேணப்படும் உலகம் ஒருமைப்பாட்டால் ஏற்படும்அழகையே ...

# மனித மனம் மேம்பாடடைய துணைபுரியும் அழகியற் கலைகள்

(சைவப்புலவர் பண்டிதர் வி. ரி. செல்லத்துரை அவர்கள் அழகியற்கலை பற்றி ஆற்றிய சொற்பொழிவிலிருந்து தொகுத்தவர் கே. அருள்பிரகாஷ்)

நமது முன்னோர்கள் நமக்களித்த நுண்கலைச்செல்வங்களையே அழகியற் கலை என்கின்றோம். இக்கலை வரிசையில் ஓவியம், சிற்பம், காவியம், இசை நடனம் என்னும் கலைகள் அடங்கும். இக்கலைகளுள் இதயத்தானம் போன்றவை இசையும் நடனமுமாகும்.

இசையினைச் சங்கீதம் எனவும் நடனத்தை ஆடல் எனவும் நாம் கையாளுவதுமுண்டு. இவற்றுக்குள்ளும் மிக நுட்பமான கலை சங்கீதம் ஆகும். காலம் சென்ற ஆசிரியர் அமரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு இசை விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேருரை ஆற்றியபோது அவர் குறிப்பிட்ட ஒரு பகுதியை இங்கே எடுத்துக்காட்டினால் இசையின் நுட்பத்தினை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் எனக் கருதுகிறேன். 'கலைகளுள் மிக நுட்பமான கலை சங்கீதம். சிற்பம், சித்திரம் என்பவற்றைக் கண்ணால் பார்க்கலாம். வேண்டுமானால் அவற்றைத் திருத்தி அமைக்கலாம், அழித்தும் எழுதலாம். கவிஞர்கள் தாங்கள் புனையும் கவிதைகளை ஒருமுறை ஏட்டில் எழுதிப் பார்த்து விட்டுப் பிழையிருப்பின் திருத்தியமைக்கலாம். ஆனால், சங்கீதக் கலையில் இவ்வண்ணம் செய்ய முடியாது. சங்கீதம், காற்றிலே உதயமாகிக் காற்றிலே மறைந்துவிடுகிறது. அதற்கென உருவம் கிடையாது. நமது ஊனக்கண்ணால் பார்க்க முடியாது, திருத்தியமைக்கவும்முடியாது'' என்று அவர் கூறினார். இசையின் சிறப்பிற்கு இக்கருத்து ஒன்றே போதிய சான்றெனக் கருதுகின்றேன்.

இசையானது ஒன்றும் அறியாத பச்சிளங் குழந்தையைக் கூட பரவசமூட்டுகின்றது. பாலர் முதல் விருத்தர் ஈறாக எல்லோரையும் தன்னிச்சைப் படுத்தும் தன்மை வாய்ந்தது. மலை போன்ற பேருருவம் கொண்ட மதயானைகள், படமெடுத்தாடும் கொடிய நாகங்கள், நாவிற்கினிய பாலினைத் தரும் ஆநிரைகள் அனைத்துமே இசையின் இனிமையில் கட்டுப்பட்டு நிற்கும் என்பதை பண்டைய இலக்கிய நூல்கள் வாயிலாகவும், ஏன் கண்கூடாகவும் நாம் காண்கின்றோம். மதங்கொண்ட யானையின் வெறியை தனது யாழ் வாசிப்பால் உதயணன் என்ற மன்னன் அடக்கினான் என்ற செய்கையை ஐஞ்சிறு காப்பிய நூல்களுள் ஒன்றான உதயணன் என்ற கதை மூலம் அறிகின்றோம். இன்னும் மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத இறைவன்கூட இசைக்கு உருகும் இயல்பினன் என்பதை இராவணன் கைலை மலையை பெயர்த்தபொழுதுசிவபிரான் அவனை அம்மலையின் அடியில் அமர்த்திஅல்லற்படுத்தியஞான்று அவன் பாடிய சாமகீதத்தில் மயங்கி முக்கோடி வாழ்நாளும் முனைகொண்ட வாளாயுதமும் ஈந்தான் என்பதை இராமாயண காவியம் மூலம் அறிகின்றோம்.

இசையானது ஒன்றும் அறியாத பச்சிளங் குழந்தையைக்கூட பரவசமூட்டுகின்றது. பாலர் முதல் விருத்தர் ஈறாக எல்லோரையும் தன் வயப்படுத்தும் தன்மை வாய்ந்தது. மலை போன்று பேருருவம் கொண்ட மதயானைகள்; படமெடுத்தாடும் கொடிய நாகங்கள், நாவிற் கினிய பாலினைத் தரும் ஆநிரைகள் அனைத் துமே இசையின் இனிமையில் கட்டுப்பட்டு நிற்கும்.

இது மட்டுமா, ஒருபோழ்து மாட்சிமை மிக்க இராவணன் தனதுநாட்டின் நிலப்பரப்பை மேலும் விசாலிக்க எண்ணம் கொண்டு வடக்கே பொதிகை மலை வரை படை கூட்டிச்சென்றான். அங்கே அகத்தியமுனிவரைக் கண்டான். அவரையும் தன்பால்ஈர்க்க எண்ணி யாழ். மீட்டி இசை பாடினான். அவனது இசையைக் கேட்ட குறுமுனியும் வாழா இருக்காது யாழ் கொண்டு தானும் இசை பாடினார். இவ் இசைமயக்கத்தில் இராவணன மயங்கினான். அவன்மட்டுமா, அங்குள்ள பறவைகள், விலங்குகள், சீவராசிகள், இயற்கையாய் அமைந்த பௌதீகசூழல் அத்தனையுமே ஆடாமல் அசையாமல் மயங்கிக் கிடந்தன எனவும் அவ் இசையில் மயங்கிய இராவணன் அகத்திய முனிவரை நோக்கிவேண்டிய வரத்தினைக் கேளுங்கள். உடனே தருகின்றேன் என்று வேண்ட முனிவரும் 'நாம் வாழும் இப்பொதிகை மலை சூழலில் உன்னால் எதுவித தொல்லையுமின்றி வாழ்வதற்கு வழிசெய்தால் போதுமெனக் கூறினார். அதுகேட்ட அவன் உடனே வரம் ஈந்ததாக இதிகாசமும் இயம்புகின்றது. இதுவன்றியும் காட்டிய மனைவியால், ''நாடும்யானையும் வாங்கி வரப் போகின்றீரோ'' என்று ஏளனம் செய்து அனுப்பப்பட்டயாழ்ப்பாணன் என்பவன் இலங்கை வந்து யாழ்பாடிப் பரிசில் பெற்றுச் சென்ற வரலாறும் நாம் அறியாததொன்றல்ல. ஏன் சங்க காலத்தில் வாழ்ந்த பெரும்பாணர், சிறுபாணர் விறலியர் என்போர் மன்னர்களைச் சார்ந்து பாடியும் ஆடியும் பரிசில் பெற்றுச் சென்ற சம்பவங்களையும் சங்ககால இலக்கியங்களில் காண்கின்றோம். இவையனைத்தும் இசையின் மாண்பினை எடுத்துக் காட்டவில்லையா?

இத்தகைய மாண்பு மிக்க இசையினால் சமூக ஒருமைப்பாட்டினை எவ்வாறு வளர்க்கலாம் என்பதுவே இன்று நம் முன்னுள்ள கேள்வி ஆகும். இதனையிட்டு இன்று நாங்கள் சிறிது சிந்திப்போம்.

முத்தமிழில் நடுநாயகமாக

...ளுணர்வால்சில கருத்துக்களை உங்கள்முன் வைக்கலாம் என உணருகின்றேன்.

பண்டைய மனிதர்களின் ஆரம்பகால வாழ்வினை முதற்கண் எடுத்து ஆராய்வோம். காட்டிலே வாழ்ந்த மனிதர்கள் அச்சூழலுக்கு ஏற்ப ஊன், உறக்கம், உறைவிடம், தற்பாதுகாப்பு, கலவி என்ற தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலேயே ஆரம்பத்தில் கவனம் செலுத்தினர். காலஞ்செல்லச் செல்லக் கானகச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள், தாக்கங்கள், காட்சிகள், ஓசைகள் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தன. சிறப்பாகச் சிறுவர்கள் இவற்றிலே பெரிதும் ஈடுபாடு கொண்டனர். வண்டுகள் ரீங்காரம்செய்யும் இனியஓசைகள் கார் முகிலைக் கண்டு களிப்பு மிகுதியால் தோகை விரித்தாடும் மயில்களின் நடனங்கள், தென்றல் காற்றின் இனிய வருடல்கள் அவர்களது உள்ளுணர்வைத் தூண்டின. அந்த உள்ளுணர்வுகளே பின்னர் கலைகளாகப் பரிணமித்தன.

வண்டுகள் துளையிட்ட மூங்கில்களில் எழும்பிய நாதங்கள் அவர்களைத் தன்பால் ஈர்த்தன. உடனே அங்கே நாடிச் சென்று ஓசை வந்த துவாரத்தில் தம் செவி வைத்த இனிய ஓசையைக் காதாரக் கேட்டனர். இதனை அனுபவித்த இவர்கள் மூங்கில்களைப் பிரித்தெடுத்து அளவாக வெட்டி சிறிதும் பெரியதுமான பல்வேறுதுவாரமிட்டு அக்குழலை வாயில் வைத்து ஊதினர். இவ்வாறு பரிணமித்த இசைக் கருவியே புல்லாங்குழல் என்னும் வாத்தியக் கருவியாகும். இது மட்டுமா காட்டிலே உள்ள முகிழந்தண்டினை வெட்டி எடுத்து 'மரல்' என்னும்புல்லினைநாணாகக்கட்டி அதில் தமதுவிரலால் தெரித்து ஓசையை எழுப்பினர். இதன் வழி எழுந்ததே யாழ் என்னும் வாத்தியக் கருவியாகும். இக் குழலும், யாழுமே தமிழர் தம் ஆரம்பகால இசைக் கருவிகள் ஆகும். இன்றைய நவீன உலகில் எத்தனையோ இசைக்கருவிகள் தோன்றினாலும் தமிழர் உரிமை பாராட்டும் சொந்த இசைக்

...வால் ஈர்க்கப்பட் மக்கள் கலைப் படைப்பினை உருவாக்க எவ்வாறு முற்பட்டனர் என்பதை நாம் அறிகின்றோம். கலை என்பது உணர்ச்சிக்கு விளக்கமாக அமைந்து அழகுத் தன்மையால் உள்ளத்தைக் கவரவல்லது என்பதை இத்தால் கண்டறிந்தோம். எனவே, கலையையிட்டுச் சிறிது விளக்கமாக ஆராய்ந்து பார்ப்போம், கலைக்குள் முதன்மை

இவ்வாறான சிறப்பான அழகியற்கலைகள் இவற்றினால் அமைந்த சிறந்த கலைப் படைப்புக்கள் நமது புலனுணர்வினைச் சராசரி மனித நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயர்த்துகின்றது. மனிதரிடத்தில் மூன்று வகையான சக்திகள் உண்டு. ஒன்று மனித சக்தி, இரண்டு மிருக சக்தி, மூன்று தெய்வசக்தி இவற்றுள் தெய்வ சக்தியைத் தூண்டுவதே அழகியற் கலைகளின் இலட்சியமாகும். மிருக சக்தி

விரும்புகின்றது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்று தொல்காப்பியமும் கூறுகின்றது. உயர்ந்தோரால் பேணப்படும் உலகம் ஒருமைப் பாட்டால் ஏற்படும்அழகையே உச்சி மேற்கொள்ளும்.

புற அழகால் எதுவுமில்லை அக அழகையே உயர்த்த வேண்டும். புற அழகு கண்ணிற்கு மயக்கத்தையே அளிக்கும். அது அழகு மயக்கம் எனும் திரையைக் கிழித்து ஞானத்தை ஊட்டும்'

பெறும் இசை, நடனம் என்பவற்றை எடுத்துக்கொள்வோம்.

இசைக்கலையானது கால அளவினை அடிப்படையாகக் கொண்டு ஒலிநயத்தால் இயங்குவதாகும். ஒலி, கருத்து, சொல், உணர்வு என்ற நான்கு அளவுகளால் அமைக்கப்படுவதாகும். ஆனால் நடனக் கலையானது உள்ளத்துணர்வுகளை மெய்ப்பாடுகளாக உடலசைவுகளாலும் குறிப்புகளாலும் புலப்படுவதாகும். மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும் அவையாவன,

மழுங்கடிக்கப்பட்டு மனித சக்தியிலிருந்து தெய்வ சக்தி மலரும் பொழுது ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற மனப்பாங்கு தானாகவே வளர்கின்றது. இம் மனப்பான்மை வளரும் போது சமுதாய நலன்காக்க வழி ஏற்படுகின்றது. நாடு, இனம் மொழி என்பவற்றால் ஏற்படும் காழ்ப்புணர்ச்சி களையப்படுகின்றது. இத்தகைய காழ்புணர்ச்சிகள் களையப் படும்பொழுது சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதென்பது ஓர் இலகுவான காரியமாகும்.

அழகு என்பது இணக்க அமைப்பால்ஏற்படுவது. பசுஞ்சோலையில் ஆண் மயில் பெண் மயிலோடு இணக்கமாகத் தோகை விரித்தாடும் காட்சி அழகு பயக்கும். இத்தகைய காட்சிகளைக்காணும் சிறுவர்கள்கூட ''மலையின் மேலே முகிலைக்கண்டு வண்ண மயிலும் ஆடுது. வட்டமாக தோகை விரித்துவண்ண மயிலும் ஆடுது'' எனப் பாடி ஆடி மகிழ்வதைக் காண்கின்றோம். முடியுடை மூவேந்தர் தம்முள் முரணின்றி இணக்கமுடன் அரச சபையில் இருப்பின் அதுவும் அழகு. மலர்ந்த புத்தாண்டில் மக்கள் வங்கியினரால் வெளியிடப்

மகாத்மாகாந்திஅடிகள் வயது ஏறஏற நன்னெறி வாழ்வால் புலநெறி உணர்ந்து அகவழகும் புதுப்பொலிவும் பெற்றார். உலகத்தைத் திருத்திய உத்தமர்கள் எனப்போற்றப்படும் புத்தபிரான், இயேசு கிறிஸ்து, மகாத்மா காந்தி, கொன்பியசியஸ், சோக்கிரட்டீஸ் போன்றவர்கள் அக அழகால் உலகை ஈர்த்தவர்கள் எனப்போற்றப்படுகின்றனர். அவர்களின் முன்னோடி வாழ்வு இவ்வுலகைவளம்படுத்திற்று. ''கைபுனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பு' என்றும் 'சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து போற்றுதுமே. என்றும் கூறும் செய்யுள் அடிகள் அக அழகையே மறைபொருளாய் சுட்டிக்காட்டுகின்றன. புறஅழகில் மயங்கினால்அகஅழகைக் காணமாட்டோம். அழகைக்காணாவிடில் என்றும் துன்பமே நேரிடும். மாரீசன் என்ற பொன்மானில் மயங்கியதால் சீதை அடைந்த துன்பத்தை இராமாயண இதிகாசம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

''நகையே அழுகை இழிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் என்னும் சூத்திரம் வாயிலாக அறியலாம். இத்தகைய மெய்ப்பாடு உணர்வுகளை உடலசைவுகளால் குறிப்புகளால் எடுத்துக் காட்டுவதே நடனக்கலையின் ஆதார சுருதியாகும். உபகரணங்கள் இன்றி மெய்ப்பாடுகளை கையசைவுகளால் காட்டுவதே நடனக்கலையாகும். நடனக் கலைக்கும் நாடகக் கலைக்கும் மிகுந்த தொடர்புண்டு. உதாரணமாக தயிர் கடைதல், பானையைச்சுமந்து செல்லுதல் போன்றவற்றைப் பானையோ, கருவிகளோ இன்றி அவை இருப்பதுபோல் அபிநயம் செய்து காட்டுவது.

எனவே, அக அழகினை வளர்க்க அழகியற் கலைகள் துணைபுரிகின்றன. அழகியற் கலைகளால் மனித மனம்மேம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

எழுதப்பட்டிருப்பவைகள் அனைத்திலும், எவனொருவன் தன் இரத்தத்தாலேயே எழுதியிருக்கிறானோ அதையே நான் நேசிக்கிறேன். இரத்தத்தால் எழுது; அந்த இரத்தந்தான் ஜீவன் என்பதைக் கண்டு கொள்வாய்.

- நியட்ஸே



ஓ!! எம் செல்வங்களே!!
நல்லூர் வீதியிலே - பாரதம் உங்களை
சோறு உண்ண வைத்திருக்கலாம் - ஆனால்
சோரவைக்க முடியவில்லை.
உணவில் பங்கு கொண்டீர் - உம்
உறுதியிலும் பங்கு இருக்கும்
உறவு வேறுதான் - உங்கள்
உணர்வுகள் வேறல்ல
உன் கையைப் பார்த்து - அன்று
கண்ணீர் சிந்திய விழிகள் பல
விழிநீரெல்லாம் வீரர்கள் ஆனதினால்
வென்று விட்டோம் கொஞ்சம்
வானம் வெளுத்து விட்டது
கொஞ்சம் பொறுத்திருங்கள்
முற்றாக விடிய இன்னும்
மூன்று நாழிகையே!!

செல்வி கௌரி இராசரத்தினம்



எந்த இடத்தில்
சுதந்திரம் இல்லையோ
அந்த இடத்தில்
பூமி
நிர்வாணத்தால் அவமதிக்கப்
படுகிறது.
அந்த அவமதிப்பை
சகிக்க முடியாமல் தான்
........... ......,
பலியாகிறார்கள்.
சுதந்திர கீதங்கள்
மதிப்பிழந்த நாட்டில்
தேசிய கீதங்கள்
தேவையே இல்லை
மனிதனின்
சுதந்திர நினைவுகளைச்
சூறையாடிட
எந்த ஏகாதிபத்தியத்தாலும்
இயலாது.

உப்பையும் புளியையும் பிரச்சினையாக்கி அடுப்படியைக் களமாக்கி ஓர் வட்டத்துக்குள் சதுரம் போட்டுக்

கப்பட்ட பெண்களின் தொகை குறைவாக இருந்தது. இதற்கு தனியே அரசியல் காரணிகள் மட்டுமல்ல சமூக அமைப்பு பொருளாதார காரணிகள் என்பவற்றோடு கலாசார பாரம்பரியங்களும் தடையாகவிருந்தன. ஆனால் விடுதலைக்கான இராணுவக்கட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அந்த ஆரம்ப காலப் படையணியில் இணைந்து கொண்ட பெண் போராளிகளில் மேஜர் சோதியாவும் ஒருவர்.

ஆரம்ப காலங்களில் ஆண் போராளிகளுடன் இணைந்தே பெண் போராளிகள் களத்தில் போரிட்டனர். பின்னர் படிப்படியாக அந்நிலைமை மாறி பெண்களின் படையணி வளர்ச்சி பெற்ற போது அவர்கள் தனியாகச் செயல்படும் திறனையும் பலத்தையும் பெற்று எதிரிகளே வியக்கும் வண்ணம் தமது ஆற்றலை

றினாள். விடுதலைப்புலிகளின் அந்தப் பாசறை முழுமைக்கும் இவளே பிரதான மருத்துவராகவிருந்து போராளிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டாள். தகவல்களை தொடர்பு சாதனங்கள் மூலம் எதிரிகள் அறியா வண்ணம் குறியீட்டு மொழிகளில் சக போராளிகளுக்கு அனுப்பி வைப்பதில் ஒரு தலைசிறந்த தொடர்பாளராக இவள் விளங்கினாள்.

### களத்தில் சோதியா

பல போராட்டக்களங்களில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி வந்த சோதியா ஒரு பெரியமோதலை 1986 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டி வெளி என்ற இடத்தில் தளபதி விக்டர் தலை

அவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வந்து நல்லூரில் மக்கள் பார்வைக்கு வைத்தனர். இரண்டு சிங்கள சிப்பாய்களான எட்டியாந் தோட்டையைச் சேர்ந்த ஏ. டபிள்யூ. பண்டார என்பவனும் மொரட்டுவையைச் சேர்ந்த 'லான்ஸ் கோப்ரல்' சந்திரசிறீயும் உயிருடன் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டனர். ஹெலிகப்டர் மீது விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதலில் அதனைச்செலுத்திய விமானி கருணா சேன என்பவர் கொல்லப்பட்டார்.



### மாந்தையில் மோதல்

தளபதி விக்டரின் மறைவின் பின் தளபதி ராதா மன்னார் மாவட்டப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதன்பின் அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி மாந்தையில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சுற்றி வளைத்துக் கொண்ட இலங்கை இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இம் மோதலுக்கு லெப். கேணல் ராதா தலைமை தாங்கினார். இம் மோதலிலும் மேஜர் சோதியா பங்கேற்றுக் கொண்டார். அடம்பன், நாவற்குளம் பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டது. தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு வந்த இலங்கை இராணுவத்துடன் பெண் போரா

### சீ - பிளேன் சேதம்

1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம்திகதிநாவற்குழி பகுதிக்கு வந்த பொம்பர் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசிய வண்ணம் இருந்தன. இக் குண்டு வீச்சினால் கைதடி வயோதிபர் இல்லமும் கைதடி அனாதைச் சிறுவர் இல்லமும் பலத்த சேதமுற்றன. நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள நான்கு வீடுகளும் அரியாலையில் இரண்டு வீடுகளும் பலத்த சேதமுற்றன. மேலே சீ-பிளேன் தாழப் பறந்து தரையில் நின்ற போராளிகள் நடமாட்டம் பற்றிய தகவல்களை பொம்பர் விமானங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரு ஹெலிகப்டரும் வானில் சுற்றிக் கொண்டிருந்தது. சீ-பிளேன் தகவல் கொடுக்க பொம்பர் குண்டுகளை வீசித் தாக்குவதால் பொதுமக்கள் சீ-பிளேனை 'கோள்மூட்டிப் பிளேன்' என்று ஏளனமாக அழைப்பதுண்டு. இவ்வாறான நிலையில் முகாமைவிட்டு வெளியேற முயன்ற இராணுவத்தின் மீது எதிர்த் தாக்குதலை நடத்திய மேஜர் சோதியா தலைமையிலான பெண்கள் அணியினர் இராணுவத்தை திருப்பி அனுப்பினார்கள். அதேவேளை அன்றைய தினம் சீ-பிளேன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் சேதமுற்ற சீ-பிளேன் முகாமுக்கு வெளியே தரையிறக்கப்பட்டது. மூன்று தினங்கள் அங்கே தரித்து நின்ற சீ-பிளேன் சரி பார்க்கப்பட்ட பின்பே எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வாறான பல மோதல்களின் போதெல்லாம் மேஜர் சோதியா இராணுவத்தினரை 25-30 யார் இடைவெளி தூரத்தில் யுத்த களத்தில் சந்தித்து மோதியிருக்கின்றாள்.

### தொலைத் தொடர்பு தாக்குதல்

யாளர் மகாநாட்டில் உரையாற்றிய அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி பின்வருமாறு சொன்னார்.

''வடபகுதிதீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் இந்த நாட்டு மக்களின் மனதில் நீங்காத இடம் பிடிப்பேன்''

இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இரண்டொரு தினங்களில் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில் அவர் பின்வருமாறு சொன்னார்.

''யாழ்' தொலைத்தொடர்பு நிலையத்தின் மீது தீவிரவாதிகளின் தாக்குதல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாம் எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான மிகப்பெரிய சவாலாகும்''

இந்தத் தொலைத் தொடர்பு தாக்குதலின்போது மேஜர் சோதியா தனது அதிகபட்சபங்களிப்பைச் செய்து தாக்குதலின் வெற்றிக்கு உறுதுணையாக நின்றாள்.

### இந்திய இராணுவத்துடன் மோதல்

விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்துடன் மேற்கொண்ட தாக்குதல்கள் இலங்கை அரசுக்கும் - இந்திய மத்திய அரசுக்கும் சவாலாகவே இருந்தன. இதனால் விடுதலைப் [illegible]களை இராணுவ ரீதியாக ஒடுக்க விரும்பிய இரு அரசுகளும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற பெயரில் ஒரு சதிமோசடியை எழுத்தில் போட்டுக் கொண்டன. இலங்கை இராணுவத்திற்குப் பதிலாக இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுடன் மோதலைத் தொடங்கியது. அதாவது கால் மாறியதே தவிர சப்பாத்து மாறவில்லை. இதனால் அடக்குமுறைகளுக்கு எதிரான போர் ஆரம்பமாகியது. இப்போரில் பல இடங்களில் பெண்கள் அணியினரோடு மேஜர் சோதியாவும் பங்கேற்றாள். இவற்றுள் சில மோதல்கள் மறக்க முடியாதவை மட்டுமல்ல வரலாற்றுச் சிறப்புடையவையும் ஆகும்.

### கல்லுண்டாய் தாக்குதல்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குக் கரைப் பகுதியின் பிரதான பாதை யாழ்ப்பாண நகரிலிருந்து காரைநகர் நோக்கிச் செல்லும் பாதையாகும். இப்பாதையில் பொம்மைவெளிக்கும் செட்டியார் மடத்திற்கும் இடையில் அமைந்த பகுதியிலேயே கல்லுண்டாய் வெளி என்னும் பிரதேசம் அமைந்துள்ளது.

இந்த வெளியூடாகச் செல்

பிரச்சினையாக்கி அடிப்படியைக் களமாக்கி ஓர் வட்டத்துக்குள் சதுரம் போட்டுக் கொண்டு பாரம்பரியமாக சமூகம் போட்ட கட்டுத் தளைகளால் தன்னைத்தானே பிணைத்துக் கொண்டு வாழும் ஒரு சமூகத்தின் மத்தியில் உருவான புரட்சிகர சிந்தனைகள் அரசியல் அடிமைத்தனத்திற்கு எதிராக மட்டுமல்ல சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவும் போர்க் கொடி தூக்கும் புரட்சிகர மாற்றத்திற்கு வழிவகுத்தது. அரசியல் விடுதலையோடு சமூகவிடுதலை, பொருளாதார விடுதலை முதலான அம்சங்களையும் சேர்த்து விடுதலைப்புலிகள் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கு முப்பரிமாண வடிவம் கொடுத்தனர். இப்பணிகளுக்கு அணிந்துரை எதிரையும் படையணியில் முன்னணியில் மேஜர் சோதியா நின்றாள். விடுதலைப்புலிகளின் மகளிர்படைப் பிரிவின் பொறுப்பாளராக அவள் செயல்பட்டாள்.

இராணுவ பயிற்சி பெற்றுக் கொண்ட பின் மேஜர் சோதியா அவர்கள் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை பன்முகப்பட்ட தள நிலைப்பாட்டில் நின்று பல விடுதலைப் பணிகளைப் புரிந்துள்ளார். பல்வேறுபட்ட பரிமாணங்களை வெளிப்படுத்தி நின்ற அவளது ஆளுமையும் அறிவும் ஆற்றலும் ஆழமான நோக்கும் பரந்துபட்ட சிந்தனையும் மகளிர் படைப்பிரிவின் தலைமைத்துவத்தை அவளுக்குக் கொடுத்தது.

ஒழுங்கு கட்டுப்பாடில்லாத இராணுவ கெடு பிடிகளுக்கும் அடாவடித்தனங்களுக்கும் எதிராக மட்டுமன்றி அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகவும் போராடி தன்னையும் தான் பிறந்த தன்நாட்டையும் காப்பாற்றினாள்.

விடுதலைப்புலிகளின் இராணுவப் பிரிவு 1984 இல் பல புதிய பரிமாணங்களுடன் விஸ்தரிக்கப்பட்ட போது போர்ப்பயிற்சிக்காக உள்வாங்

திறனையும் பலத்தையும் பெற்று எதிரிகளே வியக்கும் வண்ணம் தமது ஆற்றலை வெளிக்காட்டினார்கள். இந்தப் பெண்கள் படையணியின் மகளிர் படைப்பிரிவின் முதற் பொறுப்பாளராக மேஜர் சோதியா நியமிக்கப்பட்டாள்.




## மருத்துவம் செய்த மகத்துவம்

மேஜர் சோதியா மகளிர் படைப்பிரிவில் இராணுவப் பயிற்சி மட்டுமன்றி மருத்துவப் பயிற்சி தொலைத் தொடர்பு சாதனங்களை இயக்கும் திறன் என்டவற்றிலும் ஆற்றல் பெற்றவளாக விளங்கினாள். 2 ஆம் உலகப் போரின் போது புளரன்ஸ் நைட் நைட்டிங் கேல் என்ற பெண் யுத்தத்தில் காயப்பட்ட போர் வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வரலாற்றில்மகத்தான இடத்தைப் பெற்றுக் கொண்டாள். இதே போல சோதியாவும் 1985 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆம் திகதி கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் காயப்பட்ட போராளிகளுக்கு மருத்துவ கிசிச்சை செய்யும் ஒரு தாதியாகக் கடமையாற்

னார் மாவட்டத்தில் ஆட்காட்டி வெளி என்ற இடத்தில் தளபதி விக்டர் தலைமையிலான போரின் போது சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றாள்.

இங்குள்ள வயல் வெளிப் பிரதேசம் ஒன்றில் இன ஒழிப்பு நடவடிக்கைக்காக வந்து பற்றை மறைவில் படுத்திருந்த இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. ஆகாயத்தில் சுற்றி வட்டமிட்ட 'சியாமார் செட்டி' பொம்பர் குண்டு வீச்சு விமானங்கள் சுற்றி சுழன்றடித்து விடுதலைப் புலிகளின் இலக்குகளை நோக்கி குண்டுகளை வீசிக் கொண்டிருந்தன. இதைவிட ஹெலிகப்டர் விமானங்கள் துப்பாக்கிப் பிரயோகம்செய்து கொண்டிருந்தன. தள்ளாடி இராணுவ முகாமிற்கும் — அடம்பனில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் முகாமிற்கும் இடைப்பட்டபகுதியில் ஏற்பட்ட இந்த மோதல் பல மணிநேரம் நீடித்தது. இந்த மோதலில் லெப்.கேணல் விக்டர், லெப்.கேணல் ராதா, மேஜர் நரேன், மேஜர் அசோக் ஆகியோர் உட்பட பல முன்னணிப் போராளிகள் பங்கு பற்றினார்கள். இத்தாக்குதலில் மேஜர் சோதியாவும் பங்கு பற்றினாள். இங்கு ஏற்பட்ட இந்தக் கடும் மோதலில் மன்னார் மாவட்ட முன்னாள் தளபதி விக்டர் (மருசலீன் பியூஸ்லஸ் ஒஸ்கார்) வீர மரண முற்றார். இவருடன் இரண்டாம் லெப். றோமும் (செல்லையா செல்வநாதன்-அடப்பன்) மரணமடைந்தார்.

இந்த மோதலில் பல சிங்களச்சிப்பாய்கள் மாண்டு போயினர். ஏழு சிங்கள சிப்பாய்களின் உடல் சிதறி சின்னாபின்னப்பட்டமையால் அவை காட்டில் அடக்கம் செய்யப்பட்டன. எட்டு பேரின் உடல்களை மட்டுமே சக சிங்கள சிப்பாய்களால் எடுத்துச் செல்ல முடிந்தது. ஒன்பது பேரின் உடல்களைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள்



மேஜர் சோதியா

ஒரு யுத்தம் போல் இடம் பெற்ற இந்த தால்குதல் நடவடிக்கைகளில் பெரும்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டமையை விடுதலைப்புலிகள் வெளியிட்ட போது அதனைமறுத்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆக ஐந்து சிப்பாய்கள் மட்டுமே கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டார். கொல்லப்பட்ட சிப்பாய்களில் ஒன்பது பேரது உடலையும் காட்சிக்கு வைத்த விடுதலைப் புலிகள் தளபதி கிட்டுவின் ஏற்பாட்டின் படி யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் தங்கியிருந்த கப்டன் கொத்தலாவலையிடம் அவற்றை ஒப்படைத்தனர். விடுதலைப் புலிகள் தமக்கு மன்னாரில் இராணுவ ரீதியாகக் கிடைத்த வெற்றிக்கு ஒரு பிளஸ் சேர்த்து யாழ்ப்பாணத்தில் அரசியல் ரீதியான வெற்றியாக்கிக் கொண்டனர்.

மன்னாரில் ஆட்காட்டி வெளி தொடக்கம் நல்லூர் வீதி ஊடாக யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை வரை ஒரு நீண்ட வரலாற்றுத் தொடரின் ஒவ்வொரு நகர்விலும் ஒரு நீரறுக்கமான பிணைப்பை லெப். கேணல்களான விக்டர், ராதா ஆகியோருடன் இணைந்து மேஜர் சோதியா தலைமையிலான பெண் போராளிகளும் ஏற்படுத்தினார்கள் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புவாய்ந்த நிகழ்வாகும்.

பட்டு வந்த இலங்கை இராணுவத்துடன் பெண் போராளிகள் கடும்போர் புரிந்தனர். ஹெலிகப்டர், பொம்பர் விமானங்கள் குண்டுகளை வீசின. இலங்கை இராணுவம் பலத்த இழப்பைச் சந்தித்து முகாம் திரும்பியது. இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் முருங்கனைச் சேர்ந்த விஜி (சந்தாப்பிள்ளைமரியரட்ணம்) என்ற போராளி மரண முற்றான்.

## குடாநாட்டிற்குள் சோதியா

1987ஆம் ஆண்டு பெப்ரவரி மார்ச் தொடக்கம் மேஜர் சோதியா தலைமையிலான பெண் போராளிகள் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் அமைக்கப்பட்டிருந்த நாவற்குழி முகாமிலிருந்தும் யாழ். டச்சுக் கோட்ட முகாமிலிருந்தும்இராணுவம் வெளியேறாதபடி தடுப்பதிலும் பெரும் பங்காற்றினார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்குமிடையில் அடிக்கடி மோதல்கள் 1987 முற்பகுதியில் நிகழ்ந்த வண்ணமிருந்தன. அந்த ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதி விடுதலைப் புலிகளுக்கும்-இலங்கை இராணுவத்தினருக்குமிடையில் நாவற்குழியில் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் கடும் மோதல் ஒன்று இடம் பெற்றது. ஹெலிகப்டர் ஒன்று மோட்டார் ஷெல் குண்டுகளை வீசிய வண்ணம் நாவற்குழி முகாமுக்குள் தரையிறங்கமுயற்சிசெய்து கொண்டிருந்தது.விடுதலை புலிகளின் சென்றிகள்மீதும் தாக்குதலை நடாத்திய வண்ணம் தரையிறங்க பலத்த முயற்சிகளை மேற் கொண்டது. ஒவ்வொரு தடவையும் மேஜர் சோதியா தலைமையிலான பெண்கள் அணியினர் மேற்கொண்ட தாக்குதலால் அம்முயற்சி கைகூடாமற் போனது. இறுதியில் முகாமுக்கு உணவுப் பொருட்களையும் ஆயுத தளபாடங்களையும் ஏற்றி வந்த அந்தக் ஹெலி தரையிறங்காமலேயே சென்று விட்டது.

## தொலைத் தொடர்பு தாக்குதல்

1987 ஆம் ஆண்டு மே-ஜூன் மாதத்தில் இலங்கை அரசாங்கம் ''ஒப்றேசன் லிபறேசன்'' என்ற பெயரில் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல் மே 26 ஆம் திகதி ஆரம்பமானது. எவ்வித பாரிய இராணுவ நடவடிக்கைகளும் விடுதலைப் போராட்டத்தின் உறுதித் தன்மையைச் சீர்குலைக்க மாட்டாது என்பதை இலங்கை அரசுக்கு இராணுவ மொழியில் எடுத்துரைக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. இதனால் கப்டன் மில்லர் பிராணியிலான ஒரு தாக்குதலை யாழ்.தொலைத் தொடர்பு நிலையத்திற்குள் தங்கியிருந்த சிங்களச் சிப்பாய்கள் மீது விடுதலைப்புலிகள் 1987 ஜூன் மாதம் மூன்றாம் திகதி அதிகாலை தொடுத்தனர். பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்காகக்

## நேதாஜி

கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த சிப்பாய்களில் பலர் இத்தாக்குதலின் போது இறந்து போயினர். 41 சிப்பாய்கள் எரிகாயங்களுக்குள்ளானமையால் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர் என இலங்கை வானொலி அறிவித்தது. அம்பாந்தோட்டையைச் சேர்ந்த சுனில், மாத்தறையைச் சேர்ந்த நிமால், அநுராதபுரத்தைச் சேர்ந்த பியந்த ஆகிய மூன்று சிப்பாய்கள் உயிருடன் பிடிக்கப்பட்டனர். இத்தாக்குதலின்போது இலங்கை இராணுவத்தின் அதிகாரியான R. D. விமல குணவர்த்தனா மாண்டுபோனார். விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் நிக்சன் உட்பட மூன்று போராளிகள் வீரமரணமுற்றனர்.

இத்தாக்குதலுக்கு முதல் நாள் கொழும்பில் பத்திரிகை

பிரதேசம் அமைந்துள்ளது.

இந்த வெளியூடாகச் செல்லும் பிரதான பாதையின் மேற்குப்பகுதியில்சதுப்புநிலம் காணப்படுகின்றது. அதற்கு அப்பால் பார்வைக்கெட்டிய தூரத்தில் பரவைக் கடல் காணப்படுகின்றது. வீதிக்கு கிழக்கே வயல் நிலம் காணப்படுகின்றது. ஆங்காங்கே சில மரங்களும் ஓர் இடத்தில் ஒரு சிறிய தென்னந் தோப்பும் காணப்படுகின்றது. பரந்த இடைவெளியில் ஆங்காங்கே சில சிறிய வீடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான புவியியல் அமைவிடத்தைக் கொண்ட இவ்விடத்தில் 1987 ஒக்டோபர் மாதம் ஒருபெரிய மோதல் ஒரு முழுநாளும் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் பெண்கள் படைப் பிரிவுக்கு மேஜர் சோதியா தலைமை தாங்கினாள். இந்திய இராணுவத்தின் கவச வாகனங்களும் செயின் புளக்குகளும் தொடர்வண்டிகளும் அணிவகுத்து வீதி வழியாக வந்து கொண்டிருந்தன. இத்தொடர் வண்டிகள் இந்திய இராணுவ அதிகாரி மேஜர் சங்கர சர்மா தலைமையில் முன்னேறிச் சென்று யாழ் நகரை முற்றுகையிடுவதையே நோக்காகக் கொண்டிருந்தன. இவற்றின்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய ஆர். பி. ஜீ. ரொக்கட் லோஞ்சர் தாக்குதலிலும் கண்ணிவெடியிலும் சிக்கிய ஒரு கவச வாகனமும் ஒரு ட்றக்கும் தடம்புரண்டு அராலி பாலத்திற்குள் போய் விழுந்தன. கவசவாகனத்தின் உள்ளே ஒரு இந்திய ஜவான் கால் முறிந்த நிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தார். இன்னொரு வாகனத்தில் இன்னொரு ஜவான் கை முறிந்த நிலையில் பலத்த காயத்துடன்காணப்பட்டார். இருவரும் விடுதலைப் புலிகளால் கௌரவமாக அழைத்துச் செல்லப்பட்டு கைதிகளாக பின்னர் ஒப்படைக்கப்பட்டனர். சிதறிய கவசவாகனம் ஒன்றுக்குவெளியே மூன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

# பாரதச்சுவடுகள்

--- பாப்பாணன்

(8)

துப்பாக்கி முழக்கங்கள் தொடங்கலாச்சு
துரோகத்தின் கும்பல்கள் சிதறலாச்சு
தப்பாக இளைஞரை எடைகள் போட்டோர்
தலைகளுடல் விட்டுமண் உருளலாச்சு
சிப்பாய்கள் சீவியங்கள் குறுகலாச்சு
சிதறுண்டு வாகனங்கள் நொறுங்கலாச்சு
எப்பாகம் ஓடுவது பாதுகாப்பு
என்று வழி தெரியாத கலக்கமாச்சு.

ஆங்கிலேயன் ஆக்கிவைத்த ஓரிலங்கை
ஆகாது இனிமேலும் இணைந்து வாழ
ஓங்கிவரும் ஆதிக்கம் இனமழிக்கும்
ஒற்றுமையாய் வாழுவது முடியாதாகும்
தாங்கவொணா நிலைமையிலே எழுபத்தேழில்
தமிழீழப் பிரகடனம் செய்து கொண்டார்
ஆங்காரம் கொண்டார்கள் ஆளுவோர்கள்
அடக்கிடவும், அழித்திடவும் உறுதிபூண்டார்.

## திருப்பம்

பட்டதுபோதும், கெட்டதுபோதும்
படைதிரள் நின்துயிலை
விட்டெழு தோழா, விரைந்தெழு தோழா
விடைகொடு அறவழிக்கே
குட்டது வாங்கி குனிந்தது போதும்
குதித்தெழு குலம் தழைக்க
சுட்டது யாரெவன், சுடுபவன் யாரினி
சுடு சுடு எதிரிகளை.

காட்டிக் கொடுப்பவன் கைப்பொருள் வாங்கியே
கண்ணியம் தவறுபவன்
கூட்டிக் கொடுத்திழி குணத்தில் பிழைப்பவன்
குலத்தை அழித்தொழிக்க
வேட்டுத் தொடரென வெடித்துக் கிளம்பிட
வீரத்தமிழ் இளைஞர்
காட்டுப் பகுதியில் கண்மறைவாகவே
களப்போர் நெறிகற்றார்.

பெற்றிடு வேதனம் பெரிதெனக் கருதியே
பெடியனை அடக்குவதில்
வெற்றி கொடுத்திடும் விருதினைக் கருதியே
விட்டனர் சிலர் உயிரை
பற்றி எரிந்திடு தீயென வீரம்
பரவியெம் இளைஞரிடை
கற்றிடு சிறுவர் காளையர் பெண்கள்
களையெடுத் திட விரைந்தார்

ஐந்தென, பத்தென, அதுகிலும் நூறென
ஆயிரம் ஆயிரமாய்
வந்தனர் சேர்ந்தனர் வன்முறையாடினர்
வாழ்ந்திட வேதமிழர்
பந்தென வுருண்டன பகைத்திடுவோர் தலை

### நாடக மரபு

எமது நாடக மரபு எது என்று கேட்டால் கூத்தே எமது நாடக மரபு என அழுத்தம் திருத்தமாகக் கூறலாம், ஆனால் நவீன நாடகம் ஓரளவுக்கேனும் வளர்ச்சி பெற்று முனைப்புடன் விளங்கினாலும் நாட்டுக் கூத்தின் நிலைமை திருப்தி தரக்கூடியதாக இல்லை.

ஈழத் தமிழரின் பாரம்பரியக் கலையான கூத்தின் தளர்வுறு நிலைக்கான காரணம் என்ன? கூத்தினை நலிவடைய விட்டு விட்டு எமது பாரம்பரிய கலை வடிவம் என்று எதனை நாம் காட்டப்போகின்றோம்?

அங்கொருவர், இங்கொருவர் என்றும் ஒரு சில மன்றங்கள் அமைப்புக்கள் செயற்படுவதால் மட்டும் நாங்கள் கூத்தினை வளர்த்தெடுத்து எதிர்காலத்துக்குக் கொண்டுசெல்ல முடியுமா?

''தமிழ் நாட்டிற்கூட தமிழ் நாடகங்களின் மூலத்தைக்கண்டறியும் முயற்சிகள் இன்னும் பெருமளவு ஆரம்பமாகவில்லை· இன்றைய தெருக்கூத்தே தமிழரின் (Theatre) எனக்கூறி அதற்கான மூலத்தைப் பெரம்பூரிலும், சேயூரிலும் நடக்கும் பாரதக்கதை படித்தற் சடங்கில் தேடும் முயற்சி மிகச் சமீபகாலத்திலேதான் தமிழ் நாட்டில் ஆரம்பித்துள்ளது. ஈழநாட்டைச் சேர்ந்த கா. சிவத்தம்பி இவ்வகையிற் புராதன தமிழர் மத்தியில் வழங்கிய நாடக வகைகளையும் அதன் மூலகங்களையும் (Ancient Drama in Tamil Society) என்னும் நூலில் ஆராய்ந்துள்ளார். ஈழத்து நாடக மரபைப் பொறுத்த வரை இம்முயற்சி இன்னும் நடைபெறவில்லை என்றே கூறலாம். கூத்தை தமது நாடக மரபு எனப் பிரபல்யப்படுத்தி அதனை நாடகநிலைப்பட்ட நோக்குடன் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆராய்ந்துள்ளார். ஆனால் அதற்கு முந்தி அதன் தோற்றம்பற்றி யாரும் ஆராய்ந்தாரில்லை.''

என்று ''சடங்கில் இருந்து நாடகம் வரை'' என்னும் நூலில் கலாநிதி சி. மௌனகுரு கூறும் கருத்து கவனத்திற்குரியது.

### நலிவுக்கு காரணங்கள்

எமது தொன்மை மிக்க கூத்து வடிவமானது நலிவு பெற்றமைக்கு-

தையே பெற்றிருந்தன. உண்மையான சைவ வாழ்க்கையைக் கெடுப்பனவற்றுள் நாடகம்/கூத்தினையும் ஆறுமுகநாவலர் தமது ''நல்லூர்க் கந்த சுவாமி கோயில்' என்ற துண்டுப் பிரசுரத்திற் குறிப்பிட்டுள்ளார். கேளிக்கை வெறுப்பையே. மதச் செந்நெறியாகக் கொள்ளும் ''பியூறிற்றனிச்'' Puritanist) மனப்போக்கினை நாவலர் புரட்டஸ்தாந்தம் வழியாகப்போற்றியிருந்தார். கூத்துநாவலரின் கோபக்கணைக்கு ஆளானது உண்மையெனினும் அதுசமூக ஒருமைப்பாட்டுக் கலை வடிவமாகவும் தொழிற்பட்டதால் அது நின்று நிலைக்கத் தவறவில்லை. ஆனால் அந்நிய ஆட்சி கையளித்த பண்பாட்டு விழுமியங்களும், ஆங்கிலக் கல்வியும் இவை வழியாக பாரம்பரியச் சமுதாயத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் தன்மையும் நாட்டுக் கூத்தினை மிக இழிந்த ஒரு கலையாகவே தள்ளி வைத்தன. ஆங்கிலப் பரிச்சயம் வழியாக வந்து பார்ஸி மரபுடன் இணைந்து நின்ற பம்மல் சம்பந்த முதலியாரின் சபாநாடக மரபே யாழ்ப்பாணத்தில் ஓரளவு சமூகக் கணிப்புப் பெற்றிருந்தது.'

## இலக்கியத்தடம்

என பேராசிரியர் கா. சிவத்தம்பி, அவர்கள் ''வித்தியானந்தம்'' நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

''வெகு வேகமாக மாற்றத்திற்குள்ளாகி வரும் தமிழர் வாழ்வில் பண்டைய இக்கூத்துக்கள் இன்று அதிகம் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. அவற்றின் பழைமை காரணமாகவும் சமூகத்திற்கும் அவற்றுக்கு முள்ள இயைபின்மை காரணமாகவும் அவற்றின் பாமரத் தன்மை காரணமாகவும் இன்று இக்கூத்துக்கள் புறக்கணிக்கப்படினும், கூத்தே நமது நாடக மரபு என்பதை மறந்துவிடலாகாது. இந்தியக் கூத்து மரபு அதன் சகல பிரதேசத் தன்மைகளுடன் இன்றும் காணப்படுவதும் தென்கிழக்காசிய நாடுகளில் அவைகளின் கூத்து மரபு பேணப்படுவதும் சிங்களவர் மத்தியில் அவர்கட்குரிய கூத்து மரபு பேணப்படுவதும் வளர்ச்சியடைந்த ஜப்பான் போன்ற

நமது கூத்து மரபைப்பேண வேண்டும். வளர்க்கவும் வேண்டும் என்று மேற்படி நூலில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறுகின்றார்.

### பாரம்பரிய கலை

எந்தவொரு இனமும் தனது மொழி தனது பிரதேசம் அதன் வளங்கள் என்று அக்கறை கொண்டு பாதுகாக்கும்போது தனது நாகரீகத்தையும் பண்பாட்டையும் பேணிக்காக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஒரு நாட்டின் நாகரீகமும் பண்பாடு கலாசாரமும் அந்த நாட்டின் கிராமப்புற மக்களிடம் தான் அப்படியே உயிர்த்துடிப்புடன் இருக்கின்றது.

இறக்குமதி செய்யப்படும் பல்வேறு காரண காரியங்களால் சிதைவுகள் ஏற்பட்டாலும் கூட கிராமங்களே இவற்றின் பொக்கிஷங்கள். விவசாயத்தில், கடற்றொழிலில் எமது ஈழப் பகுதியில் வன்னியும், மட்டக்களப்பும், மன்னாரும், திருக்கோணமலையும் எவ்விதம் முக்கியம் பெறுகின்றனவோ அவ்விதம் நாட்டுக் கூத்து மரபு காரணமாக மட்டக்களப்பும் வன்னியும் நாட்டுப்பாடல் காரணமாக மட்டக்களப்பு, மன்னார் போன்ற பகுதிகள் முக்கியம் பெறுகின்றன.

எவ்விதமான கலப்படமும் இல்லாத இயற்கையும், இயல்பான சுபாவமுள்ள மக்களும் நிறைந்த கிராமத்து மக்களின் மடியில் வளர்ந்த அருமையான கலையே கூத்தாகும். அவர்களின் இயல்பான குணத்தினை வாழ்க்கைமுறையினை பண்பாடு முதலியவற்றையெல்லாம் கூத்து வெளிப்படுத்துகின்றது.

பன்னெடுங்காலமாக எந்த விதமான தொடர்புச் சாதனங்களும் இல்லாமல் தங்களது மேலான முயற்சியினால் கிராம மக்களால் வளர்த்து வந்த கூத்துக்கலை பின்னாளில் நலிவு பெறத் தொடங்கினாலும் அதனை அப்படியே விட்டு விடமுடியாது.

### தற்போதைய நிலை

நாவாந்துறை, பாஷையூர் போன்றபகுதிகளிலும் கூத்துக்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படுகின்றன.

பல வருடங்களுக்கு முன்னர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் இப்போது கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. மெற்றாஸ் மெயில் பாஷையூர் தேவதாசன்... (வேறு சிலரும் உள்ளனர்) என்று அக்கறை உள்ள சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு சில குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட சிலருடைய முயற்சியினால் கூத்து முழுமையாக மறுமலர்ச்சி அடைந்து விடமுடியுமா?

## "அழலாடிக்குட்டன்"

ஒவ்வொருவரும் தத்தமது இயல்புகளுக்கு ஏற்றமாதிரியே செயற்படமுடியும். எனவே அவர்களது முயற்சியும் அவர்களது வெற்றியும் சில குறிப்பிட்ட பகுதிகளுக்குள்ளேயே நின்று விடும்.

ஆகவே எமது பாரம்பரியக் கலை எமது இனத்தின் தனித்துவமான இக்கலை முழுமையாக சகல துறைகளிலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்

பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரைக் கூத்தின் செயற்பாடு விரிவுபெற்று அக்கலை முன்னணிக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இலகுவாக மக்களை தன் வசம் இழுத்துக் கொள்ளும் இக்கலை வடிவம் மூலம் நாம் மக்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய, செல்லவேண்டிய செய்திகளைக் கொண்டு செல்ல முடியும். எனவே எமது பாரம்பரியக் கலையின் மூலம் எமது தேவையினைப் பூர்த்தி செய்ய முனைவது பிரயோசனமான ஒரு செயலாகும்.

கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் தின விழாவில் இவ்வாண்டு ''கூத்தும்'' ஒரு போட்டியாக சேர்க்கப்பட்டு உள்ளது திருப்தியான ஒரு செயற்பாடாகும்.

### நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள்

இந்தத் தலைப்பிலானதனது நூலில் காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஈழத்திலே தமிழ் நாடகம்'' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் சில பகுதிகள்.

''ஈழத்திலே இன்று வழங்கும் நாடகங்களை மூன்று பிரிவாக நோக்கலாம். நாட்டுக் கூத்து, அண்ணாவி மரபு நாடகம் அல்லது இசை

ளின் விலைமதிக்கமுடியாத கலைச்செல்வமாக இருந்துவருகிறது நாட்டுக் கூத்து, நாட்டுக் கூத்து மூலம் பல ஆண்டுகளாக மக்கள் இன்பம் பெற்று நிறைமனதுடன் வாழ்ந்தனர். ஈழத்திலே பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மன்னார், சிலாபம் ஆகிய பிரதேசங்களிலே தென்மோடிக் கூத்துக்கள், வடமோடிக் கூத்துக்கள் விலாசங்கள் சபாக்கள் வாசாப்புக்கள் போன்றன ஆடப்பட்டு வந்தன. ஆனால் இன்று இவற்றை ஆடுவோர் தொகை குறைந்து விட்டது...

...நாட்டுக் கூத்து ஆட்டங்களுக்கு இன்றியமையாத தாளக்கட்டுகள் வருங்காலத்துக்குப்பயன்பட வேண்டுமாயின் அவற்றை நல்லமுறையில் விளக்கக் குறிப்புக்களுடன் ஒலிப்பதிவு செய்துபாதுகாத்தல்வேண்டும். நாட்டுக்கூத்துக்குரிய இத்தாளக் கட்டுகளை இசைக்குறிப்புக்களுடன் விரிவான முறையில் அச்சிட்டு வெளியிடுவது நல்ல பலனளிக்கும்... ஒவ்வொரு பிரதேசத்திலும் நாட்டுக் கூத்து விழாக்களை நடத்தி, ஒரு பகுதிச் சிறந்த நாடகங்களை மற்றப் பகுதிகளில் ஆட ஒழுங்கு செய்தல் வேண்டும். அப்போது தான் விழிப்புணர்ச்சி பெருகி ஆக்கப்பாதையில் இக்கலை முன்னேறும்

இன்று ஆடப்படும் நாட்டுக் கூத்துக்கள் நாடகத் தன்மை இழந்து மக்களைக் கவரத் தவறிவிடுகின்றன. இதற்குக் காரணம் கூத்தில் ஆட்டம் இசை நடிப்பு முதலியவற்றில் இணைப்பு இல்லாமையே இதனால் கூத்துக்கள் வெறும் ஆட்டங்களாகவே முடிகின்றன. நாடகப் பாத்திரங்களை பக்கப்பாட்டுக்காரர் அண்ணாவிமார் ஆகியோர் பாடும் போது இணைப்பு இருக்கவேண்டும். பாட்டு இசையை அமுக்காத வகையில் மத்தள அடியமைய வேண்டும் பாத்திரங்கள் ஆடிப் பாடினால் மட்டும் போதாது நடிக்கவும் வேண்டும் ஆட்டமும் பாட்டும் நடிப்பும் சேர்ந்து கதையையும், பாத்திரங்களின் குணத்தையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த வேண்டும் உடைகளும் ஒப்பனைகளும் பாத்திரங்களுக்கேற்ப அமைதல் இன்றியமையாதது. எனவே ஆடல்பாடல் நடிப்பு உடை ஒப்பனை முதலியவற்றில் ஒருமைப்பாட்டினைஉண்டாக்க முடியுமாயின் நாட்டுக் கூத்துப் பார்ப்போர் உள்ளத்தினையும் கவ

ஆயிரம் ஆயிரமாய்
வந்தனர் சேர்ந்தனர் வன்முறையாடினர்
வாழ்ந்திட வேதமிழர்
பந்தென வுருண்டன பகைத்திடுவோர் தலை
பயந்தனர் எதிரணியார்
விந்தை யிதுவென வியந்தனர் ஓடி
விரைந்தனர் உயிர்க்கஞ்சி.

அதிரடித் தாக்குதல் அடிக்கடி நிகழ்ந்தன
ஆயுதப் படை மீது
பதறியடித்துப் பாய்ந்தனர், மாய்ந்தனர்
பறிகொடுத்தார் துவக்கு
சிதறிநொ ருங்கின காவல்நி லையங்கள்
சீருடைக் காவலர்கள்
குதறிய துகளாய் குப்பை யெனஉடல்
கூட்டிக் குவித்தெடுத்து,-

'பொலித்தீன்' பைகளில் பொதிந்து அடைந்து
போயின வேறுசிலர்
சலித்துப் பயந்து சரணடைந்தார்கள்
சக்தியி ழந்தவராய்
அழித்துப் பழகிய ஆளுமினத்தவர்
அவரவர் பகுதிகளில்
பழிக்குப் பழியென பழிநடவடிக்கை
பயங்கரமாய் எடுத்தார்.

— தொடரும்

## வள்ளுவ வாக்கியம்

உள்ளம் !

ஒருபோதும் தாழ்ந்த உள்ளத்தவனாகாதே! உன் நினைவுகள் உயர்ந்திருக்கட்டும். மனத்தினால் வறியவனாகாதே! மனக்குறையும் தளர்வும் உனக்குரியவை அல்ல. ஆம், நீ உள்ளத்தால் உயர்ந்திடு. ஏனைய உயர்ந்திடவே செய்யும்.!

அந்தத் தாமரைக் குளத்தைப் பார்! பெருமழை போய் விட்டது. கரையோரப்புல்லும் இறுகிய சேறும் இதனை உணர்த்துகின்றன. அங்கு சிறுமலர்கள் இருப்பது உண்மை. ஆயினும் அழகைத் தருவதும் எம் கண்ணைக் கவர்வதும் நீரில் நடுக்குளத்தே நின்று அசைந்தாடும் பெருமலர்கள் அல்லவா? செந்தாமரைக் குளத்தின் பூரண அழகு அங்கு பொலிகிறது! அதன் காரணம் என்ன? அங்கு நீர் நிறைந்துள்ளது. குளம் ஆழமாயுள்ளது. அதற்கேற்ப தாமரையின் தண்டுகள் உயர்ந்து எழுகின்றன! நிறைந்த செந்தாமரைகளைத் தாங்கிய வண்ணம் அசைந்தாடி நிற்கின்றன!

நீர் நிறைந்த தாமரை போல உன் நெஞ்சமும் ஆகட்டும். நினைவுகள் உயரட்டும்! உள்ளத்தால் நீ உயர்ந்தோனாகு! உன் வாழ்வு உயரும்!

குறள் (595)

**நாக. பத்மநாதன்** □

எமது தொன்மை மிக்க கூத்து வடிவமானது நலிவு பெற்றமைக்கு-

''யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பெறுமானப்பட்டியலில் நாடகம் கூத்து எனும் கலைகள் மிக்க குறைந்த ஓரிடத் படுவதும் சிங்களவர் மத்தியில் அவர்கட்குரிய கூத்து மரபு பேணப்படுவதும் வளர்ச்சியடைந்த ஜப்பான் போன்ற நாடுகளிற்கூட ஜப்பானியக் கூத்து மரபுகள் பேணப்படுவதும் ஈழத்தமிழர் அறிய வேண்டியவையாம், நாமும் கினாலும் அதனை அப்படியே விட்டு விடமுடியாது.

□ **தற்போதைய நிலை**

இன்றைக்கு மன்னாரிலும் மட்டக்களப்பிலும் முல்லைத் தீவிலும், யாழ்ப்பாணத்தில் கும் நாடகங்களை மூன்று பிரிவாக நோக்கலாம்.
நாட்டுக் கூத்து, அண்ணாவி மரபு நாடகம் அல்லது இசை நாடகம், தற்கால முறையில மைந்த நாடகம். கிராமப்புறத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்க லியவற்றில் ஒருமைப்பாட்டினைஉண்டாக்க முடியுமாயின் நாட்டுக் கூத்துப் பார்ப்போர் உள்ளத்தினையும் கவனத்தினையும் கவரும் ஆற்றலைப் பெற்று வளர்ச்சியடையும்'' □

## விண்வெளி விஞ்ஞானம்

வெள்ளியைத் துப்பறிந்து வந்த விஞ்ஞானிகள், இதுவரையில் போதிய துப்புக்களைச் சேகரித்துவிட்டார்கள். இவற்றைக் கொண்டு வெள்ளியின் சீதோஷ்ண நிலை, தோற்றம் என்பவற்றைப் பற்றி, தெளிவான விபரங்களை ஓரளவுக்குக் கூறக் கூடியதாக இருக்கிறது.

வெள்ளியின் சூழல் மிகவும் கனமானது, பூமிக்கு உள்ள சூழலிலும் பார்க்க வெள்ளியின் சூழல் சுமார் முப்பது-நாற்பது மடங்கு செறிவுள்ளது. ஆகவே சாதாரண இளந் தென்றல் கூட, வெள்ளியிலே பெரியதோர் புழுதிப் புயலைக் கிளப்பி விடும் வல்லமை உடையதாக இருக்கும். வெள்ளியின் தரை மட்டத்தில் இருந்து சுமார் நாற்பது மைல் உயரத்தில், தொங்கிக் கொண்டிருக்கிறது. ரகமாக வியாபத்திருக்கும் வெள்ளியின் முகிற் படலம். இந்த முகிற் படலத்தின் மேற்பாகத்திலே பனிப் பளிங்குகள் உள்ளன. முகிற் படலத்தின் கீழ்ப்பாகத்தில் நீர்த்துளிகள் உண்டு. முகில்களுக்கிடையிலே சிறிது இடைவெளி தோன்றினால், அந்த இடைவெளிக் கூடாக மேலே தெரியும் ஆகாயம் – மஞ்சள் கலந்த பச்சை நிறமாகத்தெரியும். சூரியன் எப்போதாவது அருமையாகத் தெரியக்கூடும். அப்படித் தெரியும் நேரங்களில் அது. தடித்த செங்கல்லுச் சிவப்பு நிறமாகத் தெரியும். வெள்ளியிலே வன்மையானபுயல் அடிப்பதனால், மேலே இருக்கும் முகில்கள் அலையலையாகப் புரளும் எப்போதாவது, இருந்தாற் போலிருந்து, புரளும் முகில்களில் இருந்து மழைத்துளிகள் கீழ்நோக்கி விழுந்தாலும், அவை நிலத்தை வந்து அடையும் முன்னதாகவே, வரட்சியாக உஷ்ணமான சூழலில் ஆவியாகி மேலெழுந்து சென்றுவிடும். வெள்ளியின் தரைப் பிரதேசத்தில் மழைத்துளிகள், இன்னும் பலகாலத்துக்கு,- ஒரு போதும் விழமாட்டா. பூமியிலே கூட, பல லட்சம் வருடங்களுக்கு முன் பூமியை நோக்கிப் பெய்த மழைத்துளிகள், நிலத்தை அடைவதற்கு முன்பே, நீராவியாகி விட்டன. படிப்படியாகவே, பல ஆயிரம் வருடங்கட்குப்பின், மழைத் துளிகள் பூமியிலே விழுந்தன.

வெள்ளியின் மேற்பரப்பு, பெரும்பாலும் வழவழப்பான தன்மை உடையது, ஐதான, பவுடர் போன்ற துல்லியமான துகள்களினால் ஆனது இந்தத் தூசுகள், மங்கலான சிவப்பாக, சாம்பல் பூத்த தணல் போல, மிளிர்ந்து கொண்டிருக்கும். எந்த உயிரணுக்களையும் அழித்துக் கருக்கி விடக் கூடிய உஷ்ணம் உடையதாக இருக்கும். தரையில் இருந்து உயர்ந்து தோன்றும் பாறைப் பிரதேசங்கள், காற்றினால் அரிக்கப்பட்டவையாக, துளை துளையான தோற்றம் கொண்டவையாக இருக்கும். பூமியிலே வனாந்தரப்பிரதேசங்களில், மண்ணை அள்ளி வீசும் காற்றுள்ள இடங்களில், உள்ள பாறைகள் எப்படித் தோன்றுமோ அவ்வித தோற்றம் கொண்டனவாக வெள்ளியில் உள்ள பாறைகளும், அரிக்கப்பட்ட தோற்றத்துடன் விளங்கும், இவை ஓரளவுக்கு ஊகிக்கப்பட்ட முடிவுகளேயன்றி, நூற்றுக்கு நூறு உண்மையானவை எனக் கொள்வதற்கு இடமில்லை.

## விண்வெளி வினோதம்

வெள்ளியின் வெளிப்புறத் தோற்றம் எப்படியிருக்கும் என்பதை இதுவரை கவனித்தோம். அதனுடைய உட்பகுதி எத்தகைய அமைப்புடையது என்பதை இனிப் பார்ப்போம்.

மரீனர்-இரண்டு, எடுத்துச் சென்ற உபகரணங்கள்மூலம், வெள்ளியின் காந்தப் பிரதேசம் மிகவும் பதவீனமானது, அல்லது அங்கே காந்தப் பிரதேசமே முற்றாகஇல்லை என அறிந்து கொள்ள முடிந்தது. இதிலிருந்து, பூமியின் மையப் பகுதியில் உள்ளது போன்ற திரவமயமான இரும்பு, வெள்ளியின் மையப்பகுதியில் கிடையாது என்பது புலனாகிறது. வெள்ளி உருவம் பெற்ற காலத்தில், அது தோன்றுவதற்கு உதவியாக இருந்த வஸ்துக்களில், இரும்பும் அதிகமான அளவிலே இருந்திருக்க வேண்டும். இந்த இரும்பு காலகதியில், வெள்ளியின் நடுப்பகுதியைச் சென்றடையாது விட்டால், மேற்பரப்புக்கு மிகச் சமீபமாக, அந்த இரும்பு தங்கிவிட்டிருக்கக் கூடும். மேற்பரப்புக்கு மிகச் சமீபமாக இருந்த காரணத்தினால், அது பிராண வாயுவுடன் சேர்ந்து விட்டிருக்கலாம். பிராணவாயு முழுவதும் இரும்போடு இணைந்து சேர்ந்துவிட்டபடியினால் பிராணவாயு இன்னொரு வஸ்துவுடன் சேர்ந்து விடும் வரை, அது வெகு சுறுசுறுப்புடன், துணையைத் தேடி இணைந்து கொள்வதற்காக இயங்கிக் கொண்டே இருக்கும் வேதியலில் பிராணவாயுவுக்கு - சுறுசுறுப்பான வாயு என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இரும்புடன் பிராண வாயு கலக்கும் போது, இரும்பு ஒக்ஸைட் - துரு - கறள் உண்டாகிறது. பிறபொருட்களுடனே கலந்து கொள்வதில், பிராணவாயு, பிகு பண்ணிக் கொள்வதில்லை. தனியாக இருக்க விரும்பாமல், பிறபொருட்களுடன் பிராணவாயு கலந்து விடுவதனால், வாயு மண்டலத்தில் அதனுடைய அளவு குறைந்து விடுகிறது. மழை, காற்று என்பவற்றின்

**உடுவில் விவியன் நமசிவாயம்**

தான், வெள்ளியின் சூழலிலே பிராணவாயுவே இல்லாமற் போய்விட்டது. பூமியின் வாயு மண்டலத்தில், பிராண வாயு ஒரு பங்கும் நைதரஸன் என்ற உப்பு வாயு நான்கு பங்கும் கலந்துள்ளன. இவற்றுடன் சிறிதளவு நீராவி, கரியமிலவாயு. ஆர்கன், நியோன், கிறைற்றன், ஸீனோன் ஆகிய வாயுக்களும் கலந்து காணப்படுகின்றன. நமது வாயுமண்டலத்தின் சிறப்பு என்னவென்றால், அதிலே உள்ள பிராண வாயு அதிகமாக இருப்பது தான். பிராணவாயுவில் ஒரு அதிசயமான, சிறப்பான, மனிதத்தன்மையான ஒரு குணம் உண்டு. பிராணவாயு ஒரு போதுமே தனித்திருக்க விரும்புவதில்லை. ஏதாவது ஒரு பொருளுடன் சேர்ந்து இருக்கவே அது விரும்புகிறது. செயலால், கற்பாறைகள் புரை புரையாகக் கலைந்து விடுகின்றன. அப்படிக் கரைந்து விடும் போதெல்லாம், காற்றில் இருக்கும் பிராணவாயுவும்அந்தப்பாறைகளுடனே கரைந்து விடுகிறது. இப்படியிருந்தும் கூட எங்கள் வாயு மண்டலத்தில் உள்ள பிராணவாயுவின் அளவு குறைந்து விடாமலே இருக்கிறது. நாள் தோறும் அது மீண்டும்மீண்டும்உற்பத்தியாகிறது. பூமியில் உள்ள தாவரவகைகள் தம்மைச் சூழ உள்ள கரியமில வாயுவை உட்கொண்டு, பிராணவாயுவை வெளியிலே விடுகின்றன. இறந்து, அழுகி, அழிந்து போகும் தாவர வகைகளில் இருந்து கரியமிலவாயு உற்பத்தியாகிறது. வாயு மண்டலத்

(8ஆம் பக்கம் பார்க்க)




# அடிபணியா எரிமலைகள்

❀ -சாளி

'இராணுவ' பூட்சுகளின் தடயங்களும், சேறுமாக அந்த நடைபாதை காட்சியளித்தது. இடையிடையே சிறுசிறு புல், பூண்டுகள், பட்டிப் பூச்செடிகள். காங்கேசன்துறை வதை முகாமின் முட்கம்பி வேலிகளிற்கிடையேதான் இந்த நடைபாதை இருந்தது. அதிலும் எமது ''புளொக்''க்கு முன்னால் அதிக அளவில் கழிவுநீர் தேங்கிக் கிடந்தது. இந்தக் கழிவு நீர்க்'குளத்தின்' விழிம்பில் நைப்புடைக்கப்பட்ட நிலையில் எமது தோழன்-ஓர்-கைதி- மயங்கிய நிலையில் கிடந்தான்.

மேஜர் லக்கன்பாலின் உரல் போன்ற கைகளும் கால்களும் தடை ஏதுமின்றி அவனின் உடலிலே நர்த்னமாடியிருந்தன. இடையிடையே இரத்தக்கசிவுகள் ஏற்பட்டு அந்த இடங்களில் இலையான்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

முட்கம்பிகளால் அடைக்கப்பட்ட யன்னல்களை ஊடுருவி எங்கள் பார்வை எமது அடியுண்ட தோழனின் உடலிலே குத்தி நின்றன.

அவன்எமது'-புளொக்''கைச் சேர்ந்தவன் அல்ல. வேறொரு 'புளக்'கிலிருந்து இழுத்து வரப்பட்டு எமக்கு காட்ட வேண்டுமென்பதற்காக ஈவிரக்கமின்றி அடிக்கப்பட்டான்.

ஏதோ பெரிய இமாலய சாதனையொன்றைப் புரிந்துவிட்டவன் போல் இறுமாப்புடன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்ற லக்கன்பாலை பார்த்தபோது எம் ரத்தம் கொதித்தது. உணர்ச்சி வசப்பட்டுக் கதவை இடித்தவர்களை எமது புளக் தலைவர் தடுத்து பின்பக்கத்திற்குஇழுத்துச் சென்றார். நிலமை விளங்கி அமைதியாகக் குமுறிக் கொண்டிருந்தவர்களும், அவனை எதிர்த்து அந்தஇடத்திலேயே அவனிற்கு நெற்றி வெடி வைக்கமுடியவில்லையே என்று ஏங்கியவர்களும், 'ஆ... பாவம் அந்த அப்பாவிப் பிள்ள' என்று....அனுதாபப்

சூரியன் முகில்களால் இழுத்து தன் முகத்தை மூடிக் கொண்டான். இறைச்சிக்காக வெட்டப்படப் போகின்ற ஆடுகள் எமது நண்பன் இட்ட அவலக் குரலால் கலைவு கண்டுபோயிருந்தன. அருகே இருந்த பனங்கூடலில் உள்ள பறவைகள் சிறிது சிறிதாக வந்து தமது கூடுகளை அடைந்து கொண்டிருந்தன.

பாவம்....அவைகளுக்குத் தெரியாது இங்கே ஓர் அப்பாவி ஜீவன் எழுப்பிய அவலக் குரல் பற்றி.

யன்னல்களின் அருகே நின்றவர்கள் தத்தமது அறைகளுக்குச் செல்லத் தொடங்கினர். சிலர் விடாப்பிடியாக அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தனர்.

லக்கன்பால் தன் அலுவலகத்திற்கு போய் விட்டான். ஆனால் எம் தோழன் இன்னமும் மயக்கம் தெளிந்து எழுந்தபாடில்லை. அவன் எழுந்து ஓடிவிடுவான் என்றெண்ணி அவனைச் சுற்றி மூன்று சென்றிகளை விடத் தெரிந்த லக்கன்பாலிற்கு அவனிற்கு தண்ணீர் தெளிக்கச் சொல்லத் தெரியவில்லை.

நாம் எமது புளக்கிற்குப் பொறுப்பான ஓர் ராணுவத்தினரை அழைத்து எம் தோழனின் நிலைபற்றிக் கூறி அவனுக்கு சிகிச்சை செய்யுமாறு கூறினோம். முடியாதென்று இறுமாப்புடன் பதில் வந்தது. சரி உங்களால் முடியாவிட்டாலும் எங்களையாவது அனுமதியுங்கள் என்று கேட்ட போது அவர்கள் சொன்ன பதில் காந்தியின் கல்லறை வரை கேட்டிருக்க வேண்டும்.

''அவன் தானாக எழும்பி நடந்து போனால் போகட்டும். இல்லையென்றால் எத்தனை நாளுக்கென்றாலும் அப்படியே கிடக்கட்டும். சாப்பாடு கூடக் கொடுக்கக் கூடாது''.

காந்தீயத்தின் அத்திவாரங்

குறைந்தது ஓர் மனித உயிராகக் கூடக் கருதாத மேஜர் லக்கன்பால் எமது முகாமை பொறுப்பேற்க வந்த போது கூறிய வார்த்தைகள் எங்களின் காதுகளில் இடிகுண்டாய் முழங்கியது.

'நாங்கள்உங்களைஒரு நிம்மதி கைதிகளாகப்பார்க்கவில்லை. இங்கு சிறை வைக்கப்பட்டிருக்கவும் இல்லை. சில அரசியற் காரணங்களுக்காகவே நீங்கள் இங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எந்தக் குறையும்வராது பாதுகாக்கவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்''.

அப்போதுநாங்கள்விட்டநிம்மதிபெருமூச்சுக்கள்எத்தனை. இவனாவது நல்லாக நடப்பான் என்றே எண்ணினோம். தொடர்ந்து வந்த மேஜர்கள் உனக்கு நான் போட்டிஎனக்கு நீ போட்டி என்றே எங்களில் தங்கள் பலத்தைப் பிரயோகித்துக் கொண்டிருத்தனர். அந்த அழுத்தங்களில் இருந்து ஒரு விடுதலை கிடைத்ததாக எண்ணிய எங்களின் மனக் கோட்டைக்கு லக்கன்பாலின் முதலாவது தாக்குதல் வெடி வைத்துத் தகர்த்தது.

லக்கன்பாலின் சேட்டைகள் அட்டகாசங்கள், அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள் பற்றி இடையிடையே செய்திகள் வந்த வண்ணமிருந்தன. எமது புளக்கிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது பக்கத்து புளக்குகளிலிருந்து ஆட்களை அழைத்துக் கொண்டு போவார்கள். வரும்போது தலையில், கையில், காலில் இரத்தம் வழிந்தோடும். ஆகக் குறைந்தது அழுது கொண்டாவது போவார்கள்.

பெரும்பாலானவர்களுக்கு கைகளைக் கட்டிவிட்டே அடிப்பது அந்த அரக்கனின் வழக்கம். அதுதான் அவனின் வீரம்.

> *சூரியன் முகில்களால் இழுத்து தன் முகத்தை மூடிக்கொண்டான். இறைச்சிக்காக வெட்டப்படப் போகின்ற ஆடுகள் எமது நண்பன் இட்ட அவலக் குரலால் கலைவுகண்டு போயிருந்தன. அருகே இருந்த பனங்கூடலில் உள்ள பறவைகள் சிறிது சிறிதாக வந்து தமது கூடுகளை அடைத்துக் கொண்டிருந்தன.*

வெளியே ஆயுதபாணிகளாகத் திரியும் எங்களின் தோழர்களைச் சந்திக்க முடியாத ''அப்பாவி'' ராணுவ அதிகாரிகளுக்கு நாங்களே 'போடுதடி' ஒரு தாக்குதல் நடந்து விட்டால் அவர்கள் எம் முன்னே வந்து போடும் கூச்சல்....அப்பப்பா.. உலகமே இந்தியாவின் ஆட்சியின் கீழ் தான் என்பது போலிருக்கும்.

ஒரு தடவை எம்மைச் சந்தித்த மேஜர் ஜெனரல் சர் தேஷ்பாண்டே 'ஒரு போதும் எங்கள் பிரதமர் பிரபாகரனின் காலில் வந்து விழமாட்டார்' என்று கோபமாகக் கர்ஜித்தார்.

இந்தியப் பிரதமரை வந்து எங்களின் தலைவரின் காலில் விழு என்று நாம் எங்காவது கேட்டோமா? எம்முடன் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடாத்துவது 'இந்தியப்பிரதமர்' வந்து எமது காலடியில் விழுவதற்கு நிகரானது என்று எண்ணி

ஒரு தடவை எமது போராளிகள் தெருவால் வந்து கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது எதிரே ஓர் இந்திய இராணுவ அணி வந்து கொண்டிருந்தது. உடனே எமது போராளிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு ஓடியிருக்கிறார்கள். அப்போது ஒருவரின் செருப்பு தவறுதலாக மதிலுக்கு வெளியே விழுந்து விட்டது. அந்தச் செருப்பை எடுத்து அதற்கு அளவான காலை உடையவனைப் பிடித்து வைத்திருக்கும் இந்திய ராணுவத்தில் லக்கன்பால் ஒரு மேஜராக இருப்பதில் எந்தத் தவறுமேஇல்லை.

எமது புளக் லக்கன்பாலிடமிருந்து தப்பிக் கொண்டே வந்தது. லக்கன்பாலிடம் அடி வாங்கியவர்கள் அதிசயமாக 6-7 பேரே இருந்தனர். ஒரு தடவை - அன்றைய நாள் மறக்க முடியாதது.(15-09-89 வெள்ளி) விசாரணைக்குப் பொறுப்பான மேஜர ஜெயராம் (ஓர் தமிழன் - இப்படி




மேஜர் ஜெயராம்

கைகுலுக்கி 'மச்சான் நீ விடுதலையாகப் போறாய்... வாழ்த்துக்கள்' என்று சந்தோஷப்பட்டார்கள். நான் விடுதலை செய்யப்படப் போகிறேனோ இல்லையோ அவர்கள் பட்டசந்தோஷம்என்னை மெய் சிலிர்க்க வைத்தது.

சுயநலமேயற்ற சுதந்திர புருஷர்களை சிறையிலிட்ட இந்திய இராணுவத்தை எப்படித் திட்டித் தீர்ப்பது?...

விடுதலை என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விண் மீனாய் இருந்தது. எனது நண்பர்கள் சொன்னதால் எனக்குக் கூட அந்த அற்ப ஆசை மனதில் துளிர் விட்டது.

வெளியே போவது மகிழ்ச்சி தான்...ஆனால்...

என்னுடன் இருந்த என் நண்பர்கள். நான் சுகவீனமுற்றிருக்கும் போதும் சரி, மற்ற எந்தத் தேவையானாலும் சரி என்னோடு நிழல் போல நின்ற என் உடன் பிறவா உயிரை நினைப்பதா,

என்னோடு 5வருடங்களுக்கு மேல் இயக்கத்தில் ஒன்றாக இருந்து பழகிய தோழரகனை நினைப்பதா? அல்லது எனக்கு ஆங்கில அறிவையும் பொது அறிவையும் ஊட்டிய ஆசிரியர், இயக்க நண்பரைநினைப்பதா?.. பல பல யோசனை

மேஜர் ஜெயராமின் அலுவலகம்..,

''உண்மையே பேசுங்கள்'' ...''உங்கள் இயக்கத்தைக் காட்டிக் கொடுப்பது தேசத்துரோகமல்ல''...'நீங்கள் இயக்கத்தில் சேர்ந்தது தவறு தான். அத் தவறு நீங்கள் சொல்லும் உண்மையினால் நீக்கப்படும்'...போன்ற வாசகங்கள் சுவர்களில் தொங்கின.

அதையடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரைபடமும் சில ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட குறியீடுகளும்.

என்னை உட்காரும்படி ஒரு தமிழர் சொன்னார். சிறிது நேரத்தில் மேஜரிடம் இருந்து அழைப்பு வந்தது.

மேஜர் ஜெயராம்...

கையில் ஓர் சுங்கான் புகைந்து கொண்டிருந்தது. தலைக்கு மேலே சீலிங்பான் கடகட ஓசையுடன் மெதுவாக சுழன்று கொண்டிருந்தது. அலுவலக மேசையில் சிலபைல்கள், கலர் கலராக பேனாக்கள், ரெலிபோன், கண்ணாடிக்கு கீழே வித்தியாசமான போஸ்களில் தலைவரின்படங்கள்.



மேஜர் லக்கன்பால்

மிகவும் கிழட்டுத் தோற்றம். தலை நரைத்திருந்தது. வயது முதிர்ச்சியாலா, அத்

''ஓம்''

''நீ படமெல்லாம் நல்லாப் போடுவியா?''

''சுமாராப் போடுவேன்''

எனக்கு விளங்கி விட்டது. இது விடுதலை விசயம்இல்லை விடுதலைக்கே வேட்டு வைக்கப் போகும் தறுதலை விசயம் என்று.

''நான் சொவ்லுவதை கவனமா கேளு, தோளில துவக்கு வைச்சபடி பிரபாகரன், அவன் பின்னாலே ஒரு...ம்...15 பசங்க...அவங்களும் துப்பாக்கி வைச்சபடி... அப்ப...பிரபாகரன் இன்னா யோசிக்கறார்னா...தனக்குப் பின்னால ஒரு பத்துப் பதினைஞ்சு செம்மறிங்க வர்ற மாதிரி...இதை அப்பிடியே அந்தப் படத்தில காமிக்கணும்...நீ இதுக்கு மின்னாடி வரிச்ச படங்களையெல்லாம் நா பார்த்திருக்கேன். அதைப் போல இதையும் போடணும்' ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

பிரபாகரனுக்குப் பின்னால் போகும் இளைஞர்களை செம்மறிகள் என்று நினைக்கிறாரா பிரபாகரன்? அதை தான் என் கையால் கீற வேண்டுமாம். இதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஓர் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தேன். இதுவரை பெரிய பிர...ன ஒன்றும் வராது என்று இருந்த எனக்கு இப்போது நல்ல பிரச்சனை ஒன்று வந்துவிட்டது.

எமது புளக் தலைவரிடம் நான் நடந்ததைத் தெரிவித்தேன். மீண்டும் ஜெயராம் என்னைஅழைத்தான்-மிரட்டினான்-உன் ''பைல்''லில் சிவப்பு அடையாளம் போடப் போகிறேன். போட்டால் 5 வருடத்திற்கு உன் ஃபைலை திறக்கவே மாட்டேன். விடுதலை கிடைக்கவே கிடைக்காது ஒழுங்காக நா சொல்றபடி கீறு-சீக்கிரம் விடுதலையாகலாம்'' என்றெல்லாம் உளறினான்.

குறிப்பிட்ட ஒரு சிலருக்கா பிரபாகரன் தலைவர். தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் தலைவர் அல்லவா அவர். அவரைப் பற்றி கேவலமாகக் கீறினால் நான் தேசத் துரோகி அல்லவா?

5 வருடங்கள் சிறையில் இருப்பதற்கான ஆயத்தங்களை மேற் கொள்ளத் தொடங்கினேன்.

பின்குறிப்பு;- ஜெயராமின் தலை நரைத்திருப்பது வயது

றிக் கொண்டிருந்தவர்களும், அவனை எதிர்த்து அந்தஇடத்திலேயே அவனிற்கு நெற்றிவெடி வைக்கமுடியவில்லையே என்று ஏங்கியவர்களும், 'ஆ... பாவம் அந்த அப்பாவிப் பிள்ள' என்று....அனுதாபப்பட்டவர்களும், சாற்மாறி வீசும் ஏன்ற நம்பிக்கையோடு ஆளுக்கொரு மூலையில் ஒதுங்கினோம்.

டும். இல்லையென்றால் எத்தனை நாளுக்கென்றாலும் அப்படியே கிடக்கட்டும். சாப்பாடு கூடக் கொடுக்கக் கூடாது''.

காந்தீயத்தின் அத்திவாரங்களை உசுப்பும் அவலட்சணமான இந்தக் கட்டளையை இட்ட மேஜர் லக்கன்பால், எமது தோழனை ஆகக் விழு என்று நாம் எங்காவது கேட்டோமா? எம்முடன் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடாத்துவது 'இந்தியப்பிரதமர்' வந்து எமது காலடியில விழுவதற்கு நிகரானது என்று எண்ணிவிட்டார் ஜெனரல். (ஆனால் பின்னர் மூக்குடைந்து கொண்டு வெளியேறுவது எதைப் போல் உள்ளதோ) வாங்கியவர்கள் அதிசயமாக 6-7 பேரே இருந்தனர். ஒரு தடவை - அன்றைய நாள் மறக்க முடியாதது.(15-09-89 வெள்ளி) விசாரணைக்குப் பொறுப்பான மேஜர ஜெயராம் (ஓர் தம்ழன் - இப்படி எழுதவே எனக்கு வெட்கமாக உள்ளது) என்னை அழைத்தான் என் நண்பர்கள் எல்லாம் வந்து எனக்குக் மேல் இயக்கத்தில் ஒன்றாக இருந்து பழகிய தோழரகளை நினைப்பதா? அல்லது எனக்கு ஆங்கில அறிவையும் பொது அறிவையும் ஊட்டிய ஆசிரியர், இயக்க நண்பரைநினைப்பதா?.. பல பல யோசனைகள் என் மனதில் உதித்தாலும்,..விடுதலை ஆகப்போகிறேன் என்று என் மனம் ஆர்ப்பரித்தது.

மேஜர் லக்கன்பால்

மிகவும் கிழட்டுத் தோற்றம். தலை நரைத்திருந்தது. வயது முதிர்ச்சியாலா, அத்துடன் கூடிய அறிவு முதிர்ச்சியாலா என்பதை சிறிது நேரத்தில் கண்டுபிடித்து விடலாம். ''நீ 'டி' புளொக் தானே?''

5 வருடங்கள் சிறையில் இருப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கினேன்.

**பின்குறிப்பு;-** ஜெயராமின் தலை நரைத்திருப்பது வயது முதிர்ச்சியால். □

# படிக்காத மேதை

விஞ்ஞான மேதை ஐன்ஸ்ரன் ஒரு முறை ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். வண்டி ஒரு நிலையத்தில் வந்து நின்றது. அங்கே ரயில் நெடு நேரம் நிற்கும் என அறிந்து, அவர் ஏதாவது சாப்பிட்டு வர எண்ணி நிலையச் சிற்றுண்டிக் கடையை நோக்கிச் சென்றார்.

'' சாப்பிட என்ன இருக்கிறது?'' என்று, வெயிற்றரைக் கேட்டார்.

அவன் தயாராக இருக்கும் சிற்றுண்டிப் பட்டியலை எடுத்து ஐன்ஸ்ரனிடம் நீட்டினான்.

தன் மூக்குக் கண்ணாடியை ரயிலில் வைத்து விட்டு வந்த அவர், அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவரிடம் அந்தப் பட்டியலைக் காட்டி, ''இந்தப்பட்டியலில் என்ன இருக்கிறது என்று படித்துச் சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

அதை வாங்கிப் பார்த்து விட்டு திருப்பிக் கொடுத்து, 'உங்களைப் போலவே எனக்கும் எழுதப் படிக்கத் தெரியாது ஐயா', என்றான்.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதை தனக்குள்ளே சிரித்துக்கொண்டார்.

□

'' யாருக்குமே தொப்பியை எடுக்காத ஒருவரை எனக்குத் தெரியும்.''

''அவர் எப்படி தலைமுடி வெட்டுகிறார்?''

**அரசியல்வாதி**

அதிவேக ஓட்டத்திற்காக ஓர் அரசியல்வாதி கைது செய்யப்பட்டுக் கோட்டில் நிறுத்தப்பட்டார்.

நீதிபதியின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர்—

'' பிரபு...... நான் சற்று வேகமாகவே காரைச் செலுத்தியதாக ஒப்புக்கொள்ளலாம்......, ஆனால் .. நான் ஒரு ஆளுங்கட்சி அரசியல்வாதி....'



நீதிபதி குறுக்கிட்டார்- ''அறியாமை மன்னிக்கக்கூடியதல்ல...''

□

''கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்பது கூட உனக்குத் தெரியாதே!''

''அது காணாமல் போனதும் எனக்குத் தெரியாதே.''

□

**விவசாயியின் மூளை**

நியூயோர்க்கைச் சேர்ந்த ஒரு வியாபார நிறுவனத்தின் அலுவலர் ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்த போது, ஒரு விவசாயி தன் வயலில், கண்கள் சட்டப்பட்ட ஒரு கழுதையைப் பூட்டி உழுது கொண்டிருப்பதைக் கண்டார்.

அந்த விவசாயி, கிட்டியாப் பீற்றோ, கிட்டியாப், கேப், கிட்டியாப், ஓ பில், கிட்டியாப் பில், ஜெப்... என்று சொல்லிக் கொண்டே விவசாய வேலை செய்ததைக் கவனித்த அலுவலர், விவசாயியை அணுகி, '' தயவு செய்து சொல்லு, இந்தக் கழுதைக்கு எத்தனை பெயர்கள்'? என்று கேட்டார்.

''ஒன்றுதான்...... பெயர் பீற்ரோ'' என்றான் விவசாயி.

'' அப்படியென்றால்... ஏன் ஜெல் ... பில்... என்கிறாய்?''

**தொகுப்பு:**
**எஸ். பீ. கே.**

'' ஓ.... அதுவா?'' என்று கேட்ட விவசாயி பின் வருமாறு விளக்கினான்.

'' அது தனியாக இந்த வேலையைச் செய்வதாக உணர்ந்தால் அதனிடமிருந்து வேலை வாங்க முடியாது. ஆனால் அதனுடன் சேர்த்து மற்றும் மூன்று கழுதைகள் வேலை செய்வதாக அது நினைக்குமானால் முழு வேலையையும் அது தனியாகவே செய்துவிடும்.,,

'' என்ன அதிசயசிந்தனை'' என வியந்த அலுவலர், திரும்பிச் சென்றதும், ஒரு குழுவை நியமித்தார் 'கழுதை'யை ஆராய. □

'' கல்வியதிகாரிகள் கடமைக்கு வருவதில் ஒழுங்கில்லை''— செய்தி

'' ஏன்.... அவர்கள் ஆசிரியர்கள் அல்லவே!'' □

**குரங்குதான்**

ஒரு முதலாளி தன் வேலையாள் ஒருவனிடம் கேட்டார்-

'' நான் ஒரு குரங்குபோல் இருப்பதாக ஒருவன் சொல்லிச் சிரித்தான், உண்மையா?''

'' இல்லை... சிறிதும் இல்லை.... நீங்கள் குரங்குபோல் இல்லை... குரங்குதான் உங்களைப் போல் உள்ளது'' என்றான் வேலையாள். □

'' அதிட்டம் வரப்போகிறது'' என்றார் சோதிடர்.

''அதிட்டம் வைத்தால் தான் அதிட்டம் வரும்'' என்றார் புலவர்.

புலவர் சொன்னது சோதிடருக்குப் புரியவில்லை.

'' நீர் வரும் என்று கூறிய அதிட்டம் அது இட்டம் வைத்தால்தானே வரும்'' என்று விளக்கினார் புலவர்.

□

**சிறுவிடயம்**

புகழ் பெற்ற விஞ்ஞானி ஒருவரிடம் அவரது நண்பர் கேட்டார்.

''ஒரேயொரு நீர்வாயுக் குண்டு உலகம் முழுவதையும் அழித்து விடும் என்பது உண்மையா?

விஞ்ஞானி அமைதியாகப் பதிலளித்தார்.

''முடியும் என்பது உண்மை தான், ஆனால் இந்த உலகம் அண்ட வெளியில் சில சிறு கோளங்களில் ஒன்றுதானே!'' □

## அன்பான வாசகர்களே.

□ ஞாயிறுமலர் பற்றிய உங்களது அபிப்பிராயங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

□ படைப்பாளிகள் சிறுகதை, கவிதை மற்றும் ஆக்கஇலக்கியப் படைப்புகள் அனுப்பி மலரின் தரத்திற்கு உயர்வூட்டுமாறு வேண்டுகிறோம்

□ படைப்புக்களை அனுப்புவர்கள் படைப்பாளர்க்குரிய இதயசுத்தியுடன் தங்கள் புனைபெயர்களுடன் சொந்தப் பெயர் முழுவிலாசம் இணைத்திருத்தல் அவசியம்.

□ கடந்த கால நிகழ்வுகளின் பதிவுகள், அனுபவ வெளிப்பாடுகள் இலக்கிய வடிவங்களாக வரவேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் படைப்புக்களை எழுதுமாறு வேண்டுகிறோம்

□ அறிவியல், வரலாறு, அபிவிருத்தி, மற்றும் சமூகவியல் சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

□ சொந்த விருப்பு வெறுப்புக்களையும், காழ்ப்புணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் சகல படைப்புகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஆ-ர்

## இப்படியும் மரணவீடுகள்

□ எஸ். ஜி. கணேசவேல்

ஆண்டுகள் நான்கு அரேபிய வாசம்
மீண்டவர் வந்து மூன்றே நாட்கள்
குண்டுகள் உருவிடக் குருதியும் பெருகிடக்
குப்பறக் கிடந்தார் கோபால் மாமா.

பாவம் கோபால் மாமா அவர்க்குச்
சாவரும் என்றொரு சகுணமும் காட்டலை
கொள்ளிப் பிள்ளையின் குரலைக் கேட்டுக்
கண்களை மூடிட ஆச்சிக் கிழவி
படுக்கையிற் கிடந்து பிசத்தும் காட்சியை
எழுத்தில் செதுக்கிய அஞ்சலைத் தவிர-

எண்பதைத் தாண்டிய ஆச்சியின் கடணை
ஐம்பதைக் கடந்தக் அவள்மகன் முடித்திட
எண்ணுதல் இயல்பே! இதிலெதும் பிழைஅவர்
பண்ணிய தாக யாரே கொள்வீர்?

வீட்டுக்குள் கிடந்தார்... வெளியே இழுத்தனர்
றோட்டில் சுவரொடும் சாத்திச் சுட்டனர்!
(அந்நிய இராணுவம் அமைதி பேணி
சுட்டவர் தம்மொடு றோந்து சென்றது)
யாவரும் அறிவீர் ஞாலமும் அறிக!
சேரபால் இழைத்த குற்றம் இதுதான்
ஆன வயதினில் அவரொரு கன்னியைத்
தானம் கொண்டனர் தாரமாய் வந்தவள்
மைந்தரை ஈன்றனர், வளர்ந்த ஓர்மகனோ
தந்தையைப் - போல்கடல் தாண்டிஉழைக்காமலே
விடுதலை வேட்கையில்வேங்கையைச்சேர்ந்தனன்
அடுக்கா தென்றவர் அப்பனைப் பிடித்தனர்
(புலியினைப் பிடித்திட இயலா தாயின்
புலியின் அப்பனை முடிப்பதும் தகுமே)

ஆச்சியின்னும் சாகவில்லை!
அவளுக்குக் கொள்ளிவைக்க
காத்திருந்த தந்தையுடல்
காணபேரன் வரவுமில்லை!

● 28-05-1989 அன்று ஏழாலையில் நடைபெற்ற உண்மைச் உண்மைச் சம்பவம்.

# சிறைப்பட்ட சிந்தனைகள்

7-11-89

இன்று மூளைக்கோளாறினால் பாதிக்கப்பட்ட ஜெயபாலன் என்ற பையனைக் கண்டேன் சீராக உடுப்பு உடுத்துவதற்கோ, உடுப்பு அழுக்கானால் அதைத்தோய்ப்பதற்கோ, ஏன்உனது இயக்கம் என்ன என்று கேட்டால் அதைச் சொல்வதற்கோ அடுத்தவரின் உதவியில்லாமல் இந்தப் பையனால் எதுவும் செய்யமுடியாது. ''இந்தப் பையனை எதற்குப் பிடித்தார்கள்?'' என்று மற்றப் பையன்களைக் கேட்டேன். ''இங்கு பிடித்துவைக்கப்பட்டிருப்பவர்கள் எல்லாம் காரணகாரியத்துடனா பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்?'' என்று எதிர்க்கேள்வி கேட்டார்கள் பையன்கள். தொடர்ந்து தங்களுக்கு வெளியில் இருந்து கிடைத்த தகவலின் படி மூளைக்கோளாறு உள்ள இந்தப் பையனை எல். ரீ. ரீ ஈயின் உளவாளி என்று கொண்டு வந்ததாகவும் விசாரணையின் பின் விடுவிக்க முடியாதளவுக்கு ஆபத்தான பேர்வழி என்று கருதி தொடர்ந்து காவலில் வைத்திருக்க முடிவு செய்துள்ளனர் என்றும் சொன்னார்கள். விசாரணையில் நல்ல அடியும் விழுந்து விட்டது என்று கவலையுடன் சொன்னார்கள்.

இங்கு வந்த விசாரணைகளுக்கு தற்போது பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெயராம் ''நான் விசாரித்ததற்குப் பின் சிவப்புப் பென்சிலால் ஒருபையிலில் கீறிவிட்டேனாகில் அதை எவராலும் மாற்ற முடியாது,' என்று இருபதாம் நூற்றாண்டின் பிரமா ''தானே என்பது போல்பெருமையடித்துக்கொண்டார். அவர் தனது''விவேகமான மூளை'' யினால் ஜெயபாலனின் பைலில் சிவப்புப் பென்சிலால் கீறிவிட்டாரோ தெரியவில்லை மறைமுகமாக இருபதினாயிரத்துக்குக் குறைந்த லஞ்சம் தான் வாங்கமாட்டேன் என்றும் சொல்லிவிட்டுச் சென்றார். அதற்கு மேற்பட்ட தொகையைத் தான் எதிர்பார்த்து இப்படி விடுவிக்க முடியாத நபர் ஜெயபாலன் என்று தீர்மானித்தாரோ தெரியவில்லை.



இதைப் பற்றி இரவு பையன்களுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்போது இயக்கத்துடனோ, போராட்டத்துடனோ கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத எத்தனையோ பேரை இங்கே வைத்திருக்கிறார்கள். தலையாட்டிகளே இவர்களின் தலை விதியைப் பெரும்பாலும் நிர்ணயித்திருக்கிறார்கள் தங்களுக்குக் கோபமானவர்களுக்கெல்லாம் தலையாட்டியிருக்கிறார்கள்'' என பெரிய பட்டியலே தந்தார்கள் அப்போது ஒரு பையன் சொன்ன தகவல் மனதைப் பிசைந்தது.

நாவலர் கலாசார மண்டபத்தில் ஒரு ஊமைப் பையனைப் பிடித்து விசாரித்தார்கள், இயக்கத்தைப் பற்றிய இரகசியங்களைக் கேட்டுச் சித்திரவதை செய்தார்கள். பேசமுடியாத ஜீவன் அது என்பதைப் புரிந்து கொள்ளும் ஆற்றலில்லாதவர்கள் மிகவும் மனவைராக்கியம் உடையவன் இவன் என்று தீர்மானித்து சித்திரவதையின் உச்சக்கட்டங்கள் எல்லாவற்றையும் செய்தார்கள். பையனின் முகமே உருமாறிச் சிதைந்து உயிரும் பிரிந்தது. இவனைப் போல் அடிவாங்கி உருமாறி, உயிர்பிரியாமல் கிடந்தவர்கள் மத்தியில் இவனைப் போட்டிருந்தார்கள். உயிர் போய் விட்டது என்பதே இவர்களுக்குத் தெரியாது.

அந்தப் பையனைத் தேடித் தாய் வந்தார். தனதுபையனை நீங்கள் தான் பிடித்து வைத்திருக்கிறீர்கள். தனக்கு நிச்சயமாகத்தெரியும் என்றுவாதாடினார். இவர்களோ மறுத்துப் பார்த்தனர். தாய் அசைவதாகத் தெரியவில்லை. 'நான் அடையாளம் காட்டுகிறேன்' என்றார். இத்தனை பேருக்கிடையில் எப்படி நீங்கள் மகனை அடையாளம் காட்டுவீர்கள்?' என்று அந்தப் பெற்றவயிற்றுக்குச் சொந்தக் காரியைக் கேட்டனர். சித்திரவதை செய்யப்பட்டு உள்ளே கிடத்தப்பட்டிருப்பவர்கள் ஒன்றிரண்டு பேரா? என்பதினாலேயே இந்தககேள்வியை எழுப்பினர். எனினும் தாய் உள்ளே சென்றாள். தன் உதிரத்தைப் பாலாக அருந்தியவன் உருமாறி, உயிரை இழந்து கிடந்த அந்தக் காட்சியைக் காண்பது அந்தத் தாய் செய்தபாவத்தினாலல்ல ராஜீவ் செய்தபாதகத்தினால்! மகனின் கையைப் பிடித்து 'இதோ என்மகன். அவனின் பெயர் கையில் எழுதப்பட்டிருக்கிறது! பாருங்கள்! என்று தன் மகனின் கையை உயர்த்திக் காட்டினார். தமிழ் தெரிந்தவர்களும் மற்றவர்களும் உற்றுக் கவனித்தனர். அவனது கையில் எழுதப்பட்டிருந்த பெயர் காந்தி!

கோட்சே! இந்திய வரலாற்றில் சாகாவரம் பெற்றவன்! அன்று இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மோகன்தாஸ் காந்தியைக்கொன்றாய் இன்று உனது வாரிசுகள் தமிழ் ஈழ மண்ணில் எமது போராளிகளான கப்டன் காந்தி கட்டைக் காந்தி, அப்பாவி ஜீவனாம் வாய் பேச முடியாத காந்தி என்று ஒவ்வொரு காந்திகளையும் கொன்று கொண்டேயிருக்கின்றனர். நீ காந்தியை மட்டும் கொல்லவில்லை!, காந்தீயத்தையே கொன்றாய்என்பதுஎவ்வளவு பெரிய உண்மை!

இந்தியாவில் காந்தி என்ற பெயர் வாக்குச் சேகரிக்கும் அரிய சாதனமாகவே கருதப்படுகிறது. இல்லாவிட்டால் இத்தாலியில் பிறந்த சோனியாவின் பெயரின்பின்னாலும், மேனகாவின் பெயரின் பின்னாலும் கூட காந்தி என்ற பெயர் ஒட்டிக் கொள்கிறதே! அங்கே ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி என்று காந்தியை ஒட்டிக் கொள்கிறார்கள். எமது நாட்டில் காந்திகளை வெட்டிக் கொல்கிறார்கள்.

நிச்சயமாக இவற்றிற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியே தீரும் இந்தப் பாவமும் பழியும் யாரைச் சூழுமோ! வாய்பேச முடியாதவர்களும், பைத்தியங்களும் இந்தியாவின் பாதுகாப்புக்கு எந்தவகையில் பங்கம் விளைவித்தார்கள் என்ற கேள்வியை உலகம் இவர்களிடம் எழுப்பும் காலம் வெகு தொலைவில்லை!.

□

# அதுவரை அவ்வளவே!



- சந்திரபோஸ்

உழைப்பவன்
சபிக்கப்பட்ட காலம்!
நெருப்பில் கிடந்து
உடலைக் கருக்கி
படையல் வைத்தவனுக்கு
வரமாக வாய்க்கரிசி கிடைத்த காலம்!
இந்த மண்ணை பசுமையாக்க
பூமியின் தகிப்பை
தாங்கிக் கொண்டிருக்கும் தலைகளுக்கு -
பரிசாக
ஆணி அறையப்பட்ட காலம்!
குடலைச் சுருக்கி
சோம்பேறிகளுக்கு
சோறு போட்டவர்களின் உதிரம்
போதைப் பொருளாக்கப்பட்ட காலம்!
ஒரு வர்க்கம் பெரிதாக
ஆர்ப்பரித்த காலம்!
அடக்கி, அடக்கி
நிலத்துள் மூச்சடைய புதைக்கப்பட்டு:
எரிந்து, எரிந்து
நெருப்பைத் தின்றவர்கள்
ஒரு நாள் எரிமலையாய் வெடித்தார்கள்
அமெரிக்காவில் வெடித்தது,
அகிலமெல்லாம் அதிர்ந்தது!
அன்று உதித்த ஆதவன்
சோம்பேறிகளை எரித்து உதித்தான்
தியாகிகளின் உதிரத்தில் விடிந்தான்!
அதுதான் இந்த நாள்
ஆம்-அவ்வளவுதானா?
இன்னும்-உழைப்பை உறிஞ்சும்
அட்டைகள் உள்ளவரை!
குடலை அரித்தே
கோபுரம் கட்டும்
மாயாவிகள் உள்ளவரை
அவ்வளவு தான்!
இந்த மண்ணின் பச்சை இலைகளெல்லாம்
அவனுக்காக ஆடும் வரை,
கலைகளெல்லாம் அவனைப் பாடும் வரை
அவ்வளவுதான்!
குடியானவன்!
குடிசைகள்,
அகராதியிலிருந்து
அர்த்தமற்று போகும் வரை
அவ்வளவுதான்!
பழைய நாளின் நினைவுப் போதையில்
நிகழ்கால கொடுமைகளை

## களநிகழ்வுகள்

1ஆம் பக்க தொடர்ச்சி

ஜவான்களின் உடல்கள் மட்டுமே உருப்படியாகக் கிடந்தன. ஏனையவையெல்லாம் உருக்குலைந்து போய்க்கிடந்தன. இத்தொடர் வண்டியில் வந்த மேஜர் சங்கர்சர்மா கப்டன் தீபக், இராணுவ சார்ஜண்ட் பாலி உட்பட பதினேழு பேர் இத்தாக்குதலில் மாண்டு போயினர். இந்தப் பதினேழு பேரினதும் பெயர் பொறித்து ஒரு நினைவுச்சின்னத்தை இந்திய இராணுவம் இங்கே எழுப்பியுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் வெற்றுத்தன்மையை அம்பலப்படுத்தியது இதுஒரு இராணுவக் குடியேற்றத்திட்டமாகும்.

ஆயுதங்களைக் கையாள்வதிலும் அவற்றைப் பாவித்த பின்னர் தகுந்த முறையில் சுத்தம் செய்து அவற்றினை நீண்டகால பாவனைக்காகப் பேணிப்பாதுகாப்பதிலும் விடுதலைப் புலிகள் ஒரு ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பார்கள். இதைப் பேணுவதில் சோதியா விழிப்போடு இருப்பாள். அதனை அக்கறையோடு நிறைவேற்றுவாள்.

## விண்வெளி..

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் பிராணவாயு அதிகமாக இருக்க வேண்டுமானால், தாவர வகைகள் நிறைந்திருக்கவேண்டும் எனத் தெரிகிறது.

வெள்ளியைச் சூழ்ந்திருக்கும் வாயு மண்டலத்தில் பிராணவாயுவே கிடையாது. ஆனால் கரியமில வாயு ஏராளமாக உண்டு. ஆரம்ப காலத்தில், பூமி எவ்விதம் உயிரினம் அற்ற இடமாக இருந்ததோ அதே போல வெள்ளி இன்று விளங்குகிறது.

□

# புரட்சித்துறவி லோங் அடிகளார்

தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் சில கிறிஸ்தவ துறவிகளை தமிழ்கூறும் நகலுலகம் என்றுமே மறக்கல் மாட்டாது.

வீரமாமுனிவர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், வண. தனிநாயகம் அடிகள், வண. தாவீது அடிகள் போன்ற

சென். பற்றிக்ஸ் கல்லூரி 1850இல் ஆரம்பிக்கப்பட்டது முதல் 1954 வரை ஆங்கிலேய துறவிகளே இதன் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள். அவர்களில் கடைசியாகப் பணிபுரிந்த வண. பிதா லோங் அடிகள் யாழ்ப்பாணத்தை நன்கு நேசித்தார். அயர்லாந்து தேசத்தவனாக இருந்தும்

னத்தை இந்திய இராணுவம் இங்கே எழுப்பியுள்ளது.

முழுநாள் பூராவும் சரியான உணவோ நீராகாரமே இல்லாமல் இடம்பெற்ற இந்த யுத்தத்தில் மேஜர் சோதியா தலைமையிலான மகளிர் படைப்பிரிவு ஆற்றிய பெரும் பங்களிப்பும் போர்த்திறனும் யுத்த தந்திரோபாயங்களும் குறித்து மறைந்த லெப்ரினன்ட் கேணல் ஜொனி பெருமிதத்தோடு தலைவர் பிரபாகரனுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

### சித்தங்கேணி தாக்குதல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவு மட்டும் கலந்துகொண்ட ஒரு தாக்குதல் 1987 நவம்பர் மாதத்தில் சித்தங்கேணியில் இடம்பெற்றது, இதில் இந்திய இராணுவத்தினருக்குச் சொந்தமான ஒரு டாங்கி பெண் போராளிகளால் தகர்க்கப்பட்டது. இதில் மேஜர் சோதியாவும் கலந்துகொண்டாள். இதே போன்று சோதியா கலந்து கொண்ட இன்னுமொரு தாக்குதலில் மானிப்பாயில் வைத்து இந்திய இராணுவத்திடமிருந்து ஒரு ட்றக் பெண் அணியினரால் பறித்து எடுக்கப்பட்ட.து தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத இந்திய ஜவான்கள் ட்றக்கைப் போட்டுவிட்டு தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என ஓட்டம் பிடித்தனர்.

### கடைசிப் போர்

மேஜர் சோதியா கலந்துகொண்ட கடைசித் தாக்குதல் முல்லைமாவட்டத்தில் மணல் ஆறு என்றழைக்கப்படும் வெலி ஓயா பகுதியில் இடம்பெற்றது. இலங்கை இராணுவத்துடன் ஏற்பட்ட இந்த மோதலில் இலங்கை இராணுவத்துக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபின் இப்பகுதியில் அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டம்

சோதியா விழிப்போடு இருப்பாள். அதனை அக்கறையோடு நிறைவேற்றுவாள்.

இந்திய இராணுவம் குடாநாட்டிற்குள் பரவலாக இராணுவ முகாம்களை அமைத்த பின்னர் விடுதலைப் புலிகள் பலரும் குடாநாட்டிற்கு வெளியே இருந்த காட்டுப் பகுதியில் கரந்துறை வாழ்வை மேற்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. சோதியா அக்காவின் தலைமறைவு வாழ்வும் இத்தன்மையானதே. காட்டிற்கு உணவுப் பொருட்களை எடுத்துவர சகாபோராளிகளோடு அவள் பல மைல்கள் நடந்திருந்தாள். குடி தண்ணீர் பெற்றுக்கொள்ள காடுகளில் கிணறுகளை வெட்டிய போராளிகளோடு இணைந்து செயல்பட்டாள். சென்றியில் கண் விழித்து இருந்து காவல்காத்தாள். காட்டில் நிலவிய சுவாத்தியம் அவள் உடலைப் பாதித்தது. உடல்நலம் பாதிக்கப்பட்ட சோதியா 11-1-19990 அன்று மரணத்தைத் தழுவிக் கொண்டாள். விடுதலைப்புலிகளின் முதல பொறுப்பாளர் மேஜர் சோதியா (மரியா மைக்கல் வசந்தி, கரவெட்டி மேற்கு, நெல்லியடி) வின் மறைவு இலகுவில் இட்டு நிரப்பப்பட முடியாத வெற்றிடமாகியது. அவளது மரணத்தின் மௌனத்தில் பிறந்த கவிதை அஞ்சலி ஒன்று இப்படிக் கூறுகிறது.

நீதி கேட்டு நிமிர்ந்த புலி அவள்
நேரில் பகைவர் கவச வண்டியை
மோதி உடைத்த தமிழர் மூச்சு
அவள்
மூலையில் பெண் முடங்க
விட்டவர்
காதில் ஓங்கி அறைந்த கை அவள்
கழுத்தில் நஞ்சு கட்டி
நடந்தவள்
சோதி மறைந்தனள் என்று
வந்து சொல்
சுடு சொல் அல்லவோ? சுடு
சொல் அல்லவோ;

□

இன்று விளங்குகிறது. □

---

### அழகியற் கலை..:

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடடைகின்றது. மனிதமனம் மேம்பாடடைவதால் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பேருணர்வு ஏற்படும். கொள்ளைக்காரனாக இருந்தாலும் கொலைகாரனாக இருந்தாலும் எத்தனை கடின இதயமுள்ளவனாக இருந்தாலும் சங்கீதம் (இசை) அனைவரையும் ஆட்டிப்படைக்கும் சக்தி வாய்ந்தது. சங்கீதத்துக்கு கிழக்கு மேற்குக்கிடையாது திசைகிடையாது இரவுபகல் கிடையாது, மொழி கிடையாது, இதில் இழைவது தனிப்பட்ட ஒரு சொர்க்கம். இசைமேதை எம். எஸ். சுப்புலெட்சுமி அவர்கள் அமெரிக்க நாடு சென்று அங்கு இசைநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கர்நாடக இசை மழை பொழிந்தபோது பொப் இசையில் மோகங் கொண்டலையும் அமெரிக்க நாட்டு மக்கள்கூட மகுடியில் கட்டுண்ட நாகம்போல ஆடாது அசையாது அரங்கில் அமைதியாக இருந்தனரென்றால் இசையின் மேன்மையை இன்னும் எடுத்துக் கூறவேண்டுமா?

ஆகவே அழகியற் கலைகள் மூலம் சிறப்பாக இசை, நடனம் என்பவை மூலம் இளஞ் சிறார்களின் உள்ளத்தினை மேனிலைப்படுத்தி சராசரி மனித உணர்வுக்கு அப்பால் தெய்வீக உணர்வினை நிலை நிறுத்தி சிதறுண்டு போயிருக்கும் சமூக உறவைப் பலப்படுத்த யாம் அனைவரும் முயற்சி மேற்கொள்வோமாக.

வாழ்க அழகியற் கலை வளர்க நம் சமுதாயம்.

(கல்முனை கல்வி மாவட்ட சங்கீத நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காகபுத்தூக்க வகுப்பில் கலந்துகொண்டு சைவப் புலவர் பண்டிதர் திரு. வி. ரி. செல்லத்துரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுத் திரட்டு. (48)

□

சுவாமி ஞானப்பிரகாசர், வண. தனிநாயகம் அடிகள், வண. தாவீது அடிகள் போன்றவர்கள் தமிழ் மொழியை வளர்க்க எவ்வளவோ பாடுபட்டனர். தம்மை முழுமையாக அர்ப்பணித்தனர்.

தமது மறைப்பணிகளுடன் தமிழ்ப் பணியையும் சிறப்பாக ஆற்றியுள்ளார்கள்.

பாடசாலைகள் கட்டப்பட்டன. ஆங்கில மொழியில்



வணபிதா. லோங் அடிகளார்

போதனைகள் நடாத்தப்பட்டன. அதனால் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றால் அரசாங்க வேலைகள் கிடைக்கும் என்பதால் பலர் இங்கு கல்வி பயின்றனர்.

ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன பாடசாலைகளில் இருந்தன. இதனால் பெற்றோர் தமது பிள்ளைகளை இங்கு அனுமதிக்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறான காலங்களில் தான் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்நகரில் மட்டுமன்றி இலங்கையிலுமே பெயர் பெற்ற பாடசாலையாக விளங்கியது. வெள்ளைத் தோல்காரர், இங்கிலிஸ்கார சுவாமிமார் நல்ல படிப்பு என்று நம்மவர்கள் பேசுமளவுக்கு அது விளங்கியது.

அடிகள் யாழ்ப்பாணத்தை தன்கு நேசித்தார். அயர்லாந்து தேசத்தவனாக இருந்தும் ன்னை ஒரு யாழ்ப்பாணத்தவன் என்றே கூறிவந்தார். யாழ்ப்பாணப் பிள்ளைகளின் கல்வி வளர வேண்டும் என்ற நோக்கில் இங்கு பணிபுரிந்தார்.

எரிச்சல், பொறாமை இன்றும் நம்மிடையே இருப்பது போலவே அன்றும் இருந்தது. சென். பற்றிக்ஸ் கல்லூரி வளர்ச்சிக்காக அவர் நிதியுதவிகள் பெற்று அதில் கட்டடங்களைக் கட்டுவதற்கு திட்டமிட்டார். அதற்கு அன்று சிலரால் அனுமதி மறுக்கப்பட்டு அவர் சேர்த்த பணத்தை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தவும் சிலர் எண்ணினார்கள். இதனை அவர் விரும்பவில்லை.

---

### கரவையூரான்

---

'பாதர் லோங்' என்றால் ஒரு அரசியல்வாதிக்கு இல்லாத செல்வாக்கு அவருக்கு அன்று இருந்தது.

அவரது கடிதத்துடன் சென்றால் போனகாரியம் வெற்றி பெறும் என்று இப்போதும் அவரது பழைய மாணவர்களும் பழைய கல்விமான்களும் சொல்கின்றனர்.

பலாலி விமான நிலையத்தை 2ஆவது மகாயுத்தத்தின் பின்னர் மூடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையை நிறுத்தி கொழும்பு - யாழ்ப்பாண விமான சேவையை ஆரம்பிக்க வழிவகுத்தவரும் வண. லோங் சுவாமியே.

இப்படியாக அவர் யாழ்ப்பாண மக்களுக்காகப் பல சேவைகளைச் செய்து வந்தார்.

பாடசாலைகளில் தடியால் பிள்ளைகளுக்கு அடிக்கக் கூடாது அதாவது தண்டிக்கக் கூடாது அன்பான வார்த்தைகளால் தண்டிக்க வேண்டும் என்று அன்று ஒரு ஊர்வலம் நடாத்தி அதனை எல்லோரும் நடைமுறைப்படுத்துமாறு கோரினார்.

அவர் யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாண மக்களிலும் வைத்த அன்பினால் தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஒரு பொது நூலகம் பெரியளவில் தேவை என்பதைப் பலருக்கும் எடுத்துக் கூறினார். அதற்கு நிதியுதவியும் வழங்கினார். இன்று கோட்டைக்கு அருகில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

சுவாமி லோங் அடிகள் இன்று இருந்திருந்தால் எரிக்கப்பட்ட இந்த நூலகத்தைப் புதிய முறையில் கட்டித்தந்திருப்பார் என்று அவரது பழைய மாணவர்களும், அபிமானிகளும் சொல்கிறார்கள்.

இந்த நூலகம் எரிக்கப்பட்டு பத்து வருடங்களாகியும் இன்னமும் அது திருத்தப்படவில்லை. அவர் இன்று இருந்திருந்தால் அதனை ஒரு மாதத்தில் கட்டியிருப்பார்.

அயர்லாந்தில் மட்டுமல்ல, யாழ்ப்பாணம் எங்கும் வீதிகள் தோறும் சென்று நிதி சேகரித்துத் தந்திருப்பார்.

ஒரு ஐரிஸ்காரன் யாழ்ப்பாணத்துக்கு செய்தவற்றை நாம் மறந்துவிடக்கூடாது. □

பழைய நாளின் நினைவுப் போதையில்
நிகழ்கால கொடுமைகளை
மறந்திருக்கும் வரை,
உதிரம் தோய்ந்த
இன்னொரு சூரியனை
உதிக்க வைக்கும் வரை
ஆம்-அவ்வளவுதான்!

### செய்திப் பொறிகள்

**கிளாரினெட்:**

இதுவாயால் ஊதப்படும் மேனாட்டு இசைக்கருவி. நாதஸ்வரத்தைப் போன்றது. உருளைவடிவமானது. பெரும்பாலும் மரத்தாலானது. இது இராணுவ வாத்திய கோஷ்டியிலும், பல்லியத்திலும் (Orchestra) முக்கிய இடம் பெறுகிறது மூன்று ஸ்தாயிகள் வரைவாசிக்கலாம் நாதஸ்வரத்தில் எல்லாத் தொளைகளும் திறந்திருக்கும் இதில் சில தொளைகள் திறந்தும் மற்றவை சாவிகளால் மூடப்பட்டும் இருக்கும்.

● ● ●

லெபனானில் குடை வைத்திருப்போரைவிடத் துப்பாக்கி வைத்திருப்போரே அதிகம்.

---

### மதவடி...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய் இருக்கினம் போல இப்பிடியான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யிறவை தாங்கள் பெயரையோ, புகழையோ, பணத்தையோ, சம்பாதிக்கலாம் தான் அதுக்காக சனங்களை திசை திருப்பி அதுகளைக் குழப்பிறம் எண்டதை மறந்து போயினம்.''

''உப்பிடியான நிகழ்ச்சிகளை கட்டாயம் தடை செய்ய வேணும்'

□

## சிறுவர் பகுதி



# பறவைகளின் கதை.... (1)

''டேய் துர்க்கா, கஜன், கரேஸ், பிரபன், காந்தன் எல்லாரும் ஓடியாங்கோ எங்கட அதிசயம் அப்புசாமி தாத்தாவாரர். ஏதாவது நல்ல செய்திகள் சொல்லுவார்'' என மூச்சைப் பிடித்துக் கத்தினான் தீபன். இவன் கூறிய அதிசயம் அப்புச்சாமி தாத்தா யாரைக்கண்டாலும் ஏதாவது ஒன்றைப்பற்றி அளக்கத் தொடங்கிவிடுவார். அதுவும் தீபன் போன்ற சிறுவர்களைக் கண்டால் போதும் காலைமடித்து உட்கார்ந்து எல்லாரையும் சுற்றிவர உட்காரவைத்து தன் அதிசயச் செய்திகளைக் கூறத்தொடங்கிவிடுவார் இப்ப என்ன சொல்லப் போறார் பாப்பம்.

''என்ன பிள்ளையள் எல்லாரும் வந்திட்டியளே. சரி இன்டைக்கு என்னத்தைப் பற்றிச் சொல்லுவம் ..... ... ஆங் பறவைகளைப் பற்றிச் சொல்லுவம். உங்களுக்கு பறவையளைத் தெரியுமல்லோ? காகம், கிளி, மயில் இப்படி உலகத்தில் 9000 பறவைகள்

''சரிசரி கதையை நிப்பாட்டுங்கோ பிள்ளையள்'' எனத் தொடர்ந்தார் தாத்தா.

''ஒவ்வொரு நீண்ட இறகிலும் ஒரு குழலான காம்பும் தட்டையான விசிறி போன்ற பகுதியும் உண்டு. விசிறிப் பகுதியின் நடுநரம்பில் இருந்து இருபக்கங்களிலும் இழை போன்ற சிறுபிரிவுகள் உண்டு. இவை 'பார்புகள்' எனப்படும். இந்தப் பார்புகளை அடுத்து பார்ப்பியூல்கள் என்ற அமைப்பு உண்டு. இந்தப் பார்பியூல்கள் என்ற சவ்வு தான் காற்று ஊடறுத்துச் செல்லாதவாறு தடுக்கின்றன. இவை இல்லையென்றால் பறவைகளால் பறக்கமுடியாது.

கோழி போன்ற பறவைகள் பறக்க முடியாததற்கு காரணம் அவற்றில் பார்பியூல்கள் இன்மையே ஆகும்.

இது தவிர பறவைகளின் நுரையீரல்களோடு பெரிய காற்றுப்பைகள் உள்ளன. அவற்றில் இருபைகள் சிறகுகளுக்கிடையே அமைந்துள்ளன.

சென்ற வாரத் தொடர்ச்சி

# நோபல் பரிசு

### என்றால் என்ன?



நோபல் பரிசுக்குழு பரிசை வழங்குவதற்காக ஐந்து துறையை தெரிவு செய்தது. முதல்த் துறை விஞ்ஞானம். விஞ்ஞானத்தில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.

1. பெளதீகம்
2. இராசயவியல்
3. மருத்துவம்

விஞ்ஞானம் தவிர இலக்கியம் சமாதானம் ஆகியவனவும் நோபல் பரிசு வழங்க தெரியப்பட்ட துறையாகும். இவற்றில் பெளதீகம், இரசாயனம் ஆகியதுறைகளில் பரிசு பெறுவோரை தெரிவு செய்வது 'றோயல் சுவிடில் அக்கடமி' என்ற விஞ்ஞான நிறுவனமாகும்,

மருத்துவத்திற்கு' றோயல் சப்ராலின்' என்றசுவிடன்தேச நிறுவனம் பொறுப்பானது.

இலக்கியத்திற்கு சுவிடன் இலக்கிய களம் பொறுப்பேற்றது.

சாமாதானத் துறையை நோர்வே பாராளுமன்ற நோபல் பரிசுக்குழு கவனித்தது.

இத்துறைகளை தவிரபொருளாதாரம் என்ற புதிய துறைக்கு 1968 முதல் நோபல் பரிசு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இதனை சுவிடன் தேசிய வங்கி பொறுப்பேற்றது.

நோபல் பரிசுக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பரிசு வழங்கும் திட்டம் ஆரம்பமானது. எப்போது தெரியுமா?

1901 ஆம் ஆண்டு இந்த ஆண்டில் முதல் நோபல் பரிசு பெளதீகத்துறைக்கு வழங்கப்பட்டது. பரிசைப்பெற்றவர் எக்ஸ்கதிரை கண்டு பிடித்த 'வில்ஹெம் றொண்ட்ஜன்' என்பவர் ஆவார். இவரை அடுத்து இதே ஆண்டில் இரசாயனத்திற்கு நவீன பெளதீக இரசாயனத்திற்கு வழி காட்டியாக நின்ற 'ஜே வன்ற் ஹொப்பிற்'கும், மருத்துவற்திற்கு 'எமிலவென் பேரிங்கிற்கும் வழங்கப்பட்டது. சமாதானத்திற்கு செஞ்சிலைச் சங்கத்தை தொடக்கிய ஹென்ரிடுனன்ட் என்பவருக்கும். 'பிரெட்ரிக் பஸ்ஸி' என்ற பிரெஞ்சு சமாதானக் குழு அமைப்பை ஏற்படுத்திய வருக்கும் வழங்கப்பட்டது.

இது 1901 ஆம் ஆண்டுமட்டும். இதன்பின் ஒவ்வொரு ஆண்டும் இன்றுவரை நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.

ஆம், நோபலின் நல்லகனவு இன்று செப்பமாக நனவாகி வருகின்றது.

ஆதாரம்: New Standard Encyclopaedia

□




# தேடி எடுத்துப் படியுங்கள்....

# ஹாம்லின் நகர்த்து இசைஞன்

□□□

அந்த நகரின் பெயர் ஹம்லின். அந்தநகரமக்களுக்கு ஒரே தொல்லை. என்னதொல்லையென்றால் எலித்தொல்லை ஊரெங்கும் 'ஒரேஎலிப்பட்டாளம். ஒரு காரியத்தையும் செய்யவிடாது தொல்லை.

இந்த எலித் தொல்லையை எப்படி அடக்குவது என நகரத்து சபையோசித்துக் கொண்டிருக்கையில் அவன் வந்தான். யார் அவன்? அவன் ஒரு குழலூதுபவன். சாதாரண குழலூதுபவன் அல்ல. தன்குழல் நாதத்தினால் எக்காரியத்தையும் செய்யக்கூடியவன். அவன் நகரசபையினரிடம் தான் எலித் தொல்லையை அகற்றுவதாக கூறினான். அதற்காக நகர சபை அவனுக்கு ஐம்பது ரூபா பணம் தருவதாக சத்தியம் செய்தது.

குழலூதுபவன்குழலைவாசிக்கத்தொடங்கினான் ஒருஇனிய நாதம் எழுந்தது. அந்த சத்தத்தைக் கேட்டு ஊரிலுள்ள எலிகளெல்லாம் அவனை நாடி வந்தன. இதுதான் தாமதம் என்று அவன் ஊரின் புறத்தே உள்ள ஆற்றை நாடிப்போனான். எலிகளும் அவனை தொடர்ந்தன. அவனும் குளத்தில் இறங்கி சிறிது தூரம் நடந்து சென்று குழலூதினான். எலிகளும் அவனோடு ஆற்றில் இறங்கின. குளத்தில் ஊரிலுள்ள அனைத்து எலிகளும் இறங்கின. அவன் ஆற்றை விட்டு வெளியே வந்தான். அப்போது குழல் ஊதவில்லை. எலிகளும் வரவில்லை. ஏன் தெரியுமா? எலிகள் தான் ஆற்றில் இறங்கி நீரில் மூழ்கி இறந்து விட்டன. ஊரில் எலித் தொல்லை அகன்றது.

நகர சபையிடம் ஒப்புக் கொண்ட ஐம்பது ரூபாவை தருமாறு கேட்டான். நகரசபையோ ''யார் பணம் தருவதாகக் கூறினார்கள். இங்கு எவருக்கும் பணம் தரமுடியாது'' என விதண்டாவாதம் செய்தது.

குழலூதுபவனிற்கு கடுமையான ஆத்திரம் உடனே குழலை எடுத்து புதுவிதமாக இனிய இசையை ஊதினான். இப்போது... எலிகள் வரவில்லை. ஊரிலுள்ள குழந்தைகளெல்லாம் அவனைத் தொடர்ந்தன. பெற்றோர்கள் தடுத்தும் மீறி அவன் பின்னே வந்தன. குழலூதுபவன் நடந்தான். குழந்தைகளும் தொடர்ந்தன. குழலூதுபவன் நடந்தான். ஆற்றை நாடியல்ல. ஊரின் புறத்தே உள்ள மலைக்குகையை நாடி. அவன் குகையினுள் நுழைந்தான். குழந்தைகளும் நுழைந்தன. ஊரவர்கள் படையாக ஓடி வந்தனர். அவன் ஒரு பெரிய கல்லால் குகையை மூடினான்.

குழந்தைகளும், அவனும் உள்ளே இறந்திருப்பார்களோ? அப்படியானால் குழலூதுபவன் எங்கே?

சரி, இதற்கு விடை எங்கே? விடையை நீங்கள் இக்கதையைத் தேடிப்படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளுங்கள்;

இக்கதையை எழுதியவர் 'ரொபட் பிரொனிங்' என்ற பிரபல ஆங்கிலக்கவிஞராவார் மிகச் சிறப்பாக சிறுவர்க்கென எழுதியது இக்கதை. நீங்கள் நினைப்பது போல் இது ஒரு பெரிய புத்தகமாக உள்ள கதையல்ல. ஒரு சிறு அளவு கதைதான். உங்களுக்கான ஆங்கிலக்கதைத் தொகுப்புகளில் இக்கதை இலகு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 'Pied piper of Hamdin' என தலைப் பிடப்பட்டிருக்கும்.

'Stories from famous Poems' என்ற பெயருடைய Dodd's Supp[illegible]ntary Readers வரிசையில் இக்கதை உள்ளது. இது E. F. டொட் என்பரால் எளிய ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. Macmillan And Company Ltd ஆப் பிரசுரிக்கப்பட்டது.

இவ்வளவும் போதாதா தேடி எடுக்க.......

## வேண்டுமா? வேண்டாமா?

அவந்தி ஒரு சவரத்தொழிலாளியாகப் பணிபுரிகின்றான் ஒருநாள் அந்நகரின் நீதிபதி அவந்தியிடம் முகத்தை சவரம் செய்யவந்தார்.

அவந்தி சவரம்செய்ய ஆயத்தமானார். நீதிபதியிடம் உங்களுக்கு இந்தக் கண்புருவம் வேண்டுமா? என்றான் அவந்தி. 'ஆம் வேண்டும்' இது நீதிபதியின் பதில்.

உடனே அவந்தி கண்புருவத்தை சவரம் செய்து நீதிபதியின் கையில் தந்தான். நீதிபதிக்கு கோபம் வந்தது அவர் கோபத்தை புரிந்து கொண்ட அவந்தி 'நீங்கள் தானே கண் புருவம் வேண்டு

## வண்ணம் தீட்டிப் பாருங்கள்....



## தந்திரக் கணக்கு

உலகத்தில் 9000 பறவைகள் இருக்கின்றன. அவற்றில் கொஞ்சப் பறவைகளைப் பற்றி உங்களுக்கு சொல்லப் போறன் அதுக்குமுதல் பறவைகள் எப்படிப்பட்டவை என்று சொல்லுறன் என்ன?''

பறவைகளின் சிறப்பியல்பு பறப்பது. அவற்றிற்குள்ள இரு சிறகுகள் அவைகளைப் பறக்கச் செய்கின்றன. இச்சிறகுகள் நமக்கு உள்ள இரு கைகள் மாதிரி.

'ஓம் தாத்தா வீட்டில் கோழியைப் பிடித்துப்பார்த்தேன் அதன் சிறகுகள் இரண்டு கைகள் மாதிரித்தான் இருந்தது'' என இடையில் கூறினான் துர்க்கா. அதற்குப் பிற் பாட்டுப் பாடினான் அவன் தம்பி கஜன்.

ஓம் ஓம் துர்க்கா நீ எல்லாத்தையும் நல்லாய்க் கவனிக்கிறாய் போல. சரிஇனி மேல சொல்லுறன்.

இந்தசிறகுகளின் உதவியால் தான் பறவைகள் தம் கனத்த உடலைத் தூக்கிச் செல்கின்றன. பறவைகளின் உடல் முழுதும் இறகுகள் மூடியிருந்தாலும் அவற்றின் சிறகுகளின் நுனியிலுள்ள இறகுகளே பறக்க உதவுகின்றன. இந்த இறகுகளைப் பிடுங்கி விட்டால் பறவைகளால் பறக்க முடியாது.

''ஓம் தாத்தா சில கிளிச் சாத்திரகாரர் கிளியின் சிறகு நுனி இறகுகளை வெட்டியுள்ளதைப் பார்த்திருக்கிறேன்'' என்றான் மறுபடி துர்க்கா.

''டேய் துர்க்கா உனக்குத் தான் எளலாம் தெரிஞ்சது மா.திரி தா..த்தாவை சொல்ல விட்டுவிட்டு பேசாம இரு'' என அதட்டினான் தீபன்.

சளுக்கிடையே அமைந்துள்ளன.

''பறவைகளுக்கு பறந்து களைத்தால் வியர்க்குமா? தாத்தா என ஒரு கேள்வியை காந்தன் எழுப்பினான்.

பறவைகள் எவ்வளவு தூரம் பறந்தாலும் வியர்ப்பதில்லை காரணம் நம்மைப் போல் அவற்றிற்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை. பறவைகளின் வாலில் ஒருவகை எண்ணெய்ச் சுரப்பி உண்டு. 'பறவைகள் தம் அலகால் இறகுகளைக் கோதிவிட்டு இந்த எண்ணை சுரப்பியிலிருந்து எண்ணெய் எடுத்து இறகுகளுக்குப் பூசும்.

என்ன துர்க்கா இதை நீ கவனிக்கவில்லையோ? இனி மேல் கவனித்துப்பார் என்ன?

இந்த எண்ணெய் இறகுகளில் பூசப்பட்டிருப்பதால் தான், பறவைகள் மழையில் நின்றாலும் கூடுதலாக நனைவதில்லை.

வெய்யில் காலத்தில் வெப்பம் தாக்குதலிலிருந்தும், மழை காலத்தில் குளிர் தாக்குவதிலிருந்தும் பறவைகளைக் காப்பது அவற்றின் இறகுதான்.

சரிசரி ஆறுமணியாச்சு எல்லாரும் கால்முகம் கழுவிப் போட்டு போய் படியுங்கோ. மிச்சத்த நாளைக்குச் சொல்லுறன். பிறகு உங்களை வைச்சு கனநேரம் சொல்லி நீங்கள் படிக்காமல் மார்க்ஸ் குறைவா எடுத்தால் உங்கட அப்பா, அம்மாவை உந்த அப்புசாமி கிழவனால் தான் பிள்ளையள் மார்க்ஸ் கூட எடுக்கேல்ல எண்டுவினம் என்று கூறியவாறு எழுந்து நடையைக் கட்டினார் அதிசயம் அப்புசாமி.

(தொடரும்)

# தந்திரக் கணக்கு

உங்களுக்குத் தவளையைத் தெரியுமல்லவா? அந்தத் தவளை ஒன்று 30 அடி ஆழமான கிணற்றுக்குள் விழுந்து விட்டது. அதற்கு எப்படியாவது வெளியே வந்து விட வேண்டும் என்று பல முயற்சிகள் செய்தது. கிணற்றுச் சுவரில் கொஞ்சம் கொஞ்சமாக பாய்ந்து ஏறத்தொடங்கியது. ஒரு நாள் பகல் மூன்று அடி ஏறினால் இரவில் இரண்டு அடி சறுக்கிக் கீழே வந்துவிடும் இப்படி பல நாள் முயற்சித்து கிணற்றுக்கு வெளியே வந்துவிட்டது. சரி தவளைஎத்தனைநாள்கழித்து வெளியேறியிருக்கும். சரியான விடையை எழுதி அனுப்புங்கள்.

(விடை அடுத்த இதழில்)




கடற் தாவரங்களுக்குள் சிக்காது தனது வீடு போய்ச்சேர இந்த மீன்குஞ்சுக்கு வழி காட்டுங்கள்.

தானே கண் புருவம் வேண்டுமென்றீர்கள். அதைத்தான் உங்கள் கைகளில் தந்து விட்டேன் என்றான்.

''நீதிபதி யவர்களே உங்களுக்கு தாடி வேண்டுமா?'' என்றான் அவந்தி.

நீதிபதி புருவத்தை மனதில் வைத்துக்கொண்டு ''வேண்டாம்'' என்றார்.

உடனே அவரது தாடியை சவரம் செய்து நிலத்தில் போட்டான்.

''அவர்தான் வேண்டாம்'' என்றாரே.

முன்பொருநாள் நீதிபதி அவந்தியிடம் சவரம் செய்து விட்டு காசு கொடுக்காமல் விட்டார்.

அதற்குப் பழிவாங்க கிடைத்த சந்தர்ப்பம் தான் மேலே நடந்தது.




படத்தில் குறிப்பிட்ட இலக்கங்களுக்கு வெவ்வேறு வண்ணம் தீட்டிப் பாருங்கள்

## விஞ்ஞானப்புதுமைகள்

# கணனியின் கதை

பகுதி (1)

நீங்கள் அறிவியல் பிரியர்கள். எதையுமே அறிவியல் ரீதியில் அறியவிரும்புவீர்கள். தற்போது உங்களது அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாக ஒரு சாதனம் வந்துள்ளது. மிகவும் கஷ்டமான கணக்கொன்றை செய்ய முடியவில்லையா? உடனே இச்சாதனத்திடம் கொடுத்து விடுங்கள். இரு வினாடிகளுக்கும் குறைவான நேரத்தில் செய்கை வழியுடன் உங்களுக்கு விடையைத்தரும். உங்கள் சிந்தனைகளுக்கு முடிவு எதுவும் கிடைக்கவில்லையா? உடனே இச்சாதனத்திடம் பிர்ச்சினையை கூறுங்கள். உடனே தீர்ப்புக் கிடைக்கும்.

இதென்ன மாஜாஜால இயந்திரமா? எதற்கும் விடை தருகிறதே? இந்தக் கேள்வி தற்போது உங்கள் மனதில் எழுந்திருக்கும்?! உண்மைதானே?

நீங்கள் விழிப்பது போல் ஒரு மாஜாஜாலமல்ல. இன்றைய அறிவியல் உலகின் அதிசயத் தயாரிப்பு. அது தான் கணனி. ஆம் கணனி என்பது கொம்பியூட்டர் என நீங்கள் அறிந்த சாதனம் தான்.

பெரும் பெரும் அறிஞாகளாலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளை உடனே தீர்க்கும் சாதனம் தான் கணனி. குறிப்பாக நமது மூளையும் ஒரு கணனி தான் நமது மூளையினால் இயலாத காரியங்களை கணனி செய்துவிடும். இப்படி மனிதனைப் போல் கணனியால் எப்படி இயங்க முடிகிறது.

### கணனியின் இயக்கம்

உலகின் மிகச்சிறியது எது? விஞ்ஞானம் கற்கும் உங்களின் விடை அணு (Aton) என்று இருக்கும். இந்த அணுவினுள் புரோத்தன் (Proton), இலத்திரன் (Electron), நியூத்திரன் (Neutron) என்ற சிறு துணிக்கைகளும் உள்ளனவென்பதும் உங்களுக்குத்தெரியும்!

இந்த அணுவினுள் உள்ள துணிக்கைகளில் இலத்திரனை மட்டும் எடுத்துக்கொள்வோம். புரோத்தன். நியூத்திரன் ஆகியவை அணுவின்மையமாகிய கருவில் இருக்கும்போது, அதனை இலத்திரன்கள் சுற்றும் கருவில் இருக்கும் துணிக்கைகளை நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே இலத்திரனை வைத்துத்தான் ஏதாவது செய்யவேண்டும்.

நீங்கள் இலக்கம் காட்டும் கடிகாரங்களைக் கட்டியிருப்பீர்கள். அவை எப்படி இயங்குகின்றன. அணுவின் கருவை இலத்திரன்கள் சுற்றுகின்றன அல்லவா? நாம் பல அணுக்களை வரிசையாக அடுக்கி விடுவோம். அப்போது ஒரு அணுவில் சுற்றும் இலத்திரன் தொடர்ந்து மற்றைய அணுக்களையும் சுற்றும்.

தொடரும்...

# பட்டிமண்டபம் ஒரு -- கருத்தோட்டம்

## புலவர் ஈழத்துச் சிவானந்தன்

சொற்பொழிவுக் கலையின் வழி புதியவடிவமும் வனப்புங் கொண்டு சபையோரைக்கவர்ந்துள்ள ஒருகலையுருவமே பட்டிமண்டபம். பேச்சுத்துறையின் புதுப்பரிமாணமே பட்டிமண்டபம் என்று கருதுதல் சரியன்று. சொற்பொழிதல் தொடங்கிய காலத்திலேயே சொற்போரும் தொடங்கிவிட்டது. பொழிவும் போரும் கருத்து வெளிப்பாட்டிற்கும் கருத்தாய்வுக்கும் உதவிய இரு நிலைக்களங்கள் என்று கொள்ளலாம். சிந்தித்து எண்ணி எடுத்த கருத்துக்களை பிறருக்கும் வழங்கும் பொழிவு நிலையில் – வழங்கிய கருத்துக்களில் முரண்பாடு தோன்றிய பொழுது போர்நிலையும் எழுந்துள்ளது. ஆயின் பொழிவும் போரும் [illegible]லத்தவையே என்பது தெ[illegible].

பட்டி மண்டபம் தமிழ் மொழிவழிக்கலையே. இதன் பழமையை மணிவாசகர் காலத்திற்கு முந்தியது என்று கூறலாம். மணிமேகலைச் சாத்தனார் காலத்தில் பட்டிமண்டபவிளக்கம் மக்கள் மன்றில் தெளிவாகவேயிருந்தது. திருவாசகத்தில் பட்டிமண்டபம் பற்றி குறிப்பிட்டுள்ளமையையும் நோக்குதல் வேண்டும்.

> ''கட்டறுத்தென்னை
> ஆண்டு கண்ணார நீறு
> இட்ட அன்பரொடு யாவருங் காணாவே
> பட்டி மண்டம் ஏற்றினை ஏற்றினை
> எட்டினோடு இரண்டும் அறியேனையே''

என்னும் திருச்சதகப்பாடலால் பட்டிமண்டபத்தின் பெறுமானத்தை அறியலாம். சமய உண்மைகளை ஆராயும் வித்தியா மண்டபமான அரங்காகப்பட்டிமண்டபத்தைக் குறிப்பிடும் மணிவாசகர் எட்டும் இரண்டும் பத்து என்று சொல்லத் தெரியாத தன்னை திருநீறு பூசிய மெய்யடியார்களும் மற்றுமுள்ளோரும் காணும்படி ஆய்வரங்கிலே ஏற்றினை ஏற்றினை என்றும் வியக்கின்றார். பட்டிமண்டபத்தைப்பார்க்க திருநீறுபூசியவர்கள் மட்டுமல்ல பூசதா பிறரும் கூடநீன்றமை பாடலால் தெரிகிறது. மக்கள் சமய பேதமின்றி இம்மண்டபத்தைக் காணவும் இவற்றில் நடைபெறும் சொற்போரைக்கேட்கவும் கூடியிருக்கிறார்கள்.

மணிவாசகர் காலத்துப்பட்டிமண்டபம் எங்கே எப்படி என்ன பொருளில் நடந்திருக்கும் என்று எண்ணிப்பார்த்தல் வேண்டும். அக்காலத்தில் ஆலயங்களே சமுதாயமையங்களாகத்திகழ்ந்தன. கல்வி கலை கலாச்சாரம் மருத்துவம் முதலியவற்றினை வளர்த்தெடுத்திருக்கின்றன. ஆலயவனாகத்தில்லிருந்தே அறிஞர்களின் கருத்துவெளியீடும் கருத்தாய்வும் செய்திருக்கிறார்கள் ஆய்வுவேளைகளில் எல்லாமக்களும் கடவுளை ஏற்பவர்கள். மறுப்பவர்கள் அனைவர்க்கும் அறிவிப்புச் செய்து அழைத்திருக்கிறார்கள் அந்த அழைப்பினை ஏற்று ஆத்திகர்களும் நாத்திகர்களும் அறிஞர்களும் ஆய்வாளர்களும் கேட்போர் அனைவரும் வந்து குழுமியிருந்து கேட்டிருக்கிறார்கள். நீறிட்ட அன்பரொடு யாவரும் காணவே என்னும் அடியால் நாத்திகம் பேசி நாத்தழும் பேறியோரும் அங்கிருந்தமை பெறப்படுகின்றது. நாத்திகர்கள் பிழையாக விளங்கிக் கொள்வார்கள் என்றோ அல்லது பட்டிமண்டப ஆய்வில் வெட்டிப்பேசப்படும் விடயங்களைத் தமக்கு சாதகமாக எடுத்துக் கொள்வார்கள் என்ற ஐயமோ அன்றிருக்கவில்லை. ஏனெனில் பட்டிமண்டபத்தீர்ப்பானது ஐயமகற்றி தெளிவு கொடுக்கும் தேற்றமாய் அமைந்திருந்தது,

> '' ஒட்டிய சமயத்து பொருள்வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறிய மையை''

திருவாசகத்திற்கு காலத்தால் முற்பட்டகாப்பியமான மணிமேகலையும், பன்னருங்கலை தெரிபட்டிமண்டபப்பயனை கம்பராமாயணமும் சுட்டிநிற்பது மனங்கொள்ள வேண்டியது.

சொற்பொழிவுக்குரிய நெறிமுறைகளைத் திருவள்ளுவர் சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் கூறுவார் அக்கூற்றில் சொற்போருக்கான அம்சங்களும் மேற்கிழம்புவதை அவதானிப்போர் கண்டு கொள்வர்.

> '' சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து''

என்னும் குறள் பட்டிமண்டபப் பேச்சாளர் கவனிக்க வேண்டிய வெல்லுஞ் சொல் பற்றியதும் பிறிதோர் சொல் பற்றியதுமாகும். பொழிவில் விழும் பலசொற்கள் போரில் விழுந்தால் வெல்லும் வாய்ப்பை இழக்க வேண்டிவரும் பட்டிமண்டபத்திற்கு பல சொல்லல் ஏற்புடையதன்று. மன்றமாசற்ற சில சொல்லிச் சிந்தனையைத் தூண்டுதலே வேண்டப்படுவது.

> '' பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சில சொல் [illegible]லல் தேற்றாதவர்.

என்பது பட்டிமண்டப விவாதப் பண்பினைக் கூறும் குறட்பாவாகும். பட்டிமண்டபப் பாங்கினை அறிதல் அவசியமானது. சொற்பொழிவுக்கு வேண்டிய அறிவு, வன்மை, நினைவு முதலியவற்றோடு சகிந்தலும் சாந்தமாய் எதிர் வழக்காடுதலும் தாங்கிக் கொள்வதும் தன் அணியினரைத் தூக்கலும் செ்ாற்போரின் இலக்கணங்களாகும். சொற்போரிலே அணிகளாகப் பிரிந்து வாதிட்டு பின்பு நடுவரின் தீர்ப்புக்காய் காத்திருக்கும் நிலையுண்டு· அணிகளாய்ப் பிரிந்து பேசும் போது கருத்துமோதலால் சொற்களில் சூடு கிளம்பும் கிளம்பிய சூட்டினைத் தணித்துக் கொள்ளும் மனோசக்தி சொற்போராணிக்கு இன்றியமையாதது. சபையிலே உள்ளவர்கள் சொற்போர் வீரனின் படிப்பையும் நினைவாற்றலையும் வாதிடும் வல்லமையையும் கவனிப்பதோடு சுடு சொற்களை எந்த அளவுக்கு ஆற்றி எதிரணியைச் சாடுகிறார் என்றும் கவனிப்பார்கள். நடுவரும் இக்கருத்தோடேயே கவனித்தல் வேண்டும். இதனால் விவாதம் சூடு பிடித்தலாகாது என்பதில்லை. விவாதம் இரும்பைச்சம்மட்டியால் அடிப்பதைப் போன்று தமிழ்ப்மொழிபறக்க நடக்க வேண்டும். அது நெருப்பாகி விடக்கூடாது.

> அவையறிந்தும் சுவையறிந்தும் கெம்பீரமாக வாதிடும்பட்டிமண்டப உரைகள் எதிரணியினரை உசாராக்கி சொற்போருக்குப் புறப்பட வைக்கக் கூடியகாய் அமைதல் வேண்டும். மனதைப் புண்படுத்தி சோர்வடைய வைத்தல் முறையாகாது. கண்டிக்கவும் கண்டிக்கப்படவும் தயாரான ஆரோக்கியம் இருக்கவேண்டும் பட்டிமண்டபப் போருக்குப் போகும் பேச்சாளர் உடலாரோக்கியம், மன ஆரோக்கியம் ஆகியவற்றோடு மொழியாரோக்கியம் உடையவராகவும் விளங்கவேண்டும்

அவையறிந்தும் சுவையறிந்தும் கெம்பீரமாக வாதிடும் பட்டி மண்டப உரைகள் எதிரணியினரை உஷாராக்கி சொற்போருக்குப் புறப்பட வைக்கக் கூடியதாய் அமைதல் வேண்டும். மனதைப் புண்படுத்தி சோர்வடைய வைத்தல் முறையாகாது. கண்டிக்கவும் கண்டிக்கப்படவும் தயாரான ஆரோக்கியம் இருக்கவேண்டும். பட்டிமண்டபப் போருக்குப் போகும் பேச்சாளர் உடலாரோக்கியம், மன ஆரோக்கியம் ஆகியவற்றோடு மொழியாரோக்கியம் உடையவராகவும் விளங்கவேண்டும். இம்மூன்று ஆரோக்கியங்களில் ஒன்று குறையினும் பட்டிமண்டபப் பாங்கில் நோய் தொட்டுவிடும். மற்போர் வீரனுக்குரிய உடல் உள ஆரோக்கியம் போல் சொற்போர் வீரனுக்கும் இவை இன்றியமையாதவை என்பதை பட்டிமண்டபப்பயிற்சியிலும் அனுபவத்திலும் அறியலாம். மொழியாரோக்கியம் என்பது என்ன? பேசும் பேச்சாளி தனது மொழியில் நிறைந்த சொற்களைத் தெரிந்து வைத்திருப்பதோடுஎந்தச்சொல்லை எப்போது விட்டு வெல்லலாம் என்ற சாதுரியமும் இடக்காரண சொற்கள் விவாதப் போக்கில் வெளிவராமல் அதனை அடக்கி பிறிதொரு சொல்லால் எதிரணியினரை மடக்கும் ஆரோக்கியமே மொழியாரோக்கியம் எனப்படும்.

தமிழாரோக்கியமில்லாத தமிழ்ச்சொற் போராளி களத்திலே தடுமாறி இடர்ப்பட்டு வெற்றிவாய்ப்பை இழக்கும் நிலைமைகளும் உண்டு. தமிழாரோக்கியக்குறைவால் பட்டிமண்டபப்போரை வேண்டப்படாத கலை என வியாக்கியானப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். பட்டிமண்டம் விவாதத்தை நெறிப்படுத்தி முடிவிலே தீர்ப்பு வழங்கும் நடுவர் கடமை பாரியது. விவாதிக்கும் அணிகள் எல்லைமீறாமலும் நேரக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கின்றனவா என்று கவனிப்பதும் நடுவர் கடமையில் முதன்மை பெறுகிறது. ஒருவரையொருவர் தனிப்பட்ட முறையில் தாக்கவும் இழித்தும் பழித்தும் கிண்டல் செய்யவும் நடுவர் அனுமதிக்கக் கூடாது. அப்படி நிகழும் நேரத்தில் அதனை இடைமறித்து நன்றின் பால் திருப்பி விடும் உரிமை நடுவருக்கு நிறைய உண்டு. பட்டிமண்டபச் சொற்போராளிக்கு வேண்டப்படும் தகுதிகளோடு நடுவருக்கு நிதானம் தெளிவு கூர்ந்து கவனிக்கும் நுண்ணறிவு முதலியவையும் தேவையே.

இன்றைய பட்டிமண்டப நடுவர்த்தீர்ப்புகள் பலவகையாக அமைகின்றன. பயன் கருதி இவ்வகைகள் வரவேற்கப்படுகின்றன. விவாத முடிவில் தீர்ப்பை மக்களிடமே விட்டு விடுவது ஒன்று. விவாதற்திறமையை கணக்கிலெடுத்து ஒரு அணிக்குத்தீர்ப்பு வழங்குவது மற்றொன்று. காலம் இடம் முதலியவற்றிற்குத் தேவையான சருத்துக்களுக்கு முக்கியவத்துவம் கொடுத்து தீர்ப்பு வழங்குவது இன்னொன்று.

பட்டிமண்டபச் சுற்றுப் போர் முடிந்ததும் நடுவர் இரு அணியினரின் விவாதமோதல்களையும் கருத்துத் தெளிவுகளையும் சுருக்கி அலசி ஆராய்ந்து தீர்ப்பு வழங்கிய பின்பு குழுமியிருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்கள் போரிட்ட அணியினரின் போக்கினைக் கவனிப்பார்கள். அவயுகள் நட்புணர்வுடன் கலந்து பேசுகிறார்களா? அல்லது பகையுணர்வுகளுடன் எட்ட எட்டப் போகிறார்களா? என்று பார்த்துக் கொண்டிருப்பர். இவர்களுடைய கண்களுக்கு தெரியும் வகையில் பட்டிமண்டபப் பேச்சாளர் தமக்குள் கலந்து கதைத்துச் சிரித்தபடி மேடையினின்றும் விலகவேண்டும்.

நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்கள் வாதிக்காகவும், பிரதிவாதிக்காகவும் சொற்போர் நிகழ்த்திச் சூடாகத் தாக்கிப் பேசிக்கொண்டாலும் விவாதம் முடிந்ததும் கைகுலுக்கி நேசமாய்க் கொண்டாடுவது போலே பட்டிமண்டபச்சொற்போர் வல்லாளரும் நடந்து கொள்ளவேண்டும். இதுவே சபைநாகரிகமாகும். தென் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பட்டிமண்டபக்கலை நன்கு வளர்ந்து தக்கோரால் பேணப்படுகின்றது. வித்துவமாய் வீரமாய் கெம்பீரமாய் பயன் மிக்கதாய் நடக்கும் பட்டிமண்டபங்களை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். அது நடக்கும் இடந்தேடி கூட்டம் கூட்டமாய் கூடுவர். ஈழத்திலே இரவு பன்னிரெண்டு மணிக்கும் மக்கள் விழித்திருந்து பட்டிமண்டபம் கேட்பது தமிழியலில் குறித்து வைத்திருக்க வேண்டிய செய்தியாகும்,

பட்டிமண்டபக் கலையில் வெற்றி பெறுவதற்கு சலியாத கடின உழைப்பே பிரதான வழி, (MAIN STREET) எனலாம். □

> o தன் லட்சியத்தை அடைகிறவன் அதன் பிறகு அதனைக் கடந்துசெல்கிறான்.
>
> o தன்னைப்பற்றியே ஒருவன் அதிகமாகப் பேசுவது தன்னையே மறைத்துக் கொள்வதற்கு ஒரு வழியாகவும் இருக்கலாம்,
>
> o பற்றின்மை வாதம் என்பது ஒரு விதச் சுயக் கொடுங்கோன்மை.
>
> - நியாட்சே

ஹைக்கூ

யோஷி' தொகுப்பு நூல்களில் காணப்படுகின்றன.

தங்கா, சோக்கா ஆகிய இரண்டு பாவகையும் இறுக்கம் வாய்ந்த தளர்ச்சி பெற்ற கவிதை வடிவங்களாகும். ஆயினும் இக்கவிதைகள் நமது

கின்ற பாதிப்பு இந்தக்கவிதை வடிவில் சாத்தியமாகிறது-

பெரும்பான்மையான ஹைக்கூ கவிதைகள் பருவகாலங்கள் பற்றியும், அதனால் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் கூறு




ஆட்களும் அவன் செய்ததின்ரை மிச்சத்தை செய்ய வேணும் கன காணியளின்டை எல்லைக் கல்லுகளைக்கூட தட்டிக் கொட்டி சமவெளியாக்கி வண்டிச் சவாரி வைச்சிருக்கினம்.''

''ஓமோம் தோட்டக் காணியாய்

# ஹைக்கூ கவிதைகள் — ஒரு நோக்கு

சார்லஸ்

யப்பானில் வடிவெடுத்து— — —
மிக நுட்பமாகவும், இறுக்கமாகவும் உள்ள ஹைக்கூ கவிதைகளின் தாக்கம் தற்போது உலகின் பலமொழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழில் ''ஹைக்கூ'' கவிதைகள் என்று சொல்லி எதை எதையோவெல்லாம் எழுதுகின்றார்கள். ஹைக்கூ கவிதைகள் பற்றிய சில அம்சங்களை விளக்குகின்றது இக்கட்டுரை.

பகுதி (1)

தமிழ் இலக்கியக் கவிதையுலகில் அண்மைக் காலத்தில் அறிமுகமாகி மிகப் பிரபலமாகி விட்ட ஹைக்கூவடிவம் மானிடர்களால் யதார்த்த பூர்வமாக உணரப்பட்டு வருகின்றது. இக் ஹைக்கூ கவிதைத் துறைக்கு புதுமையான படையலாகக் கருதப்படுகிறது.

தற்சமயம் ஜப்பானில் ஹைக்கூ கவிதைகளை மட்டும் வெளியிடுகின்ற பத்திரிகைகள் நாற்பதுக்கும் மேல் உள்ளதாக சொல்லப்படுகிறது. இவ்வகையில் ஹைறக்கூவின் பிறப்பிடத்திலேயே எத்தனையோ பத்திரிகைகள் ஹைக்கூ கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

ஒரு மொழியில் எழுந்த கவிதைகள் மற்ற மொழிகளில் பெயர்க்கப்படுவது வழமை தான். ஆனால் ஒரு மொழியின் ஹைக்கூ வடிவம் சர்வதேசம் பூராக புகழ் பெறுவது ஆச்சரியத்துக்குரியது. இத்தகைய அதிசயத்துக்குரியதே ஜப்பானிய 'ஹைக்கூ' ஆகும்.

ஹைக்கூ எவரையும் மயக்கக் கூடிய சக்தி படைத்தது. எவரையும் இலகுவில் படிக்கத் தூண்டும் அதன் சின்னஞ் சிறிய மூன்றடி வடிவம் மற்றையதொரு சிறப்பம்சம் ஆகும்.

பெரியதொரு தத்துவ யதார்த்தத்தை உட்பொதிந்திருக்கும் சிறியவடிவம், கவிதைக் கடுகு-ஹைக்கூ ஆகும்.

நண்டு வளர்ந்த ஆலவிருட்சத்தினை அடக்கிய விதையாக ஹைக்கூ காணப்படுகின்றது.

ஜப்பானிய சமூக வரலாற்றில் எட்டாம் நூற்றாண்டுக் கால கட்டத்தை 'நாரா காலம்' என்றழைப்பர். இக் காலகட்டத்திலேயே 'தங்கா' எனும் பாவகை செய்யுள் துறையில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. இக்கால கட்டத்தில் ஜப்பானில் தொகுக்கப்பட்ட 4500 செய்யுட்களில் பெரும்பான்மையானவை 'தங்கா' பாவகையைச் சார்ந்தவையாகும்.

'தங்கா' பாவகையானது, 7, 5, எனும் அசை அளவு5களைக் கொண்டது ஆகும். இவ் 5, 7, 5, தொடக்கஅசையாகவும், 7, 7, அசை இறுதியககவும் காணப்படும். தங்கா பாவகை போல் 'சோக்கா' பாவகையும் ஜப்பானில் இலக்கியத்தில் பிரபல்யமானதாகும்.

'சோக்கா' பாவகை 5,7,5,7 எனும் அசை முதற் கொண்டும், இறுதி அசை 7, 7, ஆசுவும் காணப்படும். இவ்வகையான சோக்கா, தங்கா பாவகைச் செய்யுட்கள் 'மன்

ளில் காணப்படுகின்றன.

தங்கா, சோக்கா ஆகிய இரண்டு பாவகையும் இறுக்கம் வாய்ந்த தளர்ச்சி பெற்ற கவிதை வடிவங்களாகும். ஆயினும் இக்கவிதைகள் நமது தமிழ் மரபுக் கவிதைகள் போல் நீண்டவையாகக் காணப்பட்டன. புதுக்கவிதை இலக்கிய உலகில் எவ்வாறு எழுச்சி பெற்றதோ அதே போல் வேகத்தில் விரைவாக ஜப்பானில் ஹைக்கூ கவிதைகள் தோற்றம் பெற்றன. தங்கா, சோக்கா கவிதைகளைவிட மிகக் குறுகிய வடிவத்தில், மிக நீண்ட அர்த்தங்களை உள்ளடக்கிய கவிதை வடிவமாக ஹைக்கூ பரிணாம வளர்ச்சி பெற்றது. 'தங்கா'வின் தொடக்கப் பகுதி தனியாக கவிதை உருவமாக ஜப்பானிய கவிதையில் பிரபல்யம் பெற்றதன் மூலம் ஹைறக்கூ மேலும் பிரசித்தி பெற்றது.

'தங்கா' பாவகையின் தொடக்க உருவமாகவும், 'ஜென்' மதத்தின் தத்துவ உள்ளடக்கமாகவும் ஒன்றிணைந்த நிலையில் 'ஹைக்கூ' தனித்துவம் மிக்கவை கவிதை வடிவமாக உருவெடுத்து அடையாளம் காட்டியது.

மென்மையான உணர்வுகள் உள்ள வாசகனுக்கு உலகில் எதுவுமே அற்பமானதல்ல என்கிறார் டாக்டர் யோன்சன். ஹைறக்கூ தினசரி வாழ்க்கையில் நாம் கவனிக்காதிருக்கும் அல்லது புறக்கணிக்கும் சாதாரண எளிய விடயங்களையே பாடுபொருளாகக் கொண்டதாகும்.

பதினொரு சீர்களைக் கொண்ட ஹைக்கூ ஒரு குறிப்பிட்ட மனநிலையைத் தோற்றுவிக்கிறது. வாசகர்கள் அல்லது கேட்பவரின் கற்பனையைத் தூண்டி விடுகிறது; நல்ல ஓவியம் ஏற்படுத்து வடிவில் சாத்தியமாகிறது-

பெரும்பான்மையான ஹைக்கூ கவிதைகள் பருவ காலங்கள் பற்றியும், அதனால் இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் கூறுகின்றன. பல ஹைறக்கூ தொகுப்புக்கள் பருவகாலங்களின் அடிப்படையிலேயே வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சில மலர்கள், மரங்கள், பறவைகள், பிராணிகள் இவையே திரும்பத் திரும்ப விபரிக்கப்படுகின்றன. சுயநலமின்மை, தனிமை, வருவதை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வது சொல்லைத் தவிர்ப்பது, அறிவுஜீவித்தன்மையை மறுப்பது, முரண்பாடு, நகைச்சுவை சுதந்திரம், அறநெறிக் கண்ணோட்டத்தை அவசியமற்ற தாக்கல், அன்பு, வீரம் ஆகியவை ஜென் மத்துடன் தொடர்புடைய ஹைக்கூவின் முக்கிய அம்சங்களாகும்.

'பிளித்' எனும் அறிஞர் ஹைக்கூ பற்றிக் கூறியிருப்பதை நாம்அவதானிக்கலாம். 'ஹைறக்கூ செய்யுள் அல்ல: இலக்கியமல்ல; அது நம்மைத் தட்டி அழைக்கும் கை; பாதி திறந்திருக்கும் கதவு; சுத்தமாகத் துடைக்கப்பட்ட கண்ணாடி; இயற்கையின்பால் கவனத்தை ஈர்க்கும் இலக்கிய வடிவம்; குளிர்கால மழையையும், பாலைப் பறவையையும், உஷ்ணமான பகலையும், நீண்ட இரவையும் நம்முள் உயிர்பெறச் செய்யும் உத்தி; பேசாமல் பேசி நம் மனிதாபிமானத்தில் பங்கு கொள்ளச் செய்யும் இலக்கியச் சாதனம்.

இலக்கிய வடிவங்களில் குறுகிய, அர்த்த புஷ்டியான ஹைக்கூ கவிதைகள், தமிழ் இலக்கிய உலகிலும் கிளை விட்டுப் பரந்துள்ளது,

உலக இலக்கிய வடிவங்களில் மிக இலகுவாக எவராலும் உணரப்படக் கூடிய கவிதை வடிவம் ஹைக்கூ ஒன்றே ஆகும். ஹைகூவில் குறியீடு இல்லை. அணி அலங்காரம் இல்லை ஆனால் நீண்ட அர்த்தங்கள் கொண்டிருப்பது ஹைக்கூ ஆகும். □

(தொடரும்)



# மதவடி..

□ படுவேகமாக ஓடும் மினி பஸ்கள்

□ தோட்டக்காணிகளில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மாட்டுவண்டில் சவாரிப் போட்டி.

□ மீண்டும் மேடைகளுக்கு வரும் பொப்பிசையும் ப்ரேக் டான்சும்.

''உந்த மினிபஸ் காரர் சில பேர் ஓடுற ஓட்டத்தைப் பற்றி எத்தினைதரம் திருப்பித் திருப்பிக் கதைச்சு என்னபிரயோசனம்.'' என்று கவலைப்பட்டான் விக்கி.

'' ஏன் விக்கி என்ன நடந்தது?' எனக்கேடடான் சவுந்திரம்.

''அண்டைக்கு கீரிமலைக்குப் போட்டு யாழ்ப்பாணம் வந்து கொண்டு இருக்கேக்க மருதனாமடச்சந்தி கடந்து கொஞ்ச இடத்தில் ஒரு அக்சிடன்ட்''

'' எந்த றோட்'' என்று தாடி மாமா கேட்க.

''மாமாவோடை கதைக்க வெளிக்கிட்டால் கடைசியில விசர்தான் பிடிக்கும். மருதனாமடம் எந்த றோட்டில இருக்கு கே. கே. எஸ் றோட்டில எண்டு தெரியாதே.''

'' சரி-சரி கோவிக்காமல் விசியத்தைச் சொல்லு.''

'' இரண்டு மினிபஸ் வலு ஸ்பீட்டாய் வந்து. ஒண்டை ஒண்டு ஓவரேக் பண்ணேக்க சைக்கிளிலை வந்த ஒரு ஆளை அடிச்சுப் போட்டுது. அடிபட்ட ஆளுக்கு மண்டை உடைஞ்சு பெரியகாயம்.,

''பெரிய அநியாயம்.''

''அநியாயமோ- மனிசர் றோட்டால போகேலாமல் இருக்கு. போட்டிபோட்டு ஓடுறம் எண்டு றோட்டல போற சனத்தைப்பற்றிக் கொஞ்சம் தன்னும் அக்கறையில்லை.''

'' உண்மைதான். ஆமிக்காரரின்டை துவக்குச் சூடு, செல், அடிக்கு சனம் செத்து முடிஞ்சு இப்ப தற்கொலையும் உப்பிடி வாகன விபத்துக்களுமாய் சனம் சாகுது.''

''உந்தமினி பஸ்சுகளையும், கண்மூடித்தனமாய் ஓடுற வாகனங்களையும் கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்காட்டி சனங்கள் தான் கஸ்டப்படப்போகுது.''

□

''மருதனாமடம் எண்டதுக்குப் பிறகுதான் எனக்கு ஞாபகம் வருகுது. மருதனாமடம் சந்தைக்குப் பின்னால் கனக்க தோட்டக்காணி இருக்குது தெரியுமே'' என்றான் தாடிமாமா.

''ஓமோம் கனகாலம் அந்தப் பக்கம் போய்.'' என்றான் விக்கி

''மருதனாமடம் சந்தியில ஐ. பி. கே. எவ். காம்ப் போட்டு இருக்கேக்க எக்கச்சக்கமான தோட்டக்காணியெல்லாம் நாசமாய்ப் போய் இருந்தது. பொயிலையாயும் வெங்காயமாயும் செம்மிப் போய் இருக்கிற தோட்டக்காணியில அவன்கடை செம்மறி ஆடுகளும் வாகனங்களும் ஓடித்திரிஞ்சுதுகள்.''

''உதெல்லாம் தெரியும். இப்ப ஏன் உந்தக்கதையெல்லாம்.''

''இல்லை. ஐ. பி. கே. எவ் இருக்கேக்க தோட்டக்காரர் கூட அந்தப் பக்கம் போகேலாமல் இருந்தது. இப்ப அவன்கள் போன பிறகு தான் தோட்டக்காரர் அந்தப்பக்கம் போகக் கூடியதாய் இருக்கு.''

''சரி நீ ஏதோ பெரிய கதை சொல்லப்போறாய் போலகிடக்கு

''அண்டைக்கு வருஷப் பிறப்புக்கு முதல் நாள் வெள்ளிக்கிழமை உடுவில் ஏ. ஜி. ஏ.ஒவ்பீஸ் ஆட்கள் ஒரு மாட்டு வண்டில் சவாரிப் போட்டி வைச்சவை.''

''ம்......''

''ஐ. பி. கே. எவ் காம்ப் போட்டதால தோட்டக்காரர் தோட்டம் செய்யாமல் விட்டிட்டினமே காணியல் அதிலைதான் வண்டில் சவாரி நடந்தது.''

''அதுக் கென்ன.''

''அதுக்கென்னவோ ஐ. பி. கே எவ் காரன் தான் அநியாயம் செய்தான் எண்டால் எங்கடை

மிச்சத்தை செய்ய வேணும் கன காணியளின்டை எல்லைக் கல்லுகளைக்கூட தட்டிக் கொட்டி சம வெளியாக்கி வண்டிச் சவாரி வைச்சிருக்கினம்.''

''ஓமோம் தோட்டக் காணியாய் இருந்த இடத்தில வண்டில் சவாரி வைக்கிற தெண்டால் எப்படி இருக்கும்.''

''உதை ஏன் பெரிசாய் கதைக்கிறாய் அப்ப ஐ. பி. கே. எவ் இருந்து தோட்டக் காணியை அநியாயம் செய்யேக்க காணிக்காரர் எங்கை போனவை. நீங்கள் எங்கைபோனனீங்கள்'' என்று கேட்ட தாடி மாமா மீது விக்கி பாய்ந்தான்.

'' நல்ல கதையாய் இருக்கு உங்கடைகதை அந்நிய தேசத்

**அயக்கிரீவன்**

தான் ஆக்கிரமிப்புக்கு வந்தவன் அநியாயம் செய்தான். அதுக்காக எங்கடை ஆட்களும் அதைச் செய்ய வேணுமே கடைசி காணிக்காரரோடை கதைச்சுப் போட்டு செய்திருக்கலாமே. அல்லது மாட்டு வண்டில் சவாரிப்போட்டி நடாத்த இடம் தான் இல்லையே.'

□

''இப்ப எல்லா இடமும் பாட்டும் கூத்தும் எண்டு ஒரே கும்மாளம் தான் நடக்குது'' என்றான் சவுந்திரம்.

''ஓமோம் எல்லா இடமும் இரவிரவாய் திருவிழா, அதுஇது எண்டு எல்லாக் கொண்டாட்டமும் நடக்குது.''

''இரவில நித்திரை முழிக்கிற நேரமெல்லாம் பாட்டுக் கேட்குது''

''உதெல்லாம் நல்லது தான் ஆனால் இருக்கிற சந்தர்ப்பங்களை பயன் படுத்திக் கொண்டு கண்டகண்ட சங்கதிகள் எல்லாம் வரப்பாக்குது.''

''என்னடாப்பா நீ சொல்லுறாய்.''

''இல்லை மேடைக்கு மேடை இப்ப பழையபடி பொப் பாட்டுக்கள், ப்ரேக் டான்சுகள் எண்டு குப்பாடி விசியங்கள் நடக்குது.''

''உதுகளை உப்பிடியே விடக் கூடாது''

''ஓமோம் சில ஆட்கள் ஏதோ கனவு உலகத்தில வாழுறதாய் நினைச்சுக் கொண்டு இருக்கினம். நாங்கள் கஷ்டப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையையும் இனி வாழப் போற வாழ்க்கையையும் மறந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மேற்கு ஜேர்மன் இணையுமா?

# வல்லரசுகளின் ஆதிக்கம் குறையுமா?

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாகப் பிரிந்திருந்த கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும் மீள ஒரே ஜேர்மனியாக்குவதில் உள்ள சாத்திய, அசாத்தியத் தன்மை பற்றிப் பேசப்பட்டு வருவது தற்போது கவனிக்கக் கூடியதாக உள்ளது.

கம்யூனிசக் கொள்கை கொண்ட கிழக்கு ஜேர்மனியும் முதலாளித்துவக் கொள்கைகளைக் கொண்ட மேற்கு ஜேர்மனியும் இணைந்துகொள்வது என்பது மிகவும் கடினமான விடயம் தான். ஆனாலும் இவ்விரு நாடுகளிலும் ஏனைய வல்லரசுகள் கொண்டுள்ள அழுத்தங்கள் காரணமாக இவ்விணைப்புப் பெரும் சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளது.

ஐக்கிய ஜேர்மனி என்றநாட்டைப் பற்றிச் சிந்திப்பது யார் என்ற கேள்வியே தற்போது தலை தூக்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## கிழக்கு,மேற்குஜேர்மனிகள்

1940 இன் நடுப்பகுதியில் ஹிட்லரின்சர்வாதிகார ஆட்சி முடிவைக்கண்டது. ஹிட்லரின் இராணுவத்தை ஐரோப்பிய நேச நாட்டுப் படைகளும், அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைகளும் மேற்குப்பகுதியில் வெற்றி கண்டன.

அதேபோல சோவியத் ரஷ்யாவின் மேற்கு ஜேர்மனியின் கிழக்குப் பகுதியில் முன்னேறி வெற்றி கண்டிருந்தன. இப் படைகள் தாம் அடைந்தவெற்றியைக் கொண்டாடியதுடன் அந்தந்தப் பகுதிகளில் தத்தமது ஆதிக்கத்தை ஸ்திரப் படுத்திக் கொண்டன.

இதனாலேயே ஒரே ஜேர்மனியாக இருந்த பெரும்நிலப் பரப்பு முற்றிலும் எதிரெதிரான கொள்கைகளைக் கொண்ட இரண்டு அரசுகளாகப் பிளவு கண்டது.

மேற்குப்பகுதியில் அமெரிக்க சார்புடைய முதலாளித்துவ நிர்வாக அமைப்பும், கிழக்கே சோவியத் ரஷ்யா சார்பான கம்யூனிச அரசும் ஸ்தாபிக்கப் பட்டது.

இவ்வாறு இரு எதிரெதிர் அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டதானது 2 ஆம் உலக யுத்த முடிவில் உலகம் இருபெரும் வல்லரசு அணிகளின்கீழ் வந்ததால் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கெதிராகச் சோவியத் யூனியன் கிழக்கு ஜேர்மன் ஊடாக ஏதாவது நடவடிக்கைகளிலிறங்குமானால் அதனை மேற்குஜேர்மனியைக்கொண்டு கட்டுப்படுத்தலாம். அதேபோல சோவியத்துக்கு எதிராக மேற்குஜேர்மன் ஊடாக அமெரிக்கா ஏதாவதுநடவடிக்கைகளில் இறங்குமானால் அதனைச் சோவியத் ரஷ்யா கிழக்கு ஜேர்மன் மூலமாகக் கட்டுப்படுத்தலாம்.

இதனால் இவ்விரு வல்லரசுகளுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளலாம். அத்துடன் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளை இரு வல்லரசுகளும் தத்தமது கொள்கைகளுக்கு ஒரு பாதுகாப்பு அரணாகவும் பாவிக்கலாம் என்பதே நோக்கமாகும்.

இவற்றுடன் மீண்டும் ஒருமித்த ஒரே ஜேர்மனியாக இதனை வளரவிடுமிடத்து மிக விரைவில் புனர் ஜென்மம் எடுத்து மாபெரும்வல்லரசாக மீண்டும் தோற்றமெடுக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இதனால் மீண்டும் தமக்குத் தொல்லை ஏற்படலாம் என்ற ஐயமும் இவ்விரு வல்லரசுகளுக்கும் இருந்தன.

இப் பிரிவை வலியுறுத்தும் முகமாக 1961ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பேர்லின் நகரை ஊடறுத்து ஒரு சுவர் கட்டப்பட்டது. இச் சுவர் கட்டப்பட்டதால் இரு ஜேர்மனிகளுக்கும் இடையில் அரசியல் ரீதியாகவும், இராணுவ, பொருளாதார ரீதியாகவும் பெரும் விரிசல்களை மேலும் வளர்த்தது.

## அண்மைக்காலமாற்றங்கள்

கிழக்குஜேர்மன் அரசு ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொடக்கம் மேற்கிலிருந்து பிரிந்து நிற்றல் என்ற கொள்கையைக் கடுமையயாகக் கடைப்பிடித்து வந்த போதிலும் சோவியத் ரஷ்யாவில் மிக்கெயில் கோர்பச்சேவ் ஜனாதிபதி பதவியை ஏற்றதும் சோவியத் நாட்டில் சில புதிய தளர்வுகளைக் கொண்டுவந்தது போலவே சோவியத்சார்பு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சில தளர்வுகளைக் கொண்டுவர முயற்சிகள் செய்ய அனுமதிக்கப்பட்டது. இதனால் மேற்கு நாடுகளுடன் நட்புறவுகளைச் சற்று அதிகரிக்க வழிவகை செய்யப் பட்டது.

இதன் முதற்படியாக கிழக்கு ஜேர்மன் ஜனாதிபதியாகவிருந்த எரிக்ஹொனேக்கர் 1987 ஆம் ஆண்டில் மேற்கு ஜேர்மனிக்கு விஜயம் செய்திருந்தார். அரசியல் தளர்வுக் கொள்கைகளை உணர்த்தக் கிழக்கு ஜேர்மனிய எதிர்க் கட்சிகள் தமது கருத்துக்களைத் தக்க தருணங்களில் வெளியிடத் தொடங்கின.

நாற்பது வருடங்களுக்கு மேலாக உறங்கிக்கொண்டிருந்த இந்த எதிர்க்கட்சிகளின் புதிய கருத்துக்கள் மக்களைக் கவரத் தொடங்கியது. இதனால் மக்கள் அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். பல ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனால் அரசுத் தலைவரே பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார். ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப் பட்டது. கிழக்கு ஜேர்மனின் வரலாற்றிலேயே இப்படியாக ஒரு தேர்தல் நடைபெற்றது. இதுவே முதல் தடவை.

தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றது ஜனநாயக கூட்டுக் கட்சிகள் வெற்றி பெற்றன. பேச்சுக்கள் மூலம் பல கட்சிகள் ஒன்று சேர்ந்தன. (கிறிஸ்தவ ஜனநாயக கூட்டணி லிபரல் கட்சி) இவை ஆட்சியும் அமைத்தன.

## இணைப்பது பற்றி...

தற்போது பதவியேற்றுள்ள அரசுக்கு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்து ஒரே ஜேர்மனி என்ற அமைப்பை உருவாக்குவது பற்றி பேச்சுக்கள் நடாத்தும் பொறுப்பு வந்துள்ளது.

ஆகவே ஜேர்மனிய மக்களின் எதிர்காலம்பற்றி சிந்திப்பதும் இம்மக்கள் இரண்டாம் உலகப் போருக்கு முந்திய காலகட்டத்தில் எவ்வாறு இருந்தார்களோ அவ்வாறு அவர்களை மீண்டும் ஒரு பெரிய சக்தி ஆக்குவதா இல்லையா என்பதுபற்றி இப் புதிய அரசு தீர்மானிக்க வேண்டிய கடமைப்பாட்டுக்கு உள்ளாகியிருக்கிறது.

ஆனால் இவ் இணைப்பு விவகாரத்தில் அந்தந்த நாடுகளின் செல்வாக்கிலும் பார்க்க வெளி வல்லரசுகளின் செல்வாக்குகளே அதிகமாக உள்ளது. மேற்கு ஜேர்மன் அரசைப் பொறுத்தவரையில் அது எக்காலத்திலும் கிழக்கு. ஜேர்மன் என்ற ஒரு அரசை ஆதரிக்கவில்லை.

அதேபோல் பேர்லின் துண்டாடப்பட்டதையும் ஆதரிக்கவில்லை. அண்மையில் கிழக்கு ஜேர்மனியில் ஏற்பட்ட அரசு மாற்றத்தை அது வரவேற்றதுடன் கிழக்கு ஜேர்மனியில் ஜனநாயகப் போக்குடைய புதிய அரசு அமைவதற்கு தன்னால் ஆன அனைத்தையும் செய்வதாக மேற்கு ஜேர்மன் கூறி இருந்தது.

இதன் நோக்கம் அமெரிக்க சார்புடைய நேட்டோ அணியிலிருந்து விலகி மீண்டும் ஒரு புதிய வல்லரசாக திகழ வழிவகுக்கும் என்பதாகும். ஆனால் இவ்வாறு நேட்டோ அணியிலிருந்து மேற்கு ஜேர்மன் விலகுவதை அமெரிக்கா சற்றும் விரும்பாது. எனவே தான் ஐரோப்பிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தனது வலக்கரமான இங்கிலாந்தின் துணையுடன் ஜேர்மன் இணைப்பது பற்றி எதிர்ப்பு தெரிவித்து வந்தது.

இதனையே பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்ரெட்தட்சரும் கடந்த பல வருடங்களாக வெளிக்காட்டி வந்துள்ளார். இதன் முழு நோக்கமும் கிழக்கு மேற்கு ஜேர்மனிகளை இணையவிடுமிடத்து உலகில் இன்னும் ஓர் பலம் பொருந்திய அரசு உருவாகிவிடும், ஐரோப்பிய அரசியலில் ஜேர்மனி என்ற பெரும் வல்லரசு முதன்மை பெறும்போது தமது ஆதிக்கமும் செல்வாக்கும் ஐரோப்பா பகுதியில் வெகுவாக குறைந்துவிடும் என்பதால்தான் திருமதி மாக்கிரட் தட்சர் அவர்கள் இந்த ஜேர்மன் ஒருங்கிணைவை எதிர்த்து வந்தார் என்பதை குறிப்பிடலாம்.

அண்மைக் காலமாக மேற்கு ஜேர்மன் நேட்டோ அணி நாடுகளுடன் சற்று ஒத்துழைக்காத போக்கை காட்டிவந்ததையும் இதனை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் நேரடியாகத் தலையிட்டு மேற்கு ஜேர்மனியை நேட்டோ இராணுவ கொள்கைகளுக்கு சம்மதிக்க வைத்தமையை இங்கு குறிப்பிடவேண்டும்.

ஆனால் ஜேர்மனி இணைவது பற்றி பிரிட்டன் அமெரிக்கா பிரான்ஸ் சோவியத் யூனியன் ஆகிய வல்லரசு நாடுகள் கூடி ஆலோசித்தே ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்று சோவியத் யூனியன் குறிப்பிட்டதுடன் ஐக்கிய ஜேர்மனி ஒரு பொழுதிலும் நேட்டோ அணியில்சேருவதை தாம் அனுமதிக்கமாட்டோம் எனவும் கூறிவிட்டது.

இருந்தும் கிழக்கு ஜேர்மனியில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்தஅரசியல் மாற்றத்தை சோவியத் யூனியன் வரவேற்றுள்ளது. தனக்கு அருகிலும் ஒரு மிகப்பெரிய வல்லரசு வருவதை சோவியத் யூனியன் என்றைக்கும் விரும்பாது.

இதனை இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் ஜேர்மனியால் அதற்கு ஏற்பட்ட அழிவுகளை சோவியத் யூனியன் என்றென்றும் மறக்க மாட்டாது என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எது எவ்வாறிருப்பினும் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் அரசுகள் இரண்டும் தாம் இணைந்து கொள்வதை விரும்புவது தற்போதுவெளிப்படையாக இணைப்பை ஆதரிக்கின்றது. அத்துடன் புதிதாக ஜனநாயக தேர்தல்கள் மூலம் பதவிக்குவந்து கிறிஸ்தவ ஜனநாயக கட்சி அரசும் இணைவுக்கு சாதகமான கருத்து வெளிப்பாடுகளையே கொண்டுள்ளது இவற்றுடன் மக்களும் தமது எழுச்சியின் மூலம் ஜனநாயக சுதந்திரங்களையும் இணைவையும் வலியுறுத்தி உள்ளனர்.

ஆகவே வல்லரசுகளின் புதிய நிபந்தனைகளால் பேச்சுக்கள் மூலம் இரு ஜேர்மனிகளும் ஓர் ஐக்கி[illegible] ஜேர்மனியாக மாறுவது பின் போடப்பட்டு வந்தாலும் என்றோஒரு நாள் ஏக ஜேர்மனி அமைவது நிச்சயமாக கூறக்கூடியதாக உள்ளது.

**லோகன்**

> ஜேர்மன் இணைப்பிற்கு இரு ஜேர்மனிய அரசுகளும் ஒத்துழைத்தமையானது இனிமேலும் வேறு அரசுகள் இணைவதற்கு ஓர் ஊன்றுகோலாசு அமையலாம். வியட்னாம், கொரியா போன்ற நாடுகள் இணைவதற்கு இவை வழி வகுக்கலாம். ஆனாலும் நேட்டோ,வார்சோ என்ற இரு அணிகளின் போட்டியின் மத்தியிலும் இவ்விரு அரசுகளும் இணைவதற்கு விரும்பியமை ஓர் முன்னுதாரணமேயாகும்.

## உலக அரசியல் நோக்கு

---

கோப்பாயில்

## ஆலமரத்தினால் ஆபத்து

(சுதுமலை)

கோப்பாய் வடக்கு நாற்சந்தியில் உள்ள பாரிய ஆலமரம் ஒன்று கடந்த காலங்களில் நடந்த ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகிப் பாதிப்படைந்துள்ளது. இந்த மரம் எந்தநேரத்திலும் விழும் அபாயம் உள்ளது. இதனால் இவ் வழியால் செல்லும் வாகனங்கள் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படலாம். இது பற்றிப் பொது மக்களும், கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கமும் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

எனவே இனியும் தாமதியாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மரத்தைத் தறித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். (19,

---

## மின்சாரக் கட்டணம் உயர்வு மக்கள் அக்கறையீனம்

(சுதுமலை)

மின்சாரக் கட்டணம் 1.4.90 தொடக்கம் அதிகரிக்கப்பட் [illegible]

இப்படியான நிலுவைகளால் எமது பிரதேசசபை பெரும்தொகை பணத்தை [illegible]

## அமைச்சர்களும் எம். பிக்களும் இனிமேல் செல்வந்தர்களாக வாமுடியாது

இன்னொரு நாட்டில் போதைவஸ்து கடத்தலுக்கு முக்கிய மானவர் அமைச்சர் [illegible]

## இளைஞர்களின் முயற்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு மத்திய சனசமூ கநிலையநெசவுசாலையையும் வாசிக சாலையையும் [illegible]

(சுதுமலை)

மின்சாரக் கட்டணம் 1.4.90 தொடக்கம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக எரிபொருள் மின் சக்தி அமைச்சினால் சகல பிரதேச சபைகளுக்கும் சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன.

இதுபற்றி நல்லூர் பிரதேச சபை நிர்வாக அதிகாரி திரு சி. சந்திரசேகரம் தகவல் தருகையில்பொதுமக்கள் பலர் இப்படியான மின் கட்டண அதிகரிப்பைப்பற்றி கவனத்தில் கொள்வதில்லை. கண்டபடி மின்சாரத்தை பயன்படுத்தி பெருந்தொகையான பணம் எமது சபைக்கு செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இப்படியான நிலுவைகளால் எமது பிரதேசசபை பெரும்தொகை பணத்தை மின்சாரசபைக்கு செலுத்தாமல் நிலுவையாக இருக்கிறது இதைவிட சட்டவிரோத மின் பாவனையாலும் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே பொதுமக்கள் மின் கட்டண அதிகரிப்பை கவனத்தில் கொண்டு மின்சார உபயோகத்தை கட்டுப்படுத்தி சிக்கனமான முறையில் மின்சாரத்தை பாவிக்கும் படியும், சட்டவிரோத மின்பாவனையாளர்கள் தமது மின்பாவனையை உடனடியாக நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கிறார் (19)

# கிராம சேவையாளரின் சேவை மிகவும் முக்கியமானது

(நீர்வேலி)

கிராமசேவையாளர்களின் சேவை மிகவும் முக்கியமானது. அதனால்தான் கிராமசேவை அலுவலர் பிரிவுகளை அதிகரிக்கச் செய்து, கூடுதலான கிராமசேவை அலுவலர்களை சேவைக்கமர்த்தியுள்ளது அரசாங்கம். எனவே கிராமசேவையாளர்கள் தமது பணியைப் புனிதமாகவும், இன, மத, சாதி, பேத மற்ற முறையில் செய்யவேண்டுமெனவும் நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவில் முன்றலில் நீர்வேலி வடக்கு கிராம சேவை அலுவலர் காரியாலயத்தை திறந்து வைத்துப் பேசிய கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் சி. முருகேசபிள்ளை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்யலாம். முன்னர் போல் கச்சேரிக்கு அலைய வேண்டியதில்லையெனவும் குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ கு. தியாகராசசர்மா த. பரராஜசிங்கம் ஆகியோரும் பேசினர். கிராமசேவையாளர் இ. தவராசா நன்றியுரை கூறினார்.

## புதிய மேடை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் உற்சவ காலங்களின்போதும் வேறு விசேட தினங்களின் போதும் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு இவ்வாலயத்தின் முன்றலில் புதிதாக மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தற்காலிகமாக அமைக்கும்மேடைகளிலே தான் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வந்தன. தற்போது அமைக்கப்பட்ட புதிய மேடையால் நீண்ட காலமாக இருந்து வந்த குறை நீங்கியுள்ளதால் அடியார்களும், ஆலயதர்மகர்த்தா சபையினரும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர். (22)

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு

# செல்வந்தர்களாக வரமுடியாது

அரசியல்வாதிகள் சில காலங்களால் பெரும் செல்வந்தர்களாக வருவது நமது நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இருந்துவருகிறது. ஓய்வு பெற்ற பின்னர் தமது வாழ்க்கைக்கு உதவ எதையும் தேட வேண்டும்தானே.

ஒரு அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவரை வேறொரு அரசாங்கம் பதவியேற்றதும் மோசடி, கள்ளக்கடத்தல், சுவிஸ் வங்கியில் கணக்குஎன்று பல்வேறு குற்றச் சாட்டுக்களால் அவரை குற்றவாளியாக்கிவிடுவது இன்று நமது நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நடைபெறுகின்றன.

நமது நாட்டில் இன்று பல முன்னாள் எம். பிக்கள் முன்னாள் அமைச்சர்கள் கொழும்பில் வீடுகள் வாங்கியுள்ளனர். தோட்டம், ஹோட்டல், வாகனங்கள் இப்படியாக பலவற்றின் உரிமையாளராகவும் இவர்கள் இருக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் ஒருவர் பல மினிபஸ்களை நடாத்துகிறாராம். மற்றொரு முன்னாள் அமைச்சர் ஹொட்டல் ஒன்றின் பங்காளியாக இருக்கிறாராம். இவர்கள் மோசடி கடத்தல் மூலமாகவே இப்படி வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திருமதிஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின்போது நிதியமைச்சராக இருந்ததிரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மீது ஐக்கிய தேசியக் கட்சி 1977இல் பதவிக்கு வந்ததும் இவ்வாறு மோசடி குற்றச்சாட்டை சுமத்தியது.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிற்கு சொந்தமான கோழிப்பண்ணைக்கு அரச செலவில் உணவுப்பொருள் வாங்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப் பட்டது. அத்துடன் அவரது மனைவிக்கு லண்டனில் வாங்கிய பொருட்கள் குறித்தும் விசாரணையில் பல தகவல்கள் வெளியாகின.

அதேபோல1970இல்திருமதி பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோதும் குற்றவியல் நீதி ஆணைக்குழு என்ற விசாரணைக்குழுவில் முன்னாள் கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்கா மற்றும் சில யூ என். பி அரசியல்வாதிகள், செல்வந்தர்கள்மீது அந்நியச் செலவாணி மோசடி என்று விசாரணை நடைபெற்றன.

இதில் அவர்கள் அந்நியச் செலவாணி மோசடிகளை நடாத்திய விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. சொத்துக்கள் பறிமுதல் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேபோலவே யூ. என்.பி அரசில் பலகாலம் நிதியமைச்சராகவிருந்த றொனிடீமெல் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நிதியமைச்சராக இருந்தபோது அவர் வெளிநாடுகளுக்கு அடிக்கடி போய் வருவார். அதனால் அவர் மோசடி செய்தார் என்று இன்றும் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அமைச்சர்களும் அரசியல்வாதிகள் எம். பிக்கள் திடீரென செல்வந்தர்களாவது எப்படி என்பது எல்லோருக்குமே தெரியும். ஜனாதிபதி பிரேமதாஸா இதனை முடிவுக்கு கொண்டுவரவே இவர்களுக்கும் சுங்கப்பரிசோதனை அறிமுகம் செய்துள்ளனர்.

ஒரு நிதியமைச்சர் வெளிநாடு செல்லும்போது அவரைச் சோதனையிடும் சுங்கப் பகுதி அவரது அமைச்சுக்கு கீழேயே பணிபுரிகிறது எப்படி அவரைச் சோதனையிடும்?

நிதியமைச்சர் மட்டுமன்றி ஏனைய அமைச்சர்களையும் எம். பிக்களையும் சுங்கச் சோதனை நடாத்த அவர்கள் முன்வருவார்களா? தமதுபதவி போகும் இட[illegible]றறம் கிடைக்கும் என்ற அச்சம் நீங்கி அவர்கள் தமது கடமைகளைச் செய்வார்களா?

ஜனாதிபதி இதில் தலையிட்டுள்ளதால் அவர்கள்இனி யாருக்கும் பயப்படாமல் தமது கடமைகளைச் செய்வார்கள் என்றே தோன்றுகிறது.

**ரூபன்**

தற்போது சுங்கச்சோதனைகளில் பல தொழில் நுட்பங்களை (கம்பியுட்டர்கள்) அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. சூட்கேசின் உள்ளே இருப்பவற்றை வெளியே பார்க்குமளவுக்கு இந்த தொழில் நுட்பம் வந்துள்ளது. அதனால் சுங்கச் சோதனையில் பிரச்சினைகள் இல்லை.

ஜனாதிபதியின் இந்த விதிகள் பல எம்.பிக்கள் அமைச்சர்களுக்கு பெரியதலையிடியாகிவிட்டது.

அமைச்சர்கள் மூலமாக சில கள்ளக்கடத்தல்கள் அமெரிக்க நாடொன்றில் நடை பெற்றுள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இன்னொரு நாட்டில் போதைவஸ்து கடத்தலுக்கு முக்கிய மானவர் அமைச்சர் ஒருவர் என்றும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்தப் புதிய திட்டத்தால் எதிர்காலத்தில் அமைச்சர்கள் எம்.பிக்கள்வெளி நாடுகளுக்கு போய்வரும்போது ஒரு பிஸ்னஸ்' செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை எப்போதோ அறிமுகப்படுத்தியிருந்தால் பலஅரசியல் வாதிகள் இன்று செல்வந்தர்களாக வந்திருக்க முடியாது.

### மேதினம்

இம்முறை மேதினக்கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாகவே நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளது. வழமை போல எல்லோரும் தொழிலாளரின் நலன் குறித்துப் பேசியுள்ளனர்.

அண்மைக்காலங்களில் இடம் பெற்ற நாட்டு நிலமைகளால் பலருக்கு வேலையில்லை பல தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இவற்றைப் பற்றி எவரும் பேசியதாகத் தெரியவில்லை.

முன்னைய மே தினங்களில் ஒருவரை ஒருவர் தாக்கி பேசுவார்கள். சீனி வேண்டாம், இரண்டு கொத்து அரிசி வேண்டாம் போன்ற கோரிக்கையைக்காண முடியவில்லை.

ஐக்கிய தேசியகட்சிமேதின கூட்டத்துக்குஅதிகமாகமக்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதி பிரேமதாஸவின் அண்மைக்கால நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆதரவு தருகிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

ஆனால் எல்லாக் கூட்டங்களிலும் நாட்டின் இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு காண வேண்டும் என்று எவருமே ஒரு வசனமும் தெரிவிக்க வில்லை.

திருமதி பண்டாரநாயக்காவும் ஜனாதிபதியின் சில திட்டங்களை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கும் என ஐ.தே. கட்சி வாக்குறுதியளித்துள்ளது தொழிலாளர்களுக்கு ஒருஇனிமையான செய்திதான்.

புங்குடுதீவு கிழக்கு மத்திய சனசமூகநிலையநெசவுசாலையையும் வாசிக சாலையையும் மீண்டும் பயன் படுத்துவதற்கு இப்பகுதிஇளைஞர்கள்முயற்சி எடுத்துவருகின்றனர்.

பயன் பாடில்லாமல் வீணே கிடக்கும் இவ்விரு நிலையங்களையும் திருத்தியமைத்து மக்களுக்கு பயன்படக்கூடியவாறு அமைப்பதற்கு இளைஞர்கள் மேற் கொள்ளவுள்ள முயற்சிகள்இம்மாதமுடிவிற்குள்ஆரம்பிக்கப்படும் எனத்தெரிகிறது.

இவ்விரு நிலையங்களிலுமிருந்ததளபாடங்கள்பலகாணாமல் போய்,விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (22)

## 11வருடத்தின்பின் 29 ஆவதுவருடாந்த பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் 29 ஆவது வருடாந்தப்பொதுக் கூட்டம்மேமாதம் 21 ஆம்திகதியாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெறஉள்ளது.

'பலஆண்டுகளாகச்சாதனைகள்பலபுரிந்து சரித்திரம்கண்ட எமதுஇச்சங்கம் அரசியல்கடும் போக்கினாலும் அரசியல் நெருக்கடிகளினாலும் கடந்த பதினொரு ஆண்டுகளாகச் செயற்பட முடியாதிருந்ததை அனைவரும்அறிவர்.

இன்று பொது நிர்வாக அமைச்சுசுற்றறிக்கைஇலக்கம் 2/90இன்மூலம்தொழிற்சங்கங்களுக்கு விதிக்கப் பட்டிருந்த முழுத்தடைகளும் நீக்கப்பட்டுள்ளன. (24)

ஈழநாதம்

# கட்டைக் காற்சட்டை அணிந்தவர் ஜயதிஸ்ஸா தலையில் வெட்டினார்

(கிளிநொச்சி)

கடந்த திங்கட்கிழமை இரவு மீசாலை ரயில் நிலையத்தில் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஜயதிஸ்ஸாவின் (25வயது) மரண விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி பதில் நீதவான் திரு. எஸ் அருள் நாயகம் மேற்படி மரண விசாரணையை மேற்கொண்டார். கொலை செய்யப்பட்டவரோடு அதேரயிலில் பிரயாணம் செய்த மூன்று பொலிசாரும், பொதுமக்களும் சாட்சியமளித்தனர். அவர்களது சாட்சியத்தில் கூறப்பட்டதாவது-

இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஜயதிஸ்ஸா வறக்கப் பொலையைச் சேர்ந்தவர். இவர் 1987ம் ஆண்டு பொலிஸ் சேவையில் சேர்ந்தார்.

சம்பவதினமான (30.4.90) திங்கட்கிழமை மாலை 28 பொலிசாரும், 10 இராணுவத்தினரும் யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகி ரயிலில் தென்பகுதிக்குச் சென்று கொண்டிருந்தோம். மீசாலை ரயில் நிலையத்தில் இரவு தபால் ரயில் நிறுத்தப்பட்டது. ரயில் புறப்படும் நேரம் திடீரென துப்பா[illegible] வெடிச் சத்தம் கேட்ட[illegible]ப்பக்கமிருந்து வெடிச்ச[illegible] கேட்டது என்பது எமக்குத் தெரியாது.

நாங்கள் சிற்றுண்டி வண்டிக்குள் ஓடிப் பதுங்கிக் கொண்டோம். அப்போது ஜயதிஸ்ஸ சூட்டுக் காயத்துடன் சிற்றுண்டி வண்டி ஒடைக்குள் ஓடி வந்தார், கட்டைக்காற்சட்டையும், வெனியனும் அணிந்த ஒருவர் ரயிலுக்குள் ஏறி ஜயதிஸ்ஸவின் தலையில் வெட்டினார். அதன் பின் தனியார் வாகனத்தில் அவரை ஏற்றிக் கொண்டு கிளிநொச்சிக்கு வந்தோம், அவர் திருமணமாகாதவர் என்றனர்.

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் இராசலிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார். மாவட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

அவரது சொந்த ஊரான வறக் காப்பொலவிற்கு ஜயதிஸ்ஸாவின் உடல் ஹெலிக்கொப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

# இந்திய பிரஜைகள் பிரச்சினையை ஒரிஸா தமிழர் பிரச்சினையுடன் ஒப்பிடக்கூடாது

(கொழும்பு)

நாட்டில் எஞ்சியிருக்கும் இந்தியப் பிரஜைகளை அவர்களது தாயகத்துக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் தற்பொழுது நாட்டில் அமுலிலிருக்கும்சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறுவாராந்தஅமைச்சரவைக் கூட்டத்தினைத் தொடர்ந்து நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரஞ்சன் விஜயரட்னா தெரிவித்தார். மேலும் அவர் கருத்துத் [illegible]விக்கையில் திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டுமென வும் இந்தியா அதன் கடப்பாடுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் இவ்விடயத்தில் இலங்கையின் போக்கை இந்தியா அவதானித்துக் கொண்டிருக்குமெனவும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்காக அரசாங்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்குமெனக் கூறிய திரு. விஜயரட்னா, விரும்பிய எவரும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு முன்வரலாமெனவும் தெரிவித்தார். இந்த விடயம் இலங்கைத் தொழிலாளர் சங்கத்



துடன் தொடர்புடைய விடயம் அல்ல எனவும், முழுமையாகவே நாட்டின் குடிவரவுச் சட்டங்களோடு தொடர்பான விடயம் எனவும் திரு. விஜயரட்னா மேலும் தெரிவித்தார்.

பெருந்தோட்ட பிரதேசங்களில் சனத்தொகை கூடுதலாக அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவித்தஅமைச்சர் விஜயரட்னா இப்பிரச்சினையை ஒரிசாவிலுள்ள இலங்கை அகதிகள் விவகாரத்தோடு தவறாக ஒப்பிடல் கூடாது எனக் கூறினார். அகதிகள் விடயம் பிரத்தியேகமானது என அவர் குறிப்பிட்டார். அகதிகள் தாம் விரும்பியபோது இலங்கைக்குத் திரும்பி வரலாம். அவர்களை அங்கு செல்லுமாறு எவரும் கூறவில்லை. அவர்கள் தாமாகவே அங்கு சென்றார்கள். இந்தியாவும் அவர்களை ஏற்றுக்கொண்டது.

இதுபற்றி இலங்கை எதனையும் செய்யமுடியாது என அமைச்சர் விஜயரட்னா கூறியபோது, திரும்பி வரும் அகதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுமா? என அவரிடம் கேட்கப்பட்டது.

-ரஞ்சன்

அதற்கு அமைச்சர், அவர்களுக்கு சகலபாதுகாப்பும்வழங்கப்படுமெனப் பதிலளித்தார். கிளர்ச்சிவாத நடவடிக்கைகளின் காரணமாக 1984ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்ட இலங்கை இந்திய கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பித்தல் பற்றி அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## யாழ். மாவட்ட

# ஓய்வூதியக்காரர் பிரச்சினை; அதிகாரிகள் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ஓய்வூதியதாரருக்கு உரியநேரத்தில் ஓய்வூதியம்வழங்கப்படவேண்டும். ஓய்வூதியத்துக்கு என அனுப்பப்படும் நிதி யாழ் செயலகத்துக்கு உரிய நேரத்தில் வந்தடைய வேண்டும். 17500க்கும் மேற்பட்ட யாழ்மாவட்ட ஓய்வூதியர்களுக்கு போதுமான நிதி மாதாந்தம் அனுப்பி வைக்கப்பட வேண்

தாமதமாவதால் எமது பிரதேச ஓய்வூதியர்களுக்கு உரிய காலத்தில் ஓய்வூதியம் வழங்க முடியாதுள்ளது. ஒவ்வொரு முறையும் எமது உத்தியோகஸ்தர்களை கொழும்புக்கு அனுப்[illegible]ய நாம் பெற்றுக் கொள்ள வேண்டியதாக உள்ளது என்றும் அவர் கூறியதுடன் இனிமேல் விரைவாக இந்நிதி வந்தடைவதற்கு ஏற்ற வழிமுறைகளைப் பற்றி

# ஒதுக்கப்படும் நிதி முற்றாகப் பயன்படுத்த வேண்டும்

(கிளிநொச்சி)

அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதி எதுவும் எக்காரணம் கொண்டும் திரும்பிச் செல்ல அனுமதிக்கக் கூடாது. கிடைக்கும் நிதியைப் பாவித்து இம் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளை உடனுக்குடன் செய்து முடிக்கவேண்டும்.

கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்ற அபிவிருத்தி சம்பந்தமான மகாநாட்டில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு.ப.மூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டிம் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயாவின் பிரதிநிதியாக மாம்பழம் சுரேசும், மக்கள் முன்னணியின் கிளிநொச்சி அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் தொடர்பாளருமான திரு. எம்.ஜி.சிவபாதம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம்,

பொறியியலாளர்கள், உயர் அதிகாரிகள், கட்டிட ஒப்பந்தகாரர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. மூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

கடந்த பல வருடங்களாக எமது மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடாது, அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக விடுதலைப் புலிகளான நாம், எம்மாலான அனைத்தையும் செய்வோம். அதிகாரிகளான நீங்கள் பொது மக்கள் பாதிக்கப்படாது கடமை செய்யவேண்டும்.

தமிழ் ஈழத்தில் ஊழல், லஞ்சம், மோசடி என்பது துளியளவேனும் இருக்கக் கூடாது. அதற்காகத்தான் நாம் சகல விடயங்களிலும் தலையிடுகிறோம். லஞ்சம், ஊழல், மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகள் பயமின்றித் தமது வாகனங்களில் சென்று கடமைகளைச் சரிவரச் செய்யலாம். எவரும்

## வம்சாவளியினர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கையில், மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் உடன்பாடு கைச்சாத்தானதென்றும்,இது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறாமல், பெருந்தோட்டத் தொழிலாளர்களை இத்தியாவுக்கு அனுப்புவது தவறானது என்றும், இப்பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுக வேண்டும் என்றார்.

மொத்தம் எவ்வளவுபேர் இந்தியா திரும்பத் தயாராகவுள்ளனர் என்பதுபற்றி தமக்குத் தெரியாது என்றும் ஸ்ரீமாவோ-சாஸ்திரி உடன்படிக்கையின் பிறகு சிலர் மிஞ்சி இருப்பதாகவும், இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் சிலர் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

நிலமையை அளவிடுவதற்கு அயல்நாடான இந்தியாவுடன் புதிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றார் செல்லச்சாமி.

## ஈ. பி. ஆர். எல். எவ்.

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

விடயத்திலும் இதேபோக்கு

## ஆரோக்கிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் ஆயுதப் போராட்டத்தின்மூலம் ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டு வர முடியாது இதற்கு சமூகத்தின் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து தமது பங்களிப்பை செலுத்தும்பொழுது தான் சமூகத்தில் பூரண மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்றார். அத்துடன் சமூகத்தில் நிலவும் பழமை வாய்ந்த சிந்தனைகள், சமூக மாற்றத்திற்கு தடையாக இருக்கக் கூடிய கலாசார தடைகள், கோட்பாட்டுத் தடைகள் இப்படிப்பட்டவற்றைக் களைவதன் மூலம் ஒரு முழுமையான புதுமையான சமூகத்தை உருவாக்க முடியும் இதற்கு உங்கள் எல்லோருடைய பங்களிப்பும் மிக அவசியம் எனவும் கூறினார்.

இக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் இந்தியப் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட யுத்தம் பற்றியும் அதன் பின்னணிகள் பற்றியும் அதற்குப் பின்னர் இலங்கை அரசுடன் நடத்தி

## பயிலுநர் ஆசிரியர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

முன்னர் அறிவித்ததன் படி 25,000 பயிலுநர் ஆசிரியர்களுக்கு மே மாதம் 5-ம் 6-ம் திகதிகளில் திசை கோட்படுத்தற் பயிற்சி நெறி நடைபெற இருக்கின்றது.

இதில் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களும் ஆசிரியர்களும் இதனை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட நிலையத்தில் சமுகமளிக்கும் படி கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் வேண்டுகின்றார்.

திற்கும் மத்தியிலான பிரச்சினையும்; போராட்டவேளையில் பல விமர்சனக் கட்டுரை வெளிவந்ததாகவும்குறிப்பாக இந்த பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற சிலர் மிகவும் திறமையான முறையில் எழுதியிருப்பதாகவும் பாராட்டிப் பேசினார்

மேலும் அவர் பேசுகையில் எமது பேச்சு வார்த்தையில் ஆறாவது திருத்தச் சட்டமூலத்தை நீக்குவதற்கு இலங்கைஅரசிற்கு மூன்றில் இரண்டு பங்குபலம் தேவை ஆனால் இதற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பும்அரசிற்குதேவை எமது உரிமைகளை எதிர் கட்சிகளும் அங்கீகரித்தால் தான் இச்சட்ட மூலத்தை நீக்கமுடியும் இன்றும் கூட பேரினவாதம் நிலை நாட்டப்படுகிறதா அல்லது தமிழரின் உரிமைகள் மதிக்கப்படுகிறதா என்பது அவர்களின் முடிவில்தான் தங்கியுள்ளது இது எமக்கு கிடைத்த சந்தர்ப்பம் என்பதை விட அவர்களிற்கு எம்மால் கொ

ஒய்வூதியர்களுக்கு போதுமான நிதி மாதாந்தம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இப்படியான எந்த ஒரு பிரச்சினையும் இனிமேல் இருக்கக்கூடாது, ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுக்களை நடாத்துவதற்காக யாழ் செயலகத்திலிருந்து செயலக அதிகாரிகள் கொழும்புக்குச் சென்றுள்ளனர். இவர்கள் இன்று யாழ்ப்பாணம் திரும்பியதும் இப்பேச்சுவார்த்தை பற்றிய விபரங்களைத் தெரிவிப்பர் என ஒய்வூதியப்பகுதி கணக்காளர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் இவ்விடயம் பற்றிக்கூறும் பொழுது ஒவ்வொருமாதமும் எமக்கு ஒய்வூதிய நிதி வருவதற்குதுடன் இனிமேல் விரைவாக இந்நிதி வந்தடைவதற்கு ஏற்ற வழிமுறைகளைப் பற்றி ஆராய்வதற்கே எமது அதிகாரிகளை அனுப்பி உள்ளோம்.

இன்று செயலகத்திற்குத் திரும்பும் அதிகாரிகள் கூடவே இம்மாத ஓய்வூதிய நிதியைப் பெற்று வந்தால் இம்மாதம் ஏழாம் திகதி ஓய்வூதியங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். நிதியை இவ்வதிகாரிகள் கொண்டுவராவிட்டால் ஓரிரு தினங்கள் பிந்தலாம் எனவும் அவர் தெரிவித்தார். (லேர

## கிளிநொச்சி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் கடந்த காலபோக நெல்விளைச்சலும் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. நோயின் தாக்கத்தினால் விளைவு குறைவாகவே இருந்தது. அதனால் நெல்லின் விலை 500 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லின் விலை உயர்வால் அரிசி விலையும் அதிகரித்துள்ளது. 1 கிலோ அரிசி 11-50 சதத்திற்கு மேல் உள்ளது இதனால் வறியமக்கள் கஷ்டப் படுகிறார்கள். (49)

## முருகண்டி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டை கிடந்ததாகவும் அப்பெண் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனறும் அவர் சிலரால் மானபங்கப் படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாமெனவும் தெரிவித்தனர்.

## கட்டுநாயக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. சுங்க இலாகா கடத்தல் குற்றம் ஒன்றைத் கண்டுபிடித்ததும், உடனடியாக விசேட பொலிஸ் பிரிவு விசாரணையைத் தொடரும்.

குற்றவியல் புலனாய்வுப் பொலிஸ் கடமையேற்றதும் முதல் வேலையாக ரூபா 200, 000 பெறுமதியான தங்கத்தை சென்னைக்கு கடத்திச்செல்ல முயன்ற ஒரு பிரயாணியைக் கையும்மெய்யுமாக பிடித்துள்ளது.

கடத்தல்காரரர், போலிப் பாஸ்போட்காரர்பற்றிபொது மக்கள் தகவல் தரலாமென்றும், தகவல் தந்தவர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும் என்று பொலிஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## யாழ்

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களிடம் பேச்சுக் கொடுத்தாலே சண்டைக்கு வருவதாகவும் அதனால் தாம் எதுவித நடவடிக்கையும் செய்ய முடியாதுள்ளதாக ஊழியர்கள் கூறினர்.

மான திரு. எம்.ஜி.சிவபாதம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா மற்றும்

றித் தமது வாகனங்களில் சென்று கடமைகளைச் சரிவரச் செய்யலாம். எவரும் வாகனங்களைப் பறிக்க மாட்டார்கள் என்றார். (49)



## வடக்கில் ராணுவம்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

களின்போது மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதிக்குப் பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் சிலர் சென்று கொண்டிருந்தபோது அவர்களை இடைமறித்து விடுதலைப் புலிகள் விசாரித்த போது இரு இராணுவத்தினர் எந்தவித அவசியமுமில்லாமல் வடமராட்சிப் பகுதிக்குச் சென்றதாகத் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுக்கள் பற்றி யாழ் மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. ஜெயராயிடம் கேட்டபோது, ''தமிழ்த்தேசிய இராணுவத்தினரும் விரும்பத்காததவர்களும் இராணுவத்துக்குள்ளும் பொலிசுக்குள்ளும் ஊடுருவி இருப்பதாகச் சந்தேகப்படுவதால் இராணுவம் பொலிஸின் நடமாட்டம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது'' என்றார்.

## மாகாண

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தேடிய 300 பேர்களில் வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் அவரது குடும்பமும் அடங்கும்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினரின் மனைவி புஸ்பா சுதாகர் (வயது 22) இந்து பத்திரிகைக்குப் பின்வருமாறு தெரிவித்தார்.

எம்மால் இலங்கையில் இருக்க முடியவில்லை. அதனால் அங்கிருந்து வெளியேறினோம். எம்மை ஒரிஸாவுக்கு மூட்டை முடிச்சுகளுடன் அனுப்பினார்கள் ஒரிஸா அகதி முகாம்களில் நிலைமை மோசமாக இருந்தமையால் அங்கிருந்து வெளியேறி ஆறு நாட்களுக்கு முன்பதாக இங்கு வந்ததும், எனது கணவனைப் பிடித்து ஜெயிலுக்குள் தள்ளியுள்ளார்கள். என்று திருமதி சுதாகர் ஆத்திரத்துடன்கேட்டார்

## ஈ. பி. ஆர். எல். எவ்.

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

விடயத்திலும் இதேபோக்கு கடைப்பிடிக்கப்படுமா; என்ற வினாவுக்குப் பதிலளித்த அமைச்சர் திரு. விஜயரட்னா சட்டம் சகலருக்கும் பொதுவானது என அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. விஜயரெட்னா, ஜப்பானிய பிரதம மந்திரியின் இலங்கை விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நல்லெண்ணம் மேலும் வலுப்பெறும் எனக் கூறினார் நாட்டின் பொருளாதார நிலை சீரடைந்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், ஜனாதிபதி எதிர்பார்க்கும் மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீத வளர்ச்சி விகிதத்தை எட்டிப் பிடிக்கலாம் எனவும் கூறினார்.

## மெய்வல்லுனர்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி

யாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அவரின் பாரியார் வெற்றியீட்டியதற்கான பரிசில்களை வழங்குவார். நாளை ஊழியர்களுக்கான போட்டி நடைபெறவுள்ளது. இதற்குத் தொழிற்சாலை முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். அவரின் பாரியார் பரிசில்கள் வழங்குவார்.

## நுண்கலை...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது. திராவிட பாரம் பரியங்களை சித்தரிக்கும் வகையில் இக் கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மருதனாமடத்தில் அமைந்திருக்கும் இக்கட்டிடத்தின் நிர்மாண செலவுகளை பல்கலைகழக மானியக் குழு ஏற்கனவே வழங்கியுள்ளது.

இடையே ஏற்பட்ட யுத்தம் பற்றியும் அதன் பின்னணிகள் பற்றியும் அதற்குப் பின்னர் இலங்கை அரசுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் இன்றைய அரசியல் சூழ்நிலை என்பனபற்றியும் விரிவாக எடுத்து விளக்கினார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்தியா சம்சம்பந்தமாகவும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை சம்மந்தமாகவும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும்இடையேயான உறவுபற்றியும் இந்தியா - தமிழீழ விடுதலைப் போராட்டத்

படுகிறதா என்பது அவர்களின் முடிவில்தான் தங்கியுள்ளது இது எமக்கு கிடைத்த சந்தர்ப்பம் என்பதை விட அவர்களிற்கு எம்மால் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகத் தான் கருதுகின்றோம்என்றார்

இக்கருத்தரங்கிற்கு மறுமலர்ச்சிக் கழகப் பொறுப்பாளர்திரு வே.அருணோதயம் (அருண்) தலைமை வகித்தார் மேற்படி கருத்தரங்கில் திருமதி அடல் பாலசிங்கம் ''விடுதலைப்புலிகள்'' பத்திரிகைப் பொறுப்பாளர் திரு.ரவி ஆகியோரும் கலந்துகொண்டனர்


UNIVERSAL
FOR GOD AND COUNTRY

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான

O/L

பகல் முழுநேர வகுப்புகள்

DAY CLASSES

ஆரம்பம்

9-5-90 காலை 8-30 மணி

(B/858)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டுக் மே மாதம் -04 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.